# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு





**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா**

**அவர்களின் வழியில்**

**நிலையான ஆட்சி - நிரந்தர வளர்ச்சி**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

**தலைமையிலான அரசின்**

**100 நாள் சாதனைகள்**

# தமிழரசு

**தமிழ்நாடு அரசு**
**செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்**
**வெளியீடு**

மாண்புமிகு புரட்சித்தலைவி
**அம்மா** அவர்களின் வழியில் செயல்படும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்
அரசின் 100 நாள் சாதனைகள்
சிறப்பு வெளியீடு எண்.10 – மே 2017

ஆசிரியர் - வெளியிடுபவர் :
**ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
**சி. செல்வராஜ்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
**அ. மகேஸ்வரி**
**த. தெய்வானை**
**த. ஷேக் முகமது**

உதவி ஆசிரியர்கள் :
**ச. மஞ்சுளா**
**மு. மோகனவல்லி**
**ப. பேச்சிமுத்து**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**

கணினி வடிவமைப்பு :
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

இதழ் உதவியாளர் :
**நி. ஷீலா**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
**கோ. சந்திரசேகர்**

வடிவமைப்பாளர் :
**கோ. முரளி கிருஷ்ணன்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542221 / 22542224**
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in


"தமிழக அரசு மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குண்டான திட்டங்களைத் தீட்டி, மக்கள் வாழ்வு வளம் பெறவும், மக்கள் நலன் பேணி பாதுகாக்கவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது."

– மாண்புமிகு புரட்சித்தலைவி
**அம்மா** அவர்கள்

## இந்த இதழில்....


- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை....1
- வேளாண்மைத்துறை....2
- கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை....9
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை....16
- வணிக வரி மற்றும் பதிவுத்துறை....17
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை....18
- எரிசக்தித்துறை....20
- சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை....21
- நிதித்துறை....25
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை....26
- மக்கள்நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை....29
- உயர்கல்வித்துறை....32
- நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை....35
- உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை....37
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை....47
- தொழில்துறை....50
- தகவல் தொழில்நுட்பவியல்துறை....52
- தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை....57
- சட்டத்துறை....63
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை....64
- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை....67
- பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை....74
- திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்துறை....75
- பொதுத்துறை....78
- பொதுப்பணித்துறை....80
- வருவாய்த்துறை....85
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை....89
- பள்ளிக்கல்வித்துறை....94
- சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை....97
- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை....98
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறை....101
- போக்குவரத்துத்துறை....106
- மாற்றுத் திறனாளிகள் நலத்துறை....107
- இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை....108



மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
திரு. **சிஎச். வித்யாசாகர்ராவ்** அவர்கள்
16.02.2017 அன்று ஆளுநர் மாளிகையில்
திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களுக்கு
தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவி பிரமாணமும்,
ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

முதலமைச்சராக பதவியேற்றவுடன்

முதலில் கையெழுத்திட்ட 5 முக்கியத் திட்டங்கள்



- வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு 50 சதவீத மானியத்தில் “அம்மா” இருசக்கர வாகனத்திட்டம்!
- டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவி ரூ.12 ஆயிரத்திலிருந்து ரூ.18 ஆயிரமாக உயர்வு!
- தனி வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், ரூ.85 கோடி செலவில் மீனவர்களுக்கு 5,000 வீடுகள்!
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகை இரண்டு மடங்கு உயர்வு!
- மதுவிலக்கை படிப்படியாக அமல்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் மேலும் 500 மதுபானக் கடைகள் மூடல்!

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை




- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா திட்டத்தின் கீழ் பயன் பெற ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.72,000/– ஆக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ரூ.6.60 இலட்சம் செலவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் மூலம் வன்கொடுமை தடுப்பு குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி அளிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு தரமான கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில், பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கி கல்வி பயிலும் வகையில், ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு உறைவிட மாதிரிப் பள்ளிகள் (Model Residential School) ஆசிரியர் குடியிருப்புகளுடன் ரூ.24 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.
- ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை செயல்படுத்திட 7 மாவட்டங்களில் திட்ட அலுவலகங்களை திட்ட அலுவலர் மற்றும் இதர பணியாளர்கள் பதவிகளுடன் தோற்றுவிக்கப்பட்டன.

❖ ❖ ❖

> *“மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பதவியேற்ற முதல் நாளிலேயே 5 சிறப்புத் திட்டங்களுக்கான கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன்.”*
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> **திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

# வேளாண்மைத் துறை



- தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தலைமையின் கீழ் வேளாண்மையில் நவீன மற்றும் உயர் மகசூல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, உணவு தானிய உற்பத்தியில் அதிக சாதனை அடைந்தமைக்காக தமிழக அரசு பல்வேறு விருதுகளை பெற்றுள்ளது.

- மண் ஆய்வின்படி உரமிடுவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கவும் உரச்செலவை குறைத்திடும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் மண்வள அட்டை வழங்கும் திட்டத்தின் கீழ் 11,93,207 மண் வள அட்டைகள் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 96,000 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பயறு வகை உற்பத்தி பெருக்கத்திற்கு சுமார் ரூ.24.205 கோடி செலவில் விதை உற்பத்தி மற்றும் விதை விநியோகம், மானிய விலையில் விவசாய இயந்திரங்கள் விநியோகம், முக்கிய இடுபொருட்களான நுண்ணூட்டச்சத்து, ஜிப்சம் மற்றும் பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் போன்ற பல்வேறு இனங்களில் பயறுவகைகள் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளன. 2017–2018ஆம் ஆண்டில் பயறுவகை பெருக்கு திட்டமானது, சுமார் ரூ.61.11 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதுவரை ரூ.20.56 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது,

- பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்படும் திட்டத்தின் கீழ், 1,681 எக்டர் அளவில் ரூ.25.214 இலட்சம் செலவில் பசுந்தாள் உரம் பயிரிடப்பட்டு மண்வளம் மேம்படுத்தப்பட்டுள்ளது,

- நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் – மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் வேளாண்மைபயிர் திட்டம் சார்ந்த ஒருங்கிணைந்த பண்ணையம் 2,310 எக்டரில் இரண்டாம் போக பயிர்களுக்கு இடுபொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1,799 கறவை மாடுகள் மற்றும் 512 ஆடுகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது. 160 பயிற்சிகள், 86 நிரந்தர மண்புழு கட்டமைப்புகள்,

88 அடர் திற பாலித்தீன் மண்புழு கட்டமைப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. ரூ.6.576 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- எண்ணெய் வித்துக்களில் இயந்திரமாக்குதல் திட்டத்தின் கீழ் விதைக்கும் கருவியைக் கொண்டு பயறு வகைகளை ஊடு பயிராக நடவு செய்தல் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் பரவலாக்க, ரூ.1.587 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 15,870 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- தரமான சான்றுபெற்ற விதைகள் விவசாயிகளுக்கு வழங்கிடும் வகையில், தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை வாயிலாக 6,392 மெ.டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 1,885 மெ.டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

- விவசாயிகளுக்கு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகள் தொடர்பான புதிய தொழில்நுட்பங்களை அளிப்பதற்கென விவசாயிகளுக்கான 6 மாநில அளவிலான கற்றறிவு பயணங்கள் ரூ.2.400 இலட்சம் நிதி செலவினத்திலும், 11 மாவட்ட அளவிலான கற்றறிவு பயணங்கள் ரூ.1.100 இலட்சம் நிதி செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு, 850 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- 2016–2017ஆம் ஆண்டில், பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், காப்பீட்டு கட்டணத்தில் மாநில அரசின் பங்கு தொகையாக ரூ.15.295 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டது. சேலம், திருப்பூர், நாமக்கல், திருச்சி, கரூர், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10,129 விவசாயிகளுக்கு, காப்பீட்டு நிறுவனங்களால் இதுவரை 13.34 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- 2017–2018ஆம் ஆண்டில், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், காப்பீட்டுக் கட்டணத்தில் மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.522.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்த சாகுபடி பரப்பில் 40 சதவீத பரப்பளவில் காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- வேளாண் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு திட்டத்தின் மூலம் ரூ.306.812 இலட்சம் மதிப்பிலான மானிய உதவிகளை அம்மா பண்ணை மகளிர் குழு உறுப்பினர்கள் பெற்று பயனடைந்துள்ளனர்.

- வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்மை விற்பனை, வேளாண்மை பொறியியல் மற்றும் விதைச்சான்று போன்ற துறைகளின் சேவைகளை ஒரே இடத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கத்தில், 146 வட்டாரங்களில் தலா ரூ.150 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 37 வட்டாரங்களில் இம்மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

- திருப்பூர் மாவட்டத்தில் புதிய மண் பரிசோதனை நிலையம் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது,

- ஈரோடு மற்றும் திருநெல்வேலியில் மண் பரிசோதனை நிலையத்திற்கான கட்டிடங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தலா ரூ.60 இலட்சம் வீதம் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

- தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 4.50 இலட்சம் தென்னங்கன்றுகள் ரூ.96.87 இலட்சம் மானியத்தில் 20,121 தென்னை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

- தென்னை விவசாயிகள் மற்றும் தென்னை உற்பத்தியாளர்கள் சங்கங்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் தென்னையிலிருந்து "நீரா பானம்" உற்பத்தி செய்ய அனுமதி அளிக்க அரசு கொள்கை முடிவெடுத்துள்ளது.

- தென்னந்தோப்புகளில் சிவப்பு கூன்வண்டின் தாக்குதலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில், 10,000 எக்டேர் பரப்பில் 7590 விவசாயிகளுக்கு ரூ.79.23 லட்சம் செலவில் இனக்கவர்ச்சிப் பொறிகளும் அதற்கான மருந்தும் வழங்கப்பட்டன.

- மானாவாரி விவசாயிகளின் நிலையான வருமானத்திற்காக நான்கு ஆண்டுகளில் ரூ.802.9 கோடி மதிப்பீட்டில் தொகுப்புக்கு 1,000 எக்டர் வீதம் 1,000 மானாவாரி தொகுப்புகள் அமைத்து, நீர் சேகரிப்பு அமைப்புகள், நில மேம்பாட்டு பணிகள், மதிப்புக்கூட்டுதல், வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடும் மையங்கள் மற்றும் கால்நடை நலத்திற்கான சேவைகள் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, அரசு, நீடித்த மானாவாரி விவசாயித்திற்கான இயக்கம் என்ற சிறப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

## தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

### பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம்

- இத்திட்டமானது தமிழகத்தில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 2016ஆம் ஆண்டு காரீப் பருவத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2016–2017ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 48,777 விவசாயிகள் பயன் பெறும் வகையில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களான மஞ்சள், வாழை, மரவள்ளி, உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் மிளகாய் பயிரிடப்பட்ட 81,314.5 ஏக்கருக்கு தமிழக அரசின் மானியத் தொகையாக ரூ.7.13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### வறட்சி நிவாரணப் பணிகள்

- தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட, தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட பரப்பளவான 1,63,695.09 ஹெக்டரில் இடுபொருள் நிவாரணத் தொகையாக ரூ.196.89 கோடி நிதி 3,27,398 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

- நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கதிட்டத்தின் கீழ் மானாவாரி பகுதி மேம்பாடு திட்டத்தின் மூலம் ரூ.6.3677 கோடி மதிப்பில் 1,297 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை சார்ந்த பண்ணையமுறை, 26,000 சதுரமீட்டரில் பசுமைக் குடில்கள், 520 எண்கள் மண்புழு உரஉற்பத்திக் கூடங்கள் மற்றும் 1,014 எண்கள் மண்புழு உர படுக்கையும் அமைப்பதற்கு ஊக்குவிக்கப்பட்டது.

### தேசிய தோட்டக்கலை இயக்கம்

- தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் கீழ் ரூ.5.11 கோடி செலவினத்தில் பசுமை குடில்கள் 1,10,070 ச.மீட்டர் பரப்பிலும், நிழல்வலை குடில்கள் 18,000 ச.மீட்டர் பரப்பிலும் பாதுகாக்கப்பட்ட முறைகளில் தோட்டக்கலைப் பயிர்களில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.1.78 கோடி செலவினத்தில் தோட்டக்கலைப் பயிர்களில் புதிய பரப்பு விரிவாக்கம் 151 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.
- ரூ.1.05 கோடி செலவினத்தில் 73 அலகுகள் அறுவடை பின்செய் நேர்த்தி கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.
- ரூ.18.6 இலட்சம் செலவினத்தில் 129 எண்கள் தோட்டக்கலைப் பண்ணை இயந்திரங்கள் வழங்கப்பட்டது.
- உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்த மாவட்ட அளவிலான 8 கருத்தரங்கங்கள் ரூ.16 இலட்சம் செலவினத்தில் நடத்தப்பட்டது இதன்மூலம் 2,500 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- தோட்டக்கலை பயிர்களில் உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை பின்பற்றிட 2 செயல்விளக்கத் திடல்கள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டது.

### நுண்ணீர் பாசனத் திட்டம்

- பிரதம மந்திரியின் விவசாயத் திட்டத்திற்கான நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் கடந்த 100 நாட்களில் நுண்ணீர் பாசனத் திட்டமானது 24,694.21 எக்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டு ரூ.136.47 கோடி மானியம் விடுவிக்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 29,624 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

### தேசிய ஆயுஷ் இயக்கம் – மருத்துவப் பயிர்கள்

- இத்திட்டத்தின்கீழ் மாநில ஆயூஷ் சொசைட்டி மூலம் மருந்து கூர்க்கன், கண்வலி கிழங்கு, நெல்லி போன்ற மருத்துவ பயிர்கள் ரூ.2.527 கோடி செலவினத்தில் 960.05 எக்டர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

### தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கம்

- இத்திட்டம் ரூ.0.187 கோடி செலவினத்தில் 288.4 எக்டர் பரப்பில் மூங்கில் தோட்டங்கள் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

### அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் / பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் (இலக்கு மற்றும் சாதனை விவரம் )

- அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 40 இலட்ச எண்கள் நடவுப்பொருள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.10.42 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- அரசு தோட்டக்கலை பண்ணை நவீனப்படுத்துதல், கொய்மலர் மற்றும் காய்கறி மகத்துவமையப் பணிகள், பூங்காக்களை அழகுப்படுத்துதல் முதலான 17 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுள் மூன்று பணிகள் முடிக்கப்பட்டு ரூ.173 இலட்சம் சாதனை அடையப்பட்டுள்ளது. 19 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் விதை உற்பத்தி தேவைக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள ரூ.2,076.570 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.



### வேளாண்மை பொறியியல் துறை

- 1,918 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விவசாயிகள் வாங்குவதற்கு ரூபாய் 16 கோடியே 6 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- வேளாண்மை பணிகளை குறித்த காலத்தில் மேற்கொள்ளும் பொருட்டு உரிய வேளாண் இயந்திரங்களை விவசாய குழுக்கள், தொழில்முனைவோர், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள், விவசாயிகள் போன்றவற்றோர் மூலம் தேவைப்படும் விவசாயப் பெருமக்களுக்கு வாடகைக்கு வழங்கும் வகையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. 114 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் மையங்கள் ரூபாய் 11 கோடியே 39 இலட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- சூரிய சக்தியால் இயங்கும் 355 பம்புசெட்டுகள் ரூபாய் 6 கோடியே 57ஆயிரம் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- நான்கு சூரிய கூடார உலர்த்திகள் ரூபாய் 7 இலட்சத்து 94 ஆயிரம் மானியத்தில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது.
- எட்டு பாசனத்திட்ட பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 14 கோடியே 60 இலட்சம் செலவில் 2,912 எக்டர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர்வடி மேலாண்மை பணிகள் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேக்கங்களில் வண்டல் மண்படிவதை தடுக்க உலக வங்கி நிதி உதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத்திட்டம் கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 18 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் 100 மீட்டர் நீளத்திற்கு ஓடை பாதுகாப்புப் பணிகள், 9 மண்வளப் பாதுகாப்பு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 20 நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூபாய் 80 இலட்சத்து 41 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் 321 பண்ணைக் குட்டைகள் ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.
- பிரதம மந்திரி வேளாண் நீர்பாசன திட்டத்தின் (ஒரு துளி நீரில் அதிக விளைச்சல்) கீழ் 335 நீர்சேகரிப்பு கட்டுமானங்கள் ரூபாய் 8 கோடியே 49 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.
- அதிக குதிரை திறன் கொண்ட 50 டிராக்டர்கள் மற்றும் அதற்கான இணைப்பு கருவிகள் மற்றும் 10 சுழல் விசைத் துளைக் கருவிகள் ஆகியவை ரூபாய் 20 கோடியே 67 இலட்சம் செலவில் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.




- வளம் குன்றிய நிலங்களை விளைச்சல் நிலங்களாக மாற்றி விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்துடன் களர் மற்றும் உவர் நிலங்களின் தன்மையை சரிசெய்திட கடலூர் மாவட்டத்தில் வடிகால் வசதியை மேம்படுத்தும் பணிகள் 50 எக்டர் நிலப்பரப்பில் ரூபாய் 9 இலட்சத்து 79 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் மானாவாரி நில சாகுபடியினை மேம்படுத்துவதற்கு நீடித்த நிலையானமானாவாரி நில சாகுபடி இயக்க திட்டம், 25 மானாவாரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2017–18ஆம் ஆண்டில், 200 தொகுப்புகளில் மானாவாரி நிலங்களில், ரூ.12 கோடியே 50 இலட்சம் செலவில் கோடை உழவுப் பணிகள் மேற்கொள்ளப்பபட்டு வருகின்றது. ரூ.25 கோடி செலவில் மானாவாரி நிலங்களில் நுழைவு கட்டபணிகளான தடுப்பணைகள், சமுதாய குட்டைகள், கசிவுநீர் குட்டைகள், கிராமக்குட்டைகள் ஆகிய நீர் சேமிப்பு கட்டமைப்புகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. ரூ.16 கோடி மானியத்தில் கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் அமைக்கப்படஉள்ளது.

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்பு கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடம், கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் நறுமணப் பொருட்களுக்கான வணிக வளாகம் உள்ளிட்ட ரூ.26.84 கோடி மதிப்பிலான 23 சந்தை உட்கட்டமைப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.
- சந்தை உட்கட்டமைப்பு வசதிகள், மஞ்சள், மிளகாய் மற்றும் பருத்திக்கான தர ஆய்வு, அறுவடை பின்செய் மேலாண்மை உபகரணங்கள் ரூ.9.25 கோடி மதிப்பில் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.
- உழவர் உற்பத்தியாளர் அமைப்பு ஏற்படுத்துவதற்கான நிதி ரூ.1.55 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.
- மித வறண்ட பயிர்களுக்கான சர்வதேச ஆராய்ச்சி நிலையம் மூலம் தமிழகத்தில் காய்கறி மற்றும் பழங்களில் சந்தை ஒருங்கிணைப்பு ஏற்படுத்திட மேம்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டுதலுக்கான வழிமுறை மற்றும் முடிவு எடுப்பதற்கான உதவி அமைப்பு உருவாக்குவது குறித்து ஆய்வு ரூ. 89.20 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ள அனுமதியளித்தது.
- இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி விற்பனைக்குழுகளுக்கு மகேந்திரா பொலிரோ வாகனம் புதிய வாங்கிட ரூ.14.51 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

## விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத் துறை

**விதைச் சான்றளிப்பு :**

- விதைப் பண்ணைகள் 8,060 எக்டர் பரப்பளவில், பல்வேறு பயிர்களில் பதிவு செய்யப்பட்டு, 14,617 மெட்ரிக் டன் அளவு விதைகளுக்கு சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**விதைத் தரக்கட்டுப்பாடு :**

- விதை விற்பனை மையங்களில் 17,860 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைத் தரங்களை உறுதி செய்திட 13,694 விதை மாதிரிகள்

எடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுகளின்போது, விதை விதிகளை மீறிய செயல்களுக்காக 216 மெ.டன் விதைகள் தரக்குறைவு எனக் கண்டறியப்பட்டு வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

**விதைப் பரிசோதனை :**

- தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக விதைத் தரங்களைப் பரிசோதித்திட 14,737 விதை மாதிரிகள் பரிசோதித்து முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி :**

- இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலம் விதை உற்பத்தி, விதைச்சான்று மற்றும் விதைச்சட்ட அமுலாக்கத்தில் உள்ள நவீன உத்திகள் குறித்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை சாகுபடியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி இக்கால கட்டத்தில் 4,251 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்துவைக்கப்பட்ட கட்டுமானப் பணிகள்**

- தேசிய தரக்கட்டுப்பாடு அளவீட்டு ஆய்வகம் கோயம்புத்தூரில் ரூ.4.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- கோயம்புத்தூரில் பூச்சிகள் அருங்காட்சியகம் ரூ.2.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- கோயம்புத்தூரில் கூடுதல் விரிவுரை அரங்கம் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- கோயம்புத்தூரில் முதுநிலை விரிவுரை அரங்கம் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- கோயம்புத்தூரில் வளம் குன்றா அங்கக வேளாண்மை ஆய்வுக்கூடம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.
- கோயம்புத்தூரில் பல்நோக்கு ஊடக ஆய்வகம் ரூ.0.53 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்ட கட்டுமானப் பணிகள்**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணாக்கர் தங்கும் விடுதி கோயம்புத்தூரில் ரூ.13.23 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நவீன சமையல்அறை மற்றும் உணவுக்கூடம் நபார்டு வங்கி நிதியில் ரூ.3.95 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கோயம்புத்தூரில் ரைசோட்ரான் ஆய்வகக்கூடம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. கோயம்புத்தூரில் திசு வளர்ப்பு கூடம் ரூ.0.20 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கோயம்புத்தூரில் மூலக்கூறு இனப்பெருக்க மகத்துவமைய ஆய்வுக்கூடம் ரூ.0.50 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கோயம்புத்தூரில் மூலக்கூறு இனப்பெருக்க மகத்துவமைய நவீன மரபியல் ஆய்வுக்கூடம் ரூ.0.70 கோடி மதிப்பீட்டில் கட்ட ஒப்பளிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாணவர்கள் வசதிகளுக்கான உள்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி வசதிகள்:**

- குடுமியான்மலை, ஈச்சங்கோட்டை மற்றும் வாழவச்சனூர் ஆகிய இடங்களில் புதிதாக தொடங்கப்பட்ட மூன்று வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு மேசை, நாற்காலி, ஆய்வக உபகரணங்கள் மற்றும் தொடரா செலவினங்களுக்காக ரூ.14.40 கோடி அரசு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**விருதுகள்:**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இந்திய பல்கலைக் கழகங்களில் 17ஆவது இடமும் இந்தியாவில் உள்ள அனைத்து கல்வி நிறுவனங்களில் 28ஆவது இடமும் தர வரிசை பட்டியலில் உள்ளதாக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தேசிய நிறுவனங்கள் தரவரிசை சட்ட அமைப்பின் அடிப்படையில் அறிவித்துள்ளது.
- சிறந்த எண்ணெய் வித்துப் பயிர்கள் முன்னிலை செயல் விளக்கங்களுக்கான விருதினை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கடலூர் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு 18.02.2017 அன்று வழங்கியது.



**தமிழக அரசின் புதுமை நிதித் திட்டங்கள்:**

- பணிச்சூழலை மேம்படுத்துவதன் வாயிலாக பண்ணையில் பணிபுரியும் மகளிரின் வேலைப் பளுவை மட்டுப்படுத்துதல் குறித்த திட்டத்திற்கு ரூ.1.77 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் செம்மண் பாங்கான பகுதிகளுக்கு ஏற்ற மாதிரி ஒருங்கிணைந்த அங்கக மேய்ச்சல் நிலக் காடுகளை செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நிறுவுவதற்கு ரூ.1.97 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டட்டுள்ளது.

## தமிழ் நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

- தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசனத்திட்டம் – நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் (முன்னால் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்) கீழ் ரூ.62.30 கோடி, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகளுக்கு விடுவிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- 627 பண்ணைக்குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- 1,200 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- 312 கசிவுநீர் குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது.
- 697 ஊரணி உருவாக்கப்பட்டுள்ளது.
- 346 அமிழ்வு நீர் குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது
- 2,251 எக்டர் பரப்பரளவு சாகுபடி நிலம் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- 710 தூர்ந்த கிணறுகள் மழை நீர் சேகரிப்பு அமைப்பாக செறிவூட்டப்பட்டுள்ளது.
- 725 எக்டர் பரப்பரளவில் பயிர் செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- 787 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதி ரூ.185.630 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- நிலமற்ற தொழிலாளர்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு பணிக்காக ரூ.762.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- நபார்டு மூலமாக செயல்படுத்தும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.580 இலட்சம் நிதி மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் NGO-க்களுக்கு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

❖ ❖ ❖

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை




**தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை**

- வறட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் ரூ.26.91 கோடி நிதி பெறப்பட்டு மாநிலம் முழுவதும் 300 உலர் தீவன கிடங்குகள் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் 16,468 MT உலர் தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு மானிய விலையில் ஒரு கிலோ ரூ.2/–க்கு 1,48,634 விவசாயிகளின் 6,13,687 கால்நடைகள் பயன் பெறும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 15,000 ஏக்கர் விவசாயிகளின் நிலங்கள் வறட்சி தாங்கக்கூடிய குறுகிய கால சோளம் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் 13,766 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- கால்நடைகளின் உற்பத்தி மற்றும் இனவிருத்தி திறன் மேம்பட 168 மெட்ரிக் டன் தாது உப்புக்கலவை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

- **நபார்டு RIDF XXII 2016-2017:** தமிழ்நாடு அரசு, நபார்டு RIDF XXII திட்டத்தின் கீழ் ரூ.68.1408 கோடி ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தில் 2016–2017 ஆண்டிற்கு நிதி இசைவாணை கீழ்க்கண்ட பணிகளுக்கு வழங்கியுள்ளது.

- 115 கால்நடை மருந்தக நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல் – ரூ.28.9206 கோடி மதிப்பீட்டில் உபகரணங்கள் மற்றும் அறையணிகளுடன், 113 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 2 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளுக்கு புதிய கட்டிடம் கட்டுதல்.

- அடைப்பான் நோய் தடுப்பு மருந்து ஆய்வகத்தை சிறந்த ஆய்வக நடைமுறைகள் தரத்திற்கு ரூ.36.6572 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேம்படுத்தவும்,

- ரூ.2.5630 கோடி நிதி ஒதுக்கீட்டில், பல்லடத்தில் கோழி தீவன தரப் பரிசோதனை ஆய்வுக்கூட கட்டிடம் கட்டுவதற்கு.

- சைதாப்பேட்டை, மாம்பலம், கிண்டி தாலுகா அரசுப் பண்ணை கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத்துறை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும்

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகியவற்றிற்கு நிர்வாக அலுவலகங்கள் அமைக்க ரூ.29.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடப் பணிகள் முடிவுற்ற நிலையில், மின்சாரப் பணிகள் நடைபெற்று வருகிறது. கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும் பொருட்டு மேலும், ரூ.9.22 கோடிக்கு நிர்வாகம் மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- **புறக்கடைக்கோழி அபிவிருத்தித் திட்டம்:** புறக்கடைக்கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.78 இலட்சம் செலவில் 31 மாவட்டங்களில் மொத்தம் 3,120 பயனாளிகளுக்கு தலா 20 எண்ணிக்கையில் 4 வார வயதுடைய 62,400 விலையில்லா நாட்டு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டு வருகிறது.
- கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ் ரூ.15.71 கோடி நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 12ஆவது சுற்றில் மொத்தம் 93,86,018 மாட்டினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- அஸ்காட் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் நாளதுதேதிவரை ஆந்த்ராக்ஸ் நோயினை தடுப்பதற்காக சுமார் 3,500 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- 28.03.2017 அன்று NADP மற்றும் NABARD நிதியுதவியுடன் மொத்தம் ரூ.84.81 கோடி நிதியில் இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் புதியதாக துவங்கப்படவுள்ள ஆந்த்ராக்ஸ் நோய் தடுப்பூசி மருந்து உற்பத்தி மற்றும் தரக்கட்டுப்பாடு ஆய்வகம் மற்றும் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் துவங்கப்படவுள்ள தீவன பரிசோதனை வசதியுடன் கூடிய கோழியின நோய் ஆராய்ச்சி ஆய்வகம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மேற்கொள்ளப்பட்டது.
- ISO தரச்சான்றிதழ் மற்றும் இந்திய அரசு நிர்ணயித்த தரக்கட்டுப்பாட்டு தரச்சான்றுடன் அமையப்பெற்ற மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலிருந்து இது வரை 5,61,082 எண்ணிக்கையில் தூய அயலின உறைவிந்து குச்சிகளும், 10,32,414 எண்ணிக்கையில் கலப்பின உறைவிந்து குச்சிகளும், 1,28,185 எண்ணிக்கையில் உள்நாட்டின உறைவிந்து குச்சிகள் மற்றும் 1,03,743 எண்ணிக்கையில் முர்ரா இன உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழக முழுவதும் விநியோகிப்பட்டு, செயற்கை முறை கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கருமாற்று தொழில் நுட்பத்தின் மூலம் 8 கன்றுகள் பிறந்துள்ளன. மேலும் 68 பசுக்களில் இத்தொழில் நுட்பம் மூலம் கருமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- நகரும் கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டத்தின் கீழ் 22 அவசரகால சேவை ஊர்திகள் கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- சுகாதாரத்துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதைப் போல தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறையில் பணிபுரியும் கால்நடை அலுவலர்களுக்கு மற்றும் மருத்துவர்களுக்கு ஆற்றல் மிகு உறுதி செய்யப்பட்ட பதவி நிலையில் முன்னேற்றம் அளித்து (Dynamic Assured Career Progression) அதற்குரிய உயர்த்தப்பட்ட ஊதிய பயன்கள் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
- கருணை அடிப்படையில், 11 இளநிலை உதவியாளர்கள், 7 அடிப்படை பணியாளர்கள் 2 சார்நிலை பணியாளர்கள் ஆகியோர்க்கு இதுவரை பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைகழகம்**

- தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ரூ.1372.95 இலட்சத்தில் ஒப்பளிக்கப்பட்டு ரூ.821.11 இலட்சம் நிதிக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- பெரிய விலங்கினங்களுக்கான அகநோய்ப் பிரிவிற்கான வளாக வசதியுடன் கூடிய ஒப்பாய்வு மருத்துவ மனைகளை கட்ட ரூ.576.50 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.
- மாநில புதுமை நிதியின் கீழ் மூன்றாம் நிலை உயிர் பாதுகாப்பு ஆய்வகம் நிறுவதற்கான திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 2ஆவது தவணை தொகை ரூ,4,75,00,000/– விடுவிக்கப்பட்டுள்ளது.
- கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலில் கட்டடப் பணி முடிப்பதற்காக ரூ.443.78 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநில புதுமை நிதியின் கீழ் ரூ.82.11 இலட்சத்தில் தஞ்சாவூரில் இனவழி கால்நடை மூலிகைப் பொருள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மையம் அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மிகப் பெரிய விலங்குகளுக்கு உள் வைத்தியம் பார்ப்பதற்காக கட்டடம் கட்டுதல் மற்றும் அதற்குரிய

மருத்துவ சாதனங்கள் வாங்குவதற்காக நபார்ட் வங்கியின் கீழ் ரூ.576.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பால்வளத்துறை மற்றும் ஆவின்**

- பெரம்பலூர் மாவட்டம் பாடலூரில் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டர் பாலை கையாளும் திறன் கொண்ட புதிய பால் பதப்படுத்தும் தொழிற்சாலை ரூ.36.28 கோடியில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. (மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 07.03.2017 அன்று துவங்கி வைக்கப்பட்டது).
- ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.20.58 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மெ.டன் தானியங்கி முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் கால்நடை தீவன தொழிற்சாலை அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று துவங்கி வைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் உற்பத்தியாகும் கால்நடை தீவனம் பால் உற்பத்தியாளர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய வளாகத்தில் இணைய கட்டுபாட்டில் நாளொன்றுக்கு இருபது ஆயிரம் லிட்டர் ஐஸ் கிரீம் உற்பத்தி மற்றும் இருபத்தி ஐயாயிரம் உயர்வெப்பநிலையில் பதப்படுத்திய நறுமண பால் உற்பத்தி ஆலை ரூ.55 கோடி மதிப்பீட்டில் நிறுவிட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்அவர்களால் 28.04.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலை ஜனவரி 2019 அன்று பயன்பாட்டிற்கு வரும்.
- விருதுநகர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் திருச்சுழி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25.23 இலட்சம் மதிப்பீட்டில் ஐயாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மொத்த பால் குளிர்விப்பான் நிலையமும், மற்றும் ரூ.24.36 இலட்சம் செலவில் 100 மெ.டன் கால்டைத்தீவன சேமிப்பு கிடங்கும் அமைக்கப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் ரூ.25 இலட்சம் செலவில் 100 மெ.டன் கால்நடைத் தீவன சேமிப்பு கிடங்கு மற்றும் 100 மெ.டன் வெண்ணெய் சேமிப்பு கிடங்கு மற்றும் ஐம்பதாயிரம் லிட்டர் பாலை குளிர்விக்கும் அறை ரூ.168 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்அவர்களால் 29.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ரூ.218.62 இலட்சம் மதிப்பீட்டில் தருமபுரி, சேலம், திண்டுக்கல், நீலகிரி மற்றும் விருதுநகர் மாவட்ட ஒன்றியங்களில் ஐந்து அதிநவீன பாலகங்கள் அமைக்கப்பட்டு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்அவர்களால் திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- ரூ.321.38இலட்சம்மதிப்பீட்டில்சென்னைபெருநகரில் மயிலாப்பூர், வேளச்சேரி, முகப்பேர், அண்ணாநகர் மேற்கு மற்றும் அரும்பாக்கம் ஆகிய இடங்களில் அதிநவீன பாலகங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் ஐஸ் கிரீமை சீராக விநியோகம் செய்ய ரூ.81 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று புதிய குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் 19.05.2017 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

## மீன்வளத்துறை

**கடல் மீன்வளம்**

- மீன்பிடி தடைக்காலத்தில் வழங்கப்பட்டுவரும் ரூ.2,000/– நிவாரணத் தொகையினை ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கிட தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 2017–2018ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட விகிதத்தில் செயல்படுத்தும் விதமாக பயனாளி ஒருவருக்கு தலா ரூ.5,000/– வீதம் கடல் மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை வழங்கும் பொருட்டு மொத்தம் ரூ.83.17 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. பட்டுவாடா பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 1,052 பயனாளிகளுக்கு மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கான சிறப்பு நிவாரணத் தொகை ரூ.5,000/– வீதம் மொத்தம் ரூ.52.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- கடல் மீனவர் / மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் மீனவர்களால் மாதந்தோறும் செலுத்தப்படும் சேமிப்புத் தொகை ரூ.900/–ஐ ரூ.1,500/–ஆக உயர்த்தி பெற்றிடவும், இத்தொகைக்கு ஈடாக அரசால் வழங்கப்பெறும் பங்குத் தொகையினை

ரூ.1,800/—ஐ ரூ.3,000/— ஆக உயர்த்தி விடுவித்திடவும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டம் 2017—2018ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்ட விகிதத்தில் செயல்படுத்திட அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- மத்திய மாநில அரசு நிதிபங்களிப்புடன் செயல்படுத்தப்படும் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ், 37 மீனவ குடும்பங்களுக்கு ரூ.68 இலட்சம் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து நிவாரணமாக பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்டம் வாரியாகமீனவர் விபத்து காப்புறுதி திட்டத்தின் காசோலை வழங்கப்பட்ட விவரம்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இடையறாத நடவடிக்கைகளின் மூலமாக தமிழகத்தைச் சேர்ந்த 123 மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்தும் மற்றும் 15 மீனவர்கள் ஈரான் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தமிழகம் கொண்டு வரப்பட்டனர்.
- கடந்த 12.12.2016 அன்று சென்னைக்கு வடக்கில் 10 கிலோ மீட்டர் தொலைவில் கரையை கடந்த "வர்தா" புயல் காரணமாக திருவள்ளூர், சென்னை காஞ்சிபுரம் மாவட்ட கடலோர பகுதிகளில் இருந்த மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள் பெரும் சேதத்திற்கு உள்ளானது. மீன்பிடி உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு ரூ.19.13 கோடி நிவாரணமாக அரசு வழங்கியுள்ளது. வர்தா புயல் காரணமாக, காணாமல் போன/ இறந்த 10 மீனவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.10 இலட்சம் 06.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது

**வர்தா புயலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் விவரம்**

- காமாராஜர் துறைமுக கடற்பகுதியில் எம்.டி.பி.டபிள்யூ. மேப்பிள் மற்றும் டான் காஞ்சிபுரம் ஆகிய இரண்டு சரக்கு கப்பல்கள் 28.01.2017 அன்று எதிர்பாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானதால், கப்பலிலிருந்த எண்ணெய் கசிந்து திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கடற்பகுதிகளில் பரவியதால் பாதிக்கப்புள்ளான அம்மாவட்டங்களிலுள்ள மீனவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒரு மீனவ குடும்பத்திற்கு ரூ.5,000/— வீதம் 30,000 மீனவ குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.15 கோடி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. கப்பல் நிறுவனத்திடமிருந்து பெருநிறுவன சமூக பொறுப்பு நிதி தொகுப்பிலிருந்து வழங்கப்படவுள்ள ரூ.75 இலட்சம் நிதியினை எதிர்நோக்கி திருவள்ளூர் மாவட்டம் எர்ணாவூர் மற்றும் சென்னை மாவட்டம் நொச்சிக்குப்பத்தில் இரண்டு மீன்சந்தைகள் அமைப்பதற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் விவரம்**

- இலங்கை கடற்பகுதியில் மூழ்கிய இராமநாதபுரத்தைச் சேர்ந்த 18 மீன்பிடி படகு உரியாளருக்கு தலா ரூ.5 இலட்சம் வீதம் என மொத்தம் ரூ.90 இலட்சம் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசால் ஆணையிடப்பட்டுள்ளது
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து கடலில் மீன்பிடிக்கும் போது பல்வேறு நிகழ்வுகளில் காணாமல் போன அல்லது உயிரிழந்த 14 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.
- ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கவும், அண்மைக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள மீன்பிடி அழுத்தத்தைக் குறைக்க ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு ஆழ்கடல் சூரை மீன்பிடி படகு கட்டுவதற்கான செலவினத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியம் வழங்கும் ஒரு புதிய திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 20 மீனவ பயனாளிகள்/ குழுக்களுக்கு ரூ.1.98 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.
- மீனவ இளைஞர்களுக்கு கடல்சார் கல்வி பயில 5 மீனவ இளைஞர்களுக்கு ரூ.1.50 இலட்சம் உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.
- மீனவ இளைஞர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளித்து அவர்கள் இந்திய கடலோர காவல்படை மற்றும் கப்பற்படை ஆகியவற்றில் பணியில்சேர உதவிடும் வகையில் பயிற்சி திட்டத்தினை செயல்படுத்திட அரசு ரூ.1.04 கோடியினை விடுவித்துள்ளது. மீனவ பயனாளிகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

**உள்நாட்டு மீன்வளம்**

- அரசு மீன் விதைப் பண்ணைகளில் 47 இலட்சம் நுண்மீன் குஞ்சுகளும், 27 இலட்சம் மீன்விரலிகளும் உற்பத்தி செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தில்,**

- 3210 ஹெக்டேர் நன்னீர் நீர் நிலைகளிலுள்ள நீர் தாவரங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு, 16.05 இலட்சம் புல்கெண்டை மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டுள்ளது.
- மீன்வளர்ப்போரை ஊக்குவித்து மீன்வளர்ப்பு பரப்புகளை அதிகரிக்கும் திட்டத்தில் 5.14 ஹெக்டேர் மீன்வளர்ப்பு பண்ணைகள் 10 பயனாளிகளால் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது.
- கடலூர் மாவட்டம், லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் காற்று புகுத்தி மற்றும் நன்மைபயக்கும் நுண்ணுயிரி பயன்படுத்தி மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட ஏதுவாக ரூ.5.48 இலட்சம் மதிப்பிலான உபகரணங்கள் வாங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.
- கிருஷ்ணகிரி மற்றும் மேட்டூர் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்திட ரூ.368.50 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூத்துக்குடி மாவட்டத்தில், கடலில் மிதவைக்கூண்டுகளில் கடல் விரால் மற்றும் சிங்கி இறால்கள் வளர்த்தல் திட்டத்தினை செயல்படுத்திட அரசால் ரூ.53.63 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மிதவைக்கூடுகள் நிறுவப்பட்டுள்ளன.
- மத்திய அரசின் 'நீலப்புரட்சி' திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மீன்வள மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் ரூ.9.925 கோடி விடுவிக்கப்பட்டு நன்னீர் மற்றும் உவர்நீரில் புதிய குளம் / குளம் சீரமைக்கும் பணிகள் / பாரம்பரிய நாட்டு படகுகளை FRP படகுகளாக மாற்றும் திட்டம் முன்னேற்றத்தில் உள்ளன.
- 6 அரசு மீன்பண்ணைகள் மற்றும் 7 மீன்பிடி இறங்கு தளங்கள் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்த ரூ.33.42 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்து தொகை விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.
- கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் மற்றும் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி ஆகிய இடங்களில் நவீன மீன் சந்தைகள் அமைப்பதற்கு ரூ.1.98 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கியதுடன் முதல் தவணையாக ரூ.8.9 இலட்சத்தினை அரசு விடுவித்துள்ளது. பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.
- மாமல்லபுரத்தில் ரூ.258 கோடி திட்ட மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் உலக தரத்திலான கடற்காட்சியகம் அமைப்பதற்கான உலக அளவிலான மறு ஒப்பந்தப்புள்ளி 05.05.2017 அன்று கோரப்பட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ரூ.113.90 கோடி திட்ட மதிப்பீட்டில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கு 06.03.2017 அன்று அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் – II (FIMSUL-II)**

- 8 குதிரைத் திறனுக்கு குறைவான வெளிப் பொருத்தும் இயந்திரம், 50 சதவீத மானியத்தில் 528 சிறிய மீன்பிடி கலன்களுக்கு திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களுக்கு ரூ.3.15 கோடி செலவில் வழங்க உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு, 23.03.2017 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு விநியோக பணி துவங்கப்பட்டுள்ளது.
- மீன்பிடி துறைமுக / மீன்பிடி இறங்குதள மேலாண்மைக் குழுக்களுக்கு மீன்கள், பனிக்கட்டி, உப்பு போன்ற அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்ல வசதியாக 25 சிறியரக சரக்கு வாகனங்கள் ரூ.1.50 கோடி செலவில் வாங்கப்பட்டு, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களால் 13.04.2017 அன்று, மீன்பிடி துறைமுகம் / மீன்பிடி இறங்குதள மேலாண்மை குழுக்கள் வசம் வழங்கப்பட்டது.
- மீன் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் மீனவ மகளிர்களுக்கு மின்கலம் மூலம் இயங்கும் வாகனங்கள் (50 எண்ணம்) வாங்கிட தேசிய அளவிலான ஒப்பந்த புள்ளிகள் 30.03.2017 அன்று கோரப்பட்டு ஒப்பந்தபுள்ளிகள் பரிசீலணையில் உள்ளது.

**தமிழ்நாடு மாநிலத்தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்**

- ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள 39 மீனவர்களுக்கு ரூ.1.06 இலட்சம் செலவில் கடல்சார் மேலாண்மை தொலைத் தொடர்புச் சாதனங்கள் மற்றும் இயந்திரப் பராமரிப்பு தொடர்புடைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 6 கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவமகளிர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 298 மீனவ மகளிருக்கு ரூ.3.01 இலட்சம் செலவில் மதிப்புக் கூட்டப்பட்ட மீன் பொருட்கள் மற்றும் உபபொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- தமிழகத்தில் தேசிய வேளாண்மை அவிபிருத்தித் திட்டத்தின் கீழ் 5 நகரங்களில் ரூ.50 இலட்சம் செலவில் நவீன மீன்விற்பனை நிலையங்கள் அமைக்கும்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

- கடலூர் மாவட்டம், கடலூர் துறைமுகத்தில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மீனவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட டீசல் விநியோகம் செய்ய ஏதுவாக புதிய டீசல் விற்பனை நிலையம் ஒன்று நிறுவப்பட்டு செயல் பட்டுவருகிறது.

- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 5368 கி.லி விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்ட உயர்வேக டீசல் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 896 கி.லி மானியத்துடன் கூடிய விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்ட வணிக ரீதியிலான தொழிலக மண்ணெண்ணெய் நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நீர்த்தேக்கங்களிலிருந்து 141.82 டன்கள் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூ.134.36 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டு ரூ.67.75 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு பண்ணைகளிலிருந்து 17.52 இலட்சம் நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு 0.39 இலட்சம் நன்குவளர்ந்த விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு உள்ளது.

- மீன்விற்பனை மூலம் 204.29 டன்கள் மீன்கள் விற்பனை செய்யப்பட்டு ரூ.523.25 இலட்சம் வருமானம் ஈட்டப்பட்டு ரூ.28.49 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்படகு மீனவர்கள் மற்றும் விசைப்படகு மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணை 16,057 கி.லி வழங்கப்பட்டு ரூ.201.64 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாரம்பரிய மீன்பிடி நாட்டுப்படகுகளுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய மண்ணெண்ணெய் 1911 கிலோ லிட்டர் விநியோகம் செய்யப்பட்டு ரூ.5.53 இலட்சம் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

- 2016–2017ஆம் நிதியாண்டில் ரூ.1228.00 இலட்சம் (துணிக்கைக்கு முன்) இலாபம் ஈட்டியுள்ளது. 2017–2018ஆம் நிதியாண்டில் 15.05.2017 வரை ரூ.48.00 இலட்சம் இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது.

- நடப்புநிதியாண்டில் 2016–2017இல் ரூ.74.66 இலட்சம் தமிழ்நாடுமீனவர் நலவாரியத்திற்கு பங்களிப்பாக வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகம் ரூ.27.99 இலட்சம், பல்வேறு நலத்திட்டங்களுக்காக பெருநிறுவன சமுதாய பொறுப்பு நிதி(CSR Fund) வழங்கியுள்ளது.

- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது, மீன்வளத்துறையின் மூலம் 27.02.2016 முதல் சேத்துப்பட்டு பசுமை பூங்காவின் "இயக்கம் மற்றும் பராமரிப்பு" பணிகளை மேற்கொண்டு வருகிறது. பொழுதுபோக்கு மீன்பிடிப்பு மற்றும் பசுமை பூங்காவிற்கு 2.48 இலட்சம் எண்ணிக்கையிலான பார்வையாளர்கள் வருகைபுரிந்துள்ளனர். மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவினை வண்ண மீன் காட்சியகம் மற்றும் மெய்நிகர் காட்சியகம் ஒன்று ரூ. 6 கோடி செலவில்அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

- தேசியவேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 2016–2017ஆம் ஆண்டில் செயல்படுத்தும் திட்டங்கள்.

- இரண்டு நடமாடும் கடல் மீன் விற்பனை உணவகங்கள் ரூ.57.50 இலட்சம் செலவில் இயக்கப்படும்.

- ஆழியார், அமராவதிமற்றுத் திருமூர்த்தி மீன் பண்ணைகளில் ரூ.77.25 இலட்சம் செலவில் பறவை தடுப்புவேலிகள் அமைக்கப்படும்.

- சென்னை, இராயபுரத்தில் பயிற்சிநிலைய வசதிகளுடன் கூடிய மைய சமையல் கூடம் ஒன்றினை ரூ.2.46 கோடி செலவில் அமைத்து உடனடி சமைப்பது மற்றும் உண்பதற்கு உரிய கடல் மீன் உணவுகளை தயாரிக்கும் பணிகளில் மகளிர் சுய உதவிக் குழுங்களுக்கு பயிற்சிஅளிக்கும் திட்டம் ஒரு முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும்.




- சாத்தனூர் மீன்பண்ணையில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ரூ.2.40 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.
- சென்னை மீன் விற்பனை பிரிவில் இணையதளம் மற்றும் கைப்பேசி வாயிலாக மீன் விற்பனை மேற்கொள்ளப்படும்.
- சென்னை மெரினா கடற்கரையில் வண்ண மீன் காட்சியகத்தை மறு கட்டமைப்பு மேற்கொள்ளுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய கலந்தாலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்**

- தமிழ்நாடு அரசால் மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு புதியதுணைவேந்தர் அவர்கள்நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆராய்ச்சி குழுக் கூட்டம் மற்றும் விரிவாக்கக் கல்விக்குழு கூட்டம் நடத்தப்பட்டன.
- நான்கு புதிய ஆராய்ச்சி திட்டங்கள், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- 68 இளங்கலை மீன்வள பட்டப்படிப்பு பாடத்திட்டங்கள் மற்றும் 14 மீன்வளப் பொறியியல் பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளன.
- 35 முதுநிலை பட்டப்படிப்பு பாடத்திட்டங்கள் மற்றும் 33 முனைவர் பட்டப்படிப்பு பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளன.
- இந்திய மற்றும் தமிழ்நாடு அரசு நிதியுதவியின் மூலம் 17 ஆராய்ச்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
- 80 பயிற்சி திட்டங்கள் மீனவ சமுதாய மற்றும் மீனவர்களின் நலன்களுக்காக நடத்தப்பட்டுள்ளன.
- மீன்பண்ணையாளர்களின் நலனுக்காக 10 பயிற்சி கையேடு தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.
- மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் நலனுக்காக 14 ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- 1,119 மீன் பண்ணையாளர்கள் மற்றும் மீனவ சமுதாயத்தினருக்கு பல்வேறு தலைப்புகளில் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.
- மீன்வளர்ப்பு மற்றும் வளப்பாதுகாப்பில் 25 சிறப்பு விரிவுரைகள் அளிக்கப்பட்டுள்ளன.
- பண்ணையாளர்களின் நலனுக்காக 37 பண்ணை பார்வையிடல் மேற்கொள்ளப்பட்டு மீன் / இறால் பண்ணையாளர்களுக்கு ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டன.
- பகுப்பாய்வு சேவைகள் மூலம் ரூ.2,43,505/– வருமானம் கிடைக்கப்பெற்றது.

❖ ❖ ❖

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை




- பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த 56 விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் ரூ.62.88 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த கட்டடம் ரூ.2.84 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது.

- பள்ளி மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) ரூ.8 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

- பள்ளி வாசல்கள் மற்றும் தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள தொகுப்பு நிதி (Corpus Fund) ரூ.3 கோடி உருவாக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு 2016–2017ஆம் ஆண்டிற்கான நிருவாக மானியம் ரூ.1 கோடி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

- முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கத்திற்கு 2015–2016ஆம் ஆண்டிற்கான அரசின் இணை மானியம் ரூ.11.59 இலட்சம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.


- கல்லூரி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 875 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 755 ரூபாயிலிருந்து 900 ரூபாயாகவும் உயர்த்தப்பட உள்ளது.

- நபார்டு வங்கி நிதியுதவியுடன் 92 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ரூ.13.07 கோடி செலவில் மேம்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

- 37 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவது தொடர்பாக திருத்திய நிருவாக ஒப்புதல் ரூ.39.19 கோடிக்கு வழங்க ஆணையிடப்பட்டது.

❖ ❖ ❖

## வணிகவரி (ம) பதிவுத்துறை






- தொடர்ந்து 7ஆவது ஆண்டாக வரிஇல்லா நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
- சிறப்பான வரி நிருவாகத்தினால், இத்துறையின் மூலம் 2016–2017ஆம் ஆண்டு முடிய ரூ.67,576.77 கோடிகள் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதே காலக் கட்டத்தில் 2015–2016ஆம் ஆண்டு ரூ.61,709.58 கோடிகள் வசூல் செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதி ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூ.5,867.19 கோடி வருவாய் அதிகரித்துள்ளது. வரி வசூல் இலக்கு எட்டப்பட்டுள்ளது.
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான பல முக்கியத்துவம் வாய்ந்த மாநிலத்தின் கருத்துக்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தினால் மற்றும் மைய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்வரும் சட்டங்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன:–
- 2017ஆம் ஆண்டு மைய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம்;
- 2017ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம்;
- 2017ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் (மாநிலங்களுக்கான இழப்பீடு) சட்டம்.
- வணிகவரித் துறையில் முழுமையான கணினி மயமாக்கல் திட்டம் செயல்படுவதன் மூலம் சுமார் 1,70,000 வணிகர்கள் மாதந்தோறும் ரூ.5,200 கோடி வரியினை (துறையின் மொத்த வருவாயில் 95 சதவீதம்) இணையதள வழியில் செலுத்தி வருகின்றன.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று சிதம்பரம் மற்றும் வேலூர் ஆகிய 2 இடங்களில் கட்டப்பட்டுள்ள வணிகவரி கட்டடங்கள் மற்றும் 08.03.2017 அன்று சிவகங்கை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் மற்றும் வணிகவரி அலுவலர், தேவகோட்டை அலுவலக கட்டடம் ஆகிய 2 வணிகவரி கட்டடங்கள் ஆகிய 4 வணிகவரி கட்டடங்கள் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டது.
- மேலும், ரூ.72,95,568/– செலவில் 12 கழித்துக் கட்டப்பட்ட பழைய வாகனங்களுக்கு பதிலாக, புதிதாக வாங்கப்பட்ட 12 ஈப்பு வாகனங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வணிகவரித் துறையின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- வணிகவரித் துறையில் சேலம் கோட்டத்தில் நாமக்கல் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகம் கட்டடம் கட்டுவதற்கு ரூ.3,45,42,772/– நிருவாகம் அனுமதி அளித்து ஆணை.
- வணிகவரித் துறையில் வடசென்னையில் ஒருங்கிணைந்த வளாகம் கட்டுவதற்காக நிலம் வாங்குவதற்கு ரூ.57,49,92,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை. ❖

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை




## உணவு

### பொது விநியோகத் திட்டத்தில் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல்

- குடும்ப அட்டைகளுக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.04.2017 அன்று துவங்கி வைத்தார். இது அனைவராலும் பாராட்டப்பட்ட திட்டமாகும். இதுவரை 80 இலட்சம் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பொது விநியோகத்திட்டத்தில் நம்பகத்தன்மையும் வெளிப்படைத்தன்மையும் அதிகரித்துள்ளது.
- பொது விநியோகத் திட்டத்தினை முழு கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் 34,777 நியாய விலைக் கடைகளிலும், விற்பனை முனைய கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

### சிறப்பு பொது விநியோகத் திட்டம்

- வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினை கட்டுப்படுத்தவும், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் பொதுமக்களுக்கு தட்டுப்பாடின்றி கிடைத்திட சிறப்பு பொதுவிநியோகத் திட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு மானிய விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வந்தன.
- பருப்பு வகைகளுக்காக வழங்கப்பட்டு வந்த மானியம் 01.04.2013 முதற்கொண்டும், பாமாயில் எண்ணெய்க்காக வழங்கப்பட்டு வந்த மானியம் 01.10.2013 முதற்கொண்டும் மத்திய அரசால் நிறுத்தப்பட்ட போதும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவை ஆகஸ்ட் 2017 வரை வழங்க நீட்டிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் 20,000 மெ.டன் துவரம் பருப்பு / கனடா மஞ்சள் பருப்பு / மசூர் பருப்பு மற்றும் 15,000 கி.லி பாமாயில் எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### புதிய கிடங்குகள் திறப்பு

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.04.2017 அன்று ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் சேலம்



மாவட்டம் எடப்பாடியில் 5,000 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 4 கிடங்குகளையும், வாழப்பாடியில் 2,000 மெ.டன் கொள்ளளவில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 கிடங்குகளையும் திறந்து வைக்கப்பட்டது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.05.2017 அன்று ரூ.6 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், இரும்புத்தலையில் 5,000 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்ட 4 கிடங்குகள் மற்றும் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் கட்டப்பட்டுள்ள 1,500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 2 கிடங்குகளையும் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

## கூட்டுறவு

### பயிர்க் கடன்

- வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வேளாண் சார்ந்த பணிகள் மேற்கொள்ள, 16.02.2017 முதல் 15.05.2017 வரை 1,58,261 விவசாயிகளுக்கு ரூ.881.91 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

### குறுகிய காலக் கடன்களை மாற்றியமைத்தல்

- தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து 46,657 விவசாயிகளின் குறுகிய கால பயிர்க்கடன் ரூ.144.32 கோடி மத்திய காலக்கடனாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

### ஒருமுறை கடன் தீர்வு திட்டம்

- தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு நீண்ட காலமாக வசூலாகாமல் உள்ள பண்ணை சாரா கடன் தொகையை வசூல் செய்ய அரசினால் அறிவிக்கப்பட்ட ஒரு முறை கடன் தீர்வு திட்டத்தின் கீழ் 554 விவசாயிகள் ரூ.10.12 கோடி கடன் தொகையினை முழுவதுமாக திரும்பச் செலுத்தி ரூ.10.29 கோடிக்கு வட்டி சலுகை பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டம் 30.09.2017 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்

- 16.02.2017 தேதியில் கூட்டுறவுகளால் 73 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் நடத்தப்பட்டு வந்தன. அவற்றுடன் 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு புதிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை திறக்கப்பட்டு, தற்சமயம் 74 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் (2 நகரும் கடைகள் உட்பட) செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 32 வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
- 16.02.2017 முதல் 15.05.2017 வரை 2,136 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.6.01 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### அம்மா மருந்தகம்

- 16.02.2017 தேதியில் கூட்டுறவுகளால் 106 அம்மா மருந்தகங்கள் நடத்தப்பட்டு வந்தன. அவற்றுடன் 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நான்கு புதிய மருந்தகங்களும் மேலும், 28.04.2017 அன்று ஒரு அம்மா மருந்தகமும் திறக்கப்பட்டு, தற்சமயம் 111 அம்மா மருந்தகங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.
- இம்மருந்தகங்கள் மூலம் 15% தள்ளுபடி விலையில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை ரூ.18.84 கோடி மதிப்பிற்கு மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

## தமிழக மின் நிலைமை

### கூடுதல் மின்நிறுவுதிறன்

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் திட்டங்கள், மத்திய அரசின் மின் உற்பத்தி திட்டங்களின் மாநிலத்தின் பங்கு, கூட்டு முயற்சி மின் திட்டங்கள் மற்றும் சூரிய ஒளி மின் சக்தி மூலம் கடந்த நூறு நாட்களில் 690 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது.
- 31.03.2017 அன்று 1,000 மெகாவாட் திறன் (தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் பங்கு 5,625 மெகாவாட்) கொண்ட கூடங்குளம் அணுமின் நிலையத்தின் இரண்டாம் அலகு வணிகரீதியான மின் உற்பத்தியை துவக்கியது.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

### காற்றாலை மின் சக்தி

- கடந்த நூறு நாட்களில் 176.645 மெகாவாட் அளவிற்கு புதிய காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. 30.04.2017 அன்றுள்ளபடி காற்றாலை மின் உற்பத்தி திறன் 7,854.805 மெகா வாட் ஆகும்.

### சூரிய ஒளி மின் சக்தி

- கடந்த நூறு நாட்களில் 127.49 மெகாவாட் அளவிற்கு சூரிய ஒளி மின் சக்தி நிறுவு திறன் தமிழ்நாடு மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு மொத்த சூரிய ஒளி மின் சக்தி மின் நிறுவு திறன் 1,698.488 மெகாவாட்டாக உள்ளது.
- சூரிய ஒளி மின்சாரம், பகல் பொழுதில் 800 முதல் 1,200 மெகாவாட் அளவிற்கு கிடைக்கப் பெறுகிறது. இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக சூரிய ஒளி மின்சாரம் 19.02.2017 அன்று 1,443 மெகாவாட் அளவிற்கும் மற்றும் 23.02.2017 அன்று 9.198 மில்லியன் யூனிட் அளவிற்கும் பெறப்பட்டுள்ளது.

### மின் தொடரமைப்பு

- அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை வெளியேற்றுவ தற்காகவும் மின் பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்காகவும் கடந்த நூறு நாட்களில் 20 துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன மற்றும் 447.705 சுற்று கிலோ மீட்டர் மிக உயர் மின் அழுத்த பாதைகள் (EHT) இயக்கி வைக்கப்பட்டுள்ளன.

### மின் பகிர்மானம்

- மின் பயனீட்டாளர்களுக்கு சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு கடந்த நூறு நாட்களில் 1,009 கிலோ மீட்டர் உயரழுத்த மின் பாதைகளும் (HT), 2,618 கிலோ மீட்டர் தாழ்வழுத்த மின் பாதைகளும் (LT), மற்றும் 4,044 மின்மாற்றிகளும் இயக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இது தவிர 1.95 இலட்சம் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### உஜாலா திட்டம்

- தமிழ்நாடு மின் உற்பத்த மற்றும் பகிர்மானக் கழகமானது 9 வாட் எல்.இ.டி. பல்புகள், 20 வாட் எல்.இ.டி. டியூப்லைட்டுகள் மற்றும் 50 வாட் ஐந்து நட்சத்திர குறியீட்டுடன் கூடிய ஆற்றல் மிக்க மின் விசிறிகள் ஆகியவற்றை மலிவு விலையில் விரும்பும் வீட்டு மின் நுகர்வோருக்கு மின் கட்டண வசூல் மையங்களில் அமைக்கப்பட்ட தனிப்பட்ட கியோஸ்க்குகள் மூலம் விற்பதற்கு எரிசக்தி திறன் சேசைவகள் நிறுவனத்திற்கு (EESL) அனுமதி வழங்கியது.
- முதற்கட்டமாக 22.03.2017 அன்று சென்னை மண்டலத்தில் விநியோக முகவர்கள் மூலம் எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.
- இந்த விற்பனை, 67 மின் கட்டண வசூல் மையங்களில் (சென்னை மையம், சென்னை மேற்கு, சென்னை வடக்கு, சென்னை தெற்கு 1 மற்றும் 2 ஆகிய மின் பகிர்மான வட்டங்களிலும் மின்வாரியத் தலைமையகத்திலும் நடைபெற்று வருகிறது. இன்று வரை, 1.36 இலட்சம் எல்.இ.டி. பல்புகளும், 31,637 எல்.இ.டி. டியூப்லைட்டுகளும் மற்றும் 8,565 ஐந்து நட்சத்திர குறியீட்டுடன் கூடிய ஆற்றல்மிக்க மின் விசிறிகள் விற்கப்பட்டுள்ளன.

### நிதி

- உதய் திட்டத்தின்கீழ் ரூ.7,605 கோடி கடனை மின்வாரியம் கடன் பத்திரங்கள் மூலம் நிதி திரட்டி திருப்பி செலுத்துவதற்கு ஏதுவாக, தமிழக அரசு ரூ.7,605 கோடிக்கானக் காப்புறுதியை தேதி 01.03.2017 வாயிலாக வழங்கியுள்ளது. இதன் மூலம் மின்வாரியத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ.200/– கோடி வட்டி சேமிப்பு ஏற்படும்.
- உதய் திட்டம் தவிர தமிழக அரசு 31.03.2017 நாளிட்ட ரூ.4,523.19 கோடிக்கான பங்கு மூலதனத்தை வழங்கியுள்ளது. இது தமிழக அரசுக்கு திருப்பி கொடுக்கப்பட வேண்டிய கடன், மின்சார வரி மற்றும் அதற்குண்டான வட்டித்தொகைகளை மாற்றி தரப்பட்டதன் மூலம் அளித்துள்ளது.

❖ ❖ ❖

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை



## வனத்துறை


- 2017–2018ஆம் ஆண்டில் மாபெரும் மரம் நடவுத் திட்டத்தின் கீழ் ரூ.65.85 கோடி செலவில் 31 மாவட்டங்களில் (சென்னை தவிர) 69 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் வார்தா புயலினால் ஏற்பட்ட சேதங்களை ஈடுகட்டவும் பசுமை போர்வையினை அதிகப்படுத்தவும் ரூ.1,342 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு வனத்துறை மூலம் தனியார் காடுகளில் பண்ணை காடுகளை ஏற்படுத்த ரூ.900 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- நகரம் மற்றும் ஊரகப்பகுதிகளில் பொதுமக்களுக்கு நான்கு இலட்சம் மரக்கன்றுகள் மானிய விலையில் வழங்குவதற்கு ரூ.36 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- அழிந்து வரும் மரஇனங்கள் மற்றும் மருத்துவ தாவரங்களை பாதுகாக்க திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள், நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகளுக்கு விதைகளை விற்பதற்காக மரவிதைக் கிடங்கு அமைக்க ரூ.200 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கிராம வன குழுக்களை, நிறுவனமாக உருவாக்குதல் அலுவலக செயல்பாடுகளை உருவாக்குதல், மற்றும் நுண்செயல் திட்டம் உருவாக்குதல் மூலம் கூட்டு வன நிர்வாகத்தினை மேம்படுத்த ரூ.984.95 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தீவிர முனைப்புடன் செயல்படுத்தப்படும் வனமேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த

ரூ.360.78 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- 2016–2017 முதல் 2022–2023 வரையிலான ஏழு ஆண்டுகளுக்கு வனப்பகுதிகளில் மரம்சாரா காடுபடு பொருட்கள் மேம்பாட்டிற்கு ரூ.1,208.82 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தேசிய காடுவளர்ப்பு திட்டத்தினை செயல்படுத்த ரூ.410.44 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் அளித்தல் திட்டத்திற்கு 2016–2017 முதல் 2018-2019 வரை மூன்றாண்டுகளுக்கு நபார்டு மூலம் ரூ.2,457.80 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாநில பணி மூப்புப் பட்டியலில் இடம் பெற்று, வனக்காவலருக்குரிய உடல் தகுதியில்லாத 206 தோட்டக் காவலர் / சமூக வனப்பணியாளர்களை, வன ஓய்வு விடுதிகளில் விடுதிக் காவலர்கள் / மாலிகள் மற்றும் சமையல்காரர்களாக பணியமர்த்த அரசாணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.
- பழங்குடியின சமுதாயத்தினரின் பாரம்பரிய அறிவையும் யானைகளை மேலாண்மை செய்யும் திறமையையும் அங்கீகரிக்கும் விதமாக 29 காவடி தினக்கூலி பணியாளர்களை காலமுறை ஊதியத்தில் துறையில் பணியமர்த்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- வனஉயிரினங்களை மேம்படுத்தவும், வனஉயிரின மற்றும் மனித மோதல்களை தடுக்கவும் வனங்களில் தீவனம் உற்பத்தி செய்வதற்காக ரூ.274.43 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- சென்னை மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் குரங்குகளின் தொல்லைகளை சமாளிப்பதற்காக ரூ.37 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- கோயமுத்தூர் மற்றும் கூடலூர் வனப்பகுதிகளில் இரண்டு அதிதீவிர கண்காணிப்பு குழு உருவாக்கி வனஉயிரினங்களை பாதுகாத்திட ரூ.178 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சிறப்பு முகாம்கள் மூலம் யானைகளின் நலனை பாதுகாக்க ரூ.71 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- “மன்னார் வளைகுடா உயிர்கோள காப்பகத் திட்டத்தின் கீழ் கடற்கரையோர மரம் வளர்ப்பு, பழமரங்கள் வளர்த்தல், கால்நடை மருத்துவ முகாம் நடத்துதல், பொதுமக்களுக்கு மருத்துவ முகாம், படகுகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு, காவல் மிதிவண்டி வாங்குதல், விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல், இயற்கை முகாம்களை நடத்துதல் ஆகியவற்றிற்காக ரூ.76.38 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## சுற்றுச்சூழல் துறை

- 69 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் அமையாத 12 கல்வி மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மையங்களை, மையம் ஒன்றுக்கு ரூ.2 இலட்சம் செலவில் அமைக்க ரூ.24 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- தேசிய பசுமைப்படை மன்ற மாணாக்கர்களுக்கு சூழல் போட்டிகள் மற்றும் சூழல் சுற்றுலா மாவட்டத்திற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவில் 32 மாவட்டங்களில் நடத்த ரூ.32 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது
- இணையவழி கற்றல் – இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு எனற இத்திட்டத்தின்படி ஏற்கெனவே பள்ளிகளில் செயல்பட்டு வரும் 57 சுற்றுச்சூழல் தகவல் மையங்களினை ரூ.14.40 இலட்சம் செலவில் இத்துறையின் வலைதளத்துடன் இணைக்க ஏதுவாக 50 சுற்றுச்சூழல் தகவல் மையங்களுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டது.
- ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகாவின் வடமுகம் வெள்ளோடு பெரியகுளம் ஏரி மற்றும் ஈரோடு மாவட்டம் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட முத்தம்பாளையம் ஏரி ஆகியவற்றின் சூழல்






மீட்டளிப்பு செய்யும் பணிகளுக்காக ரூ.7.65 கோடி முறையே ரூ.490 மற்றும் ரூ.275 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொகை விடுவிக்கப்பட்டது

- Message on Wheels என்ற பிளாஸ்டிக் பயன்பாட்டினை தவிர்த்தல் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் மாநிலம் முழுவதும் ரூ.16 இலட்சம் செலவில் நடத்த அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பிரச்சாரம் விரைவில் நடத்தப்பட உள்ளது.

### தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

- ஓரகடம், கோயம்புத்தூர் வடக்கு மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகக் கட்டடங்கள் ரூ.754.78 இலட்சம் செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 18.03.2017 அன்று கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் ஈரோடு அலுவலக கட்டடங்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் கடந்த 28.02.2017 அன்று ஓரகடம் அலுவலக கட்டடமும் திறந்து வைக்கப்பட்டன.

- வாரியப்பணிகளை கணினி மயமாக்குவதன் ஒரு பகுதியாக, வாரியம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையேயான கடிதப் போக்குவரத்தினை இணைய வழி மூலம் மேற்கொள்ளும் பொருட்டு, இ–நோட்டிங் (E-Noting) என்ற மென்பொருளை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 01.05.2017 அன்று முதல் அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகின்றது. இதன் மூலம் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இணையவழி மூலமாக அனுப்பப்படுகிறது.

- 16.02.2017 முதல் 15.05.2017 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 118 புதிய தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையையும், 557 தொழிற்சாலைகளுக்கு இயங்குவதற்கான இசைவாணையையும் வழங்கியுள்ளது.

### அரசு ரப்பர் கழகம் லிமிடெட், நாகர்கோவில்

- அரசு ரப்பர் கழகம் முழுமையான தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனம், ரப்பர் உற்பத்தி மற்றும் அது சார்ந்த பணிகள், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு மற்றும் மறு வாழ்வுஆகிய பணிகளை செயல்படுத்தி வருகிறது.

- அரசு ரப்பர் கழகத்தில் உற்பத்தி குறைந்த பழைய மற்றும் முதிர்ந்த ரப்பர் மரங்களை அகற்றி புதிய உயர்ரக ரப்பர் கன்றுகளை நடவு செய்ய திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அரசு ரப்பர் கழகத்தில் தற்பொழுது 23 கூப்புகளிலுள்ள 42,218 ரப்பர் மரங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ.13.88 கோடிக்கு பணவரவு ஆரம்பித்துள்ளது. ரப்பர் மரங்களை முறித்து அப்புறப்படுத்தியபின் இப்பகுதிகளில் மறு நடவு பணி செய்யப்படும்.

- தமிழ்நாட்டில் அரசு ரப்பர் கழகத்தில் இயற்கை ரப்பர் 1,900 டன் வரை உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் (டேன்டீ), குன்னூர்

- சூழல் – சுற்றுலாவை மேம்படுத்தி, தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகத்தின் வருவாயைப் பெருக்கிட, நடுவட்டம் தேயிலைக்கோட்டத்தில் மே-2017 முதல் "தேயிலை அருங்காட்சியகம்" திறக்கப்பட்டுள்ளது.
- இக்கழகத் தொழிலாளர்களின் வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தும் வகையில், அவர்களது குடியிருப்புகளை பராமரிப்பதற்காக (Maintenance) செலுத்தப்பட்ட மூலதன நிதி (2014–2015) இன் கீழ், ரூ.22.50 இலட்சம் தொகை செலவு மேற்கொள்ளப்பட்டது.
- டிரஸ்டீ சான்றிதழ் தேயிலைத் தொழிற்சாலைகளின் நன்மதிப்பை கூட்டுவதுடன் அதிக வருமானத்தையும் ஈட்டித்தர வல்லது. எனவே, இக்கழகத்தில் அனைத்துக் கோட்டங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் டிரஸ்டீ சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின் முதற்படியாக குன்னூர் நடுவட்டம் கோத்தகிரி, பாண்டியார் கோட்டங்கள் மற்றும் டைகர்ஹில், குயின்சோலா தேயிலை தொழிற்சாலைகளுக்கு டிரஸ்டீ தணிக்கை முடிவடைந்து டிரஸ்டீ தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.
- தேயிலைக் கழிவு மின்னணு ஏலத்திலும் 16.02.2017 முதல் 15.05.2017 வரை அதிகபட்ச வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. (அதாவது ரூ.1,13,07,000/- ) சி.டி.சி. ரக தேயிலைக் கழிவிற்கு அதிகபட்ச ஒரு கிலோவிற்கு விலையாக ரூ.40/- எனவும், ஆர்த்தோடக்ஸ் ரக தேயிலைக் கழிவிற்கு அதிகபட்ச விலை ஒரு கிலோவிற்கு ரூ.48/– எனவும் விற்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை 11 சில்லரை முகவர்கள் மற்றும் ஒரு மொத்த விற்பனையாளர் நியமிக்கப்பட்டு 29,535 கிலோ தேயிலைத் தூள் ரூ.49,88,200/-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் 14,408.833 மெட்ரிக் டன்கள் கூழ்மரம் தமிழ்நாடு காகித ஆலை மற்றும் சேஷசாயி காகித ஆலை நிறுவனம் ஆகியவற்றிற்கு கடந்த 100 நாட்களில் வழங்கி இதன் மூலம் ரூ.1,426.99 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் முந்திரித் தோட்டங்கள் பொது ஏலம் மற்றும் டெண்டர் மூலம், குத்தகைக்கு விடப்பட்டு கடந்த 100 நாட்களில் ரூ.586.10 இலட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.
- தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் குளோனல் கன்றுகள் மற்றும் விதைகள் மூலம் 91 ஹெக்டேரில் தைல கூழ் மரத் தோட்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

*"டிரஸ்டீ சான்றிதழ் தேயிலைத் தொழிற்சாலைகளின் நன்மதிப்பை கூட்டுவதுடன் அதிக வருமானத்தையும் ஈட்டித்தர வல்லது. எனவே, இக்கழகத்தில் அனைத்துக் கோட்டங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் டிரஸ்டீ சான்றிதழ் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின் முதற்படியாக குன்னூர் நடுவட்டம் கோத்தகிரி, பாண்டியார் கோட்டங்கள் மற்றும் டைகர்ஹில், குயின்சோலா தேயிலை தொழிற்சாலைகளுக்கு டிரஸ்டீ தணிக்கை முடிவடைந்து டிரஸ்டீ தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது."*

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

# நிதித்துறை



- சென்னை, நந்தனத்தில் ரூ.36.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகம் 04.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 சார் கருவூலங்களுக்கான சொந்த கட்டடங்கள் பல்வேறு நாட்களில் (07.03.2017, 08.03.2017 மற்றும் 23.05.2017) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பணியாளர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு திருத்திய ஊதிய விகிதம் / ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆராய்ந்து உரிய பரிந்துரைகளை 30.06.2017க்குள் அரசுக்கு அளிப்பதற்கு அலுவலர் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படியை 01.01.2017 முதல், 132 சதவீதத்திலிருந்து 136 சதவீதமாக உயர்த்தி வழங்க முறையே 26.04.2017 மற்றும் 27.04.2017 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை கடனுதவியுடன் 1,524.65 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலீடு ஊக்குவிப்புத் திட்டம் (கட்டம்–2) செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் 31.03.2017 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளன.
- அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 8,021 பயனாளிகள் 31.40 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ உதவிகள் பெற்றுள்ளனர்.
- முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.9,52,25,000/– நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை




**மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்களை கொள்முதல் செய்தல்**

- வணிகச் சந்தையில் மாறிவரும் சூழலை எதிர்கொள்ளும் விதமாக வடிவமைப்பினை இன்றைய நிலைக்கேற்ப உயர்த்த, கைத்தறிகளுக்கு 2,000 மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்களை கொள்முதல் செய்ய, அரசு 2017–2018ஆம் ஆண்டு மாநில புதுமை நிதியிலிருந்து ரூ.225 இலட்சம் அரசு விடுவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, 2,000 மோட்டார் இணைக்கப்பட்ட சித்திர நெசவு இயந்திரங்கள் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு வழங்கப்படும்.

**புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் 2016 நெசவாளர் கூட்டுறவு சங்க நிரந்தர பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு விரிவுபடுத்துதல்**

- கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பணிபுரியும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு புதிய மருத்துவ காப்பீடு திட்டம் 2016 (New Health Insurance Scheme 2016) விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1,500 பணியாளர் குடும்பங்கள் பயன்பெறும்.

**இயங்கும் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள் ஊதிய உயர்வு வழங்குதல்**

- தமிழ்நாட்டில் அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 கூட்டுறவு நூற்பாலைகளில் 1,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/– ஊதிய உயர்வு வழங்க தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதன்படி, ஏறக்குறைய 1,000

தொழிலாளர்கள் உயர்த்தப்பட்ட ஊதியத்தினை பெறுவார்கள்.

## கோ–ஆப்டெக்ஸ்

**விற்பனை**

- "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" திட்டத்தின் விற்பனை 22.02.2017 முதல் 31.03.2017 வரை ரூ.33.08 கோடிக்கு விற்பனை செய்து கோ–ஆப்டெக்ஸ் சாதனை படைத்துள்ளது.

**நவீனமயமாக்கல்**

- நாமக்கல், மைசூரு மற்றும் பூனா கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

## பட்டு வளர்ச்சித் துறை

- மல்பெரி சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், புழுவளர்ப்பு மனை அமைத்தல், புழுவளர்ப்பு தளவாடங்கள் வழங்குதல் போன்றவைகளுக்காக 2,621 பயனாளிகளுக்கு திட்ட உதவியாக ரூ.997.857 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- 36 பட்டு நூற்பாளர்களுக்கு தரமான பட்டு நூல் உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக ரூ.19.466 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பட்டு விவசாயிகளால் 3,512.815 மெட்ரிக் டன் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு வர்த்தகம் 367.172 மெட்ரிக் டன்.

- அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் காஞ்சிபுரத்தில் கச்சாப்பட்டு வர்த்தகம் 17.532 மெட்ரிக் டன்.

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம்

**நகர்புற கண்காட்சித் திடல், கன்னியாகுமரி**

- ரூ.2.40 கோடி செலவில் கன்னியாகுமரி கலங்கரை விளக்கம் அருகில் கைவினைஞர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நகர்புற கண்காட்சி திடலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.03.2017 அன்று துவக்கி வைத்தார்கள்.

**கைவினைஞர்களுக்கு விலையில்லா உபகரணப் பொருட்கள் வழங்குதல்**

- கைத்திறத் தொழிலில் ஈடுபட்டுள்ள 10,000 கைவினைஞர்களுக்கு தலா ரூ.5,000/– மதிப்புள்ள விலையில்லா உபகரணப் பொருட்கள் வழங்கும் திட்டத்தினை 07.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

**2016–2017ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை வழங்குதல்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2016–2017ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதினை 9 கைவினைஞர்களுக்கும் மற்றும் பூம்புகார் மாநில விருதினை 12 கைவினைஞர்களுக்கும் 12.05.2017 அன்று வழங்கி கௌரவித்தார்கள்.

**கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறன்களுக்கான மின் தொகுப்பு**

- தமிழகத்திலுள்ள அனைத்து கைவினைஞர்களை பற்றியும் அவர்களுடைய திறமைகள் தொடர்பான தகவல்களை சேகரிக்க இந்நிறுவனம் உருவாக்கியுள்ள "www.tnartissan.com" என்ற இணையதளத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 12.05.2017அன்று துவக்கி வைத்தார்கள்.

**சென்னை அரசு அருங்காட்சியகத்தில் விற்பனை நிலையம்**

- சென்னை எழும்பூரில் அமைந்துள்ள அரசு அருங்காட்சிய வளாகத்தில் 15.05.2017 அன்று பூம்புகார் கிளை விற்பனை நிலையம் துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**பயிற்சிகள்**

- மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு காகிதக்கூழ் பொம்மை தயாரிக்கும் பயிற்சி அளிக்கும் பயிற்றுநர்களுக்கு பயிற்றுவிக்க அரசு ரூ.16 இலட்சம் வழங்கியது. இப்பயிற்சி 09.09.2016 அன்று துவக்கப்பட்டு 08.03.2017 அன்று முடிவுற்றது.

**வாங்குவோர்–விற்போர் சந்திப்பு**

- இந்நிறுவனம் மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் முதன்முறையாக 01.03.2017 முதல் 03.03.2017 வரை வாங்குவோர்–விற்போர் சந்திப்பினை (Buyer –Seller Meet) சென்னையில் நடத்தியது.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

**ரிசோர்சென்–ஐஐடி – புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- ஏற்றுக் கொள்ளப்பட்ட நிபந்தனைகளுடன் இந்நிறுவனம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக ரிசோர்சென் – ஐஐடி யுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

**ஆ) தேசிய தொழில்நுட்ப வடிவமைப்பு நிலையம், ஹைதராபாத் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- அனைத்து தருணங்களுக்கும் தேவைப்படும் புதிய பொருட்களை வடிவமைக்கும் வகையில் ஹைதராபாத்திலுள்ள தேசிய தொழில்நுட்ப வடிவமைப்பு நிலையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

**பூம்புகாருக்கு அளிக்கப்பட்ட விருதுகள்**

**சிறந்த ஆளுமைக்கான ஸ்கோச் விருது**

- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தகவல் தொழில்நுட்ப மேலாண்மைக்காக ஸ்கோச் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், கூர்கான் வழங்கும் 2016ஆம் ஆண்டிற்கான ஸ்கோச் ஸ்மார்ட் கவர்னன்ஸ் (SKOCH Smart Governance Award) விருதினை பெற்றுள்ளது.

**தேசிய மின் ஆளுமைக்கான வெள்ளி விருது 2016–2017**

- மத்திய அரசின் நிருவாக சீர்திருத்தம் மற்றும் பொது மக்கள் குறைகளுக்கான துறை வழங்கும் 2016–2017ஆம் ஆண்டிற்கான மின் ஆளுமைக்கான தேசிய வெள்ளி விருது, மின் ஆளுமையை நடைமுறைபடுத்தியதற்காக இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இவ்விருதில் ஒரு நினைவுப்பரிசு, ஒரு பொது பத்திரம், குழு உறுப்பினர்களுக்கு தனித்தனியான பத்திரங்கள் மற்றும் ரூ.1,00,000/– ரொக்கப்பரிசை குழுவின் ஏழு நபர்களுக்கும் சமமாக பிரித்தளிக்கப்பட்டது.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சோப்பு அலகு வளாகத்தில் மொத்தத் தொகை ரூ.250 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட சோப்பு அலகு கட்டடமும், புதிய நவீன குளியல் சோப்பு தயாரிக்கும் இயந்திரங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- திண்டுக்கல் மாவட்டம், வேடப்பட்டியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஜவ்வாது அலகில் மொத்தத் தொகை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடமும், நவீன சாம்பிராணி தயாரிக்கும் இயந்திரங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

## தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

- தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை பெரிய தோப்பில் பனைப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்ய ரூ.1 இலட்சம் செலவில் கிணறு தூர்வாரி பாசன வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை





- முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 11.01.2017 முதல் புதுப் பொலிவுடன் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. சிறப்பு சிகிச்சைகளுக்கு தற்போது வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. புதியதாக 312 சிகிச்சை முறைகள், 38 முழுமையான பரிசோதனை முறைகள் மற்றும் 8 உயர் சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆறு மாதங்களுக்கு மேலாக கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட குடியேறியுள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் காப்பீடு வழங்கப்பட உள்ளது. மாநில அரசால் அனாதைகள் என வரையறுக்கப்பட்டவர்களுக்கும் தனி காப்பீடு அட்டை வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை 1.19 இலட்சம் நபர்களுக்கு ரூ.234.41 கோடி காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தொகுப்பு நிதியிலிருந்து 310 நோயாளிக்கும் சிறப்பு அறுவை சிகிச்சைகள் ரூ.4.96 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளது.
- 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்தில் 74,694 கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட 2.81 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர். 108 அவசரகால ஆம்புலன்ஸ் திட்டத்திற்காக ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் 25 புதிய 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் 102 தாய் சேய் திட்ட சேவைக்காக ரூ.6.89 இலட்சம் மதிப்பீட்டிலான 10 புதிய வாகனங்கள் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.05.2017 அன்று துவக்கி வைத்தார்கள்.
- “104” மருத்துவ தகவல் சேவை மையம் மூலம், 1.60 இலட்சம் நபர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் 1.27 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.113.27 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்போது வழங்கப்படும் நிதி உதவி 12,000 ரூபாயை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.
- சென்னை அரசு பொது மருத்துவமனையில் அம்மா முழு உடல் பரிசோதனை மற்றும் அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டத்தில், இதுவரை 3,071 நபர்கள் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர்.
- இந்தியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், 1,223 சிறப்பு மருத்துவர்கள் உட்பட 2,673 நபர்களை தேர்ந்தெடுத்துள்ளது.
- நடமாடும் மருத்துவமனை திட்டத்தில் நடப்பாண்டில் 48,665 முகாம்கள் நடத்தப்பட்டு இதில் 40.68 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.
- அம்மா ஆரோக்கிய திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 03.03.2016 அன்று தொடங்கப்பட்டு, 400 மேம்படுத்தப்பட்ட / வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 4.30 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.



- அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.09.2015 அன்று தொடங்கப்பட்டு, நடப்பாண்டில் 1.05 இலட்சம் குழந்தைகளுக்கு பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.
- ரூ. 91 கோடி செலவில், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியில், உலகத் தரம் வாய்ந்த வசதிகள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகளுடன் புற நோயாளிகள் பிரிவு கட்டப்பட்டுள்ளது. இம் மருத்துவமனையில் ரூ.16.11 கோடி செலவில் குழந்தைகள் கேத் லேப் கருவி நிறுவப்பட்டுள்ளது. இக்கட்டடத்தையும் மருத்துவக் கருவியையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- ரூ. 9.40 கோடி மதிப்பில், சென்னை மண்டலத்தைச் சார்ந்த சென்னை அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் முதல்வர் குடியிருப்பு, விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் பிரிவு, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 4 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 3 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் ஆறு செவிலியர் குடியிருப்புகள் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- சேலம் மாவட்டத்தில், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.18.81 கோடி செலவில் முதுநிலை / இளநிலை இருப்பு / கட்டாய உள்தங்கு பயிற்சி மாணவர் தங்கும் விடுதிகள், குடியிருப்பு கட்டடம், வாழப்பாடி அரசு மருத்துவமனையில் பல்வேறு பிரிவுகளுக்கான கட்டடம், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இரண்டு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் மற்றும் செவிலியர் தங்கும் விடுதிகள், காத்திருப்போர் அறை மற்றும் வெளி நோயாளிகள் அறை என ரூ. 29.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- திருச்சிராப்பள்ளி மண்டலத்தில், திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம்,

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் நான்கு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 5 புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், 10 துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என ரூ. 28.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 20 புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 07.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

- திருநெல்வேலி மண்டலத்தில், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.28.44 கோடி செலவில், மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பேறுசார் மற்றும் குழந்தைகள் நல ஒப்புயர்வு மைய கட்டடம் மற்றும் செவிலியர் பள்ளிக் கட்டடம், தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் ரூ. 8.71 கோடி செலவில், பயிற்சி மாணவி மற்றும் மாணவர்கள் தங்கும் விடுதி, தேர்வுக் கூடம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏழு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு செவிலியர் தங்கும் விடுதி, ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என ரூ. 41.23 கோடி செலவில், கட்டப்பட்டுள்ள 19 கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- மதுரை மண்டலத்தில், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.7 கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி, இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.8.17 கோடி செலவில், மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செவிலியர் பள்ளி கட்டடம், திண்டுக்கல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.6.33 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம், விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.3.33 கோடி செலவில், கட்டப்பட்டுள்ள புறநோயாளி, தீக்காய மற்றும் தலைக்காய சிகிச்சை மைய கட்டடம் மற்றும் மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், ஆறு செவிலியர் தங்கும் விடுதிகள், ஒரு துணை சுகாதார நிலைய கட்டடம் என ரூ.30.15 கோடி மதிப்பீட்டில் 15 புதிய கட்டடங்கள் மற்றும் ஒரு எம்.ஆர்.ஐ. கருவி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 08.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- கோயம்புத்தூர் மண்டலத்தில், வால்பாறை அரசு மருத்துவமனையில் ரூ.2.65 கோடி மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு, அறுவை அரங்கம், மருத்துவம் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டடங்கள், திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.3.33 கோடி மதிப்பீட்டில் 100 படுக்கைகள் கட்டடம் மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ கட்டடம், கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மூன்று மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், மருத்துவர் தங்கும் விடுதி மற்றும் இரண்டு துணை சுகாதார நிலைய கட்டடங்கள் என ரூ.11.17 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.
- சிவகங்கை மாவட்டம், திருபுவனம் அரசு மருத்துவமனையில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறுவை சிசிச்சைக்குப் பிந்தைய கவனிப்பு பிரிவு, குழந்தைகள் பிரிவு போன்ற கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.05.2017 அன்று திறந்து வைத்தார்கள். ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு புறநோயாளிகள் பிரிவு, கதிர்வீச்சு பிரிவு போன்ற கட்டடங்கள், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவு மற்றும் இரத்த வங்கி, வேலூர் மாவட்டம் – வள்ளிப்பட்டு, தாமலேரிமுத்தூர், நாகவேடு, விழுப்புரம் மாவட்டம் – செங்குறிச்சி மற்றும் சீர்ப்பனந்தல், திருவள்ளூர் மாவட்டம் – வெள்ளியகரம், விருதுநகர் மாவட்டம் – விஸ்வநத்தம், கிருஷ்ணகிரி மாவட்டம் – தானம்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – கரும்பனூர், தஞ்சாவூர் மாவட்டம் – ஒக்கநாடு கீழையூர் ஆகிய இடங்களில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், திருவள்ளூர் மாவட்டம் – கொள்ளுமேடு, திருவாரூர் மாவட்டம் – ஆலங்குடி, வேலூர் மாவட்டம் – லாலாபேட்டை ஆகிய இடங்களில் ரூ.3.30 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்களை 03.05.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

❖ ❖ ❖

# உயர்கல்வித்துறை




- 2017–2018ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் உயர்கல்வித் துறைக்கு ரூ.3,680 கோடி ஒதுக்கீடு.
- 2017–2018ஆம் கல்வியாண்டு முதல், திருப்பூர் மாவட்டம், அவினாசியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரி 03 பாடப்பிரிவுகளுடன் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது.
- அரசால், தேனி மாவட்டம், வீரபாண்டியில் துவங்கப்பட்ட அரசு கலை மற்றும் அறிவியல் (இருபாலர்) கல்லூரியில் பி.எஸ்.ஸி கணினி அறிவியல் மற்றும் பி.சி.ஏ ஆகிய புதிய பாடப்பிரிவுகளை 2016–2017ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதியும் மற்றும் இப்பாடப்பிரிவுகளை கையாள்வதற்கு 12 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்தும், இதற்கென தொடரும் செலவினமாக ரூ.69,98,400/– ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- ரூ.100 கோடி செலவில் அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில், 62 அரசு கலை மற்றும் அறியியல் கல்லூரிகள், 7 கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக் கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு குப்பைத் தொட்டிகள் வாங்கும் பொருட்டு ரூ.48,79,650/– ஒப்பளிப்பு செய்யப்பட்டது.
- ரூ.100 கோடி செலவில் அரசு / பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில், 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வாங்க ரூ.5,20,00,000/–மும் மற்றும் ஆய்வகங்களை மேம்படுத்துவதற்காக ரூ.1,50,00,000/– மும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- அரசு உதவி பெறும் கல்லூரிகளில் காலியாக இருந்த 414 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பிக் கொள்ள சார்ந்த அரசு உதவி பெறும் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- 2013–2014ஆம் கல்வியாண்டில் ஸ்ரீரங்கம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), கந்தர்வகோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்), சங்கராபுரம் (விழுப்புரம் மாவட்டம்), பெருந்துறை (ஈரோடு மாவட்டம்), அரியலூர் (அரியலூர் மாவட்டம்), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி மாவட்டம்), ஜோலார்பேட்டை (வேலூர் மாவட்டம்), ஆண்டிப்பட்டி (தேனி மாவட்டம்), உசிலம்பட்டி (மதுரை மாவட்டம்) மற்றும் செக்கானூரணி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் துவங்கப்பட்ட 10 அரசினர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் விடுதிகள் கட்டுவதற்கு இரண்டாம் தவணையாக ரூ.106.90 கோடி (ஒரு கல்லூரிக்கு 10.69 கோடி வீதம்) ஒதுக்கீடு செய்து நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையில் 2013–2014ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அரசினர் பொறியியற் கல்லூரிக்கென, நான்காம் (2016–2017) கல்வியாண்டிற்கு 20 ஆசிரியர்கள் மற்றும் 4 தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 24 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியில் 2013–2014ஆம் ஆண்டு துவங்கப்பட்ட அரசினர் பொறியியற் கல்லூரிக்கு, நான்காம் (2016–2017) கல்வியாண்டிற்கு 20 ஆசிரியர் மற்றும் 4 தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகமொத்தம் 24 புதிய பதவியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

- சென்னை, தரமணியில் உள்ள மைய தொழில் நுட்பப் பயிலக வளாகத்தில் (Central Institute of Technology Campus) புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பணிமனைக் கட்டடத்திற்கு (Integrated Workshop Building) ரூ.33,63,332/– கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- மதுரையில் உள்ள, தமிழ்நாடு பலவகை தொழில் நுட்பக் கல்லூரியில் பொருள் சேதமில்லா தரச்சோதனை பயிற்சி மையம் **(NON-DESTRUCTIVE TESTING TRAINING CENTRE)** நிறுவுவதற்கு தொடராச் செலவினமாக ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் 2013–2014ஆம் ஆண்டு புதியதாகத் துவங்கப்பட்ட அரசினர் பொறியியற் கல்லூரிக்கு மூன்றாம் (2015–2016) கல்வியாண்டிற்கு 20 ஆசிரியர்கள் மற்றும் 14 தொழில்நுட்பப் பணியாளர்கள் என்று மொத்தம் 34 புதிய பதவியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும், மூன்றாம் (2015–2016) கல்வியாண்டிற்குத் தேவையான கணினிகள், இயந்திரங்கள், தளவாடங்கள் மற்றும் இ–ஜர்னல்ஸ் கொள்முதல் செய்வதற்கு தொடராச் செலவினத்தின் கீழ் ரூ.221 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- 16.02.2017 முதல் 15.05.2017 வரையிலான காலத்தில் இத்துறை மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 3,208 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

- அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளரக் கலந்தாய்வின் மூலம் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை பெற்று பயிலும் முதல் தலைமுறை பட்டதாரி மாணவ / மாணவியர்களுக்கு கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 16.02.2017 முதல் 15.05.2017 வரையிலான காலத்தில் ரூ.14.14 கோடி செலவிடப்பட்டு 13,351 முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர்.

- 2016–2017ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலத்தில் துவங்கப்பட்ட புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.05.2017 அன்று காணொளி காட்சி மூலம் திறக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூரில் திருவள்ளூர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டங்கள், சென்னை மாவட்டம், குரோம்பேட்டையில் எம்.ஐ.டி வளாகத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்டுள்ள உற்பத்தி தொழில் நுட்பத் துறை கட்டடம் மற்றும் சென்னை மாவட்டம், தொழில் நுட்ப கல்வி இயக்குநரகம்




வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ரூசா [Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA)] திட்ட இயக்குநரக கட்டடம் ஆகிய கட்டடங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

- முதுநிலை கட்டமைப்பு பொறியியல் **(M.E. STRUCTURAL ENGINEERING)** மற்றும் முதுநிலை தொடர்பியல் **(M.E. COMMUNICATION SYSTEM)** ஆகிய இரண்டு புதிய முதுநிலை பட்டவகுப்புகள், திருநெல்வேலி, அரசினர் பொறியியற் கல்லூரியில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- 16.02.2017 முதல் 15.05.2017 வரையிலான காலத்தில்அரசு பொறியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 187 உதவிப் பேராசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணை வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

- 52 உதவியாளர்கள், 1 சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் 1 தட்டச்சர் உட்பட 54 அமைச்சுப் பணியாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு தொழில் நுட்பக் கல்வித் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- அணுக்கருவைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக, மாணவர்களிடையே விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், ரஷ்யாவின் தேசிய அணு ஆற்றல் நிறுவனமான “ரொசோட்டம்” உடன் இணைந்து, ரூ.40 இலட்சம் மதிப்புள்ள அணுமின் உலைகள் குறித்த பகுதியை பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தால் 26.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. திறன் கூட்டிய நிஜக் காட்சிப் படக்கருவி, எண்ணிலக்க நிஜநிலை தொழில்நுட்பம், வருகை தரும் பார்வையாளர்களின் கதிர் வீச்சு அளவுகளை அளக்கும் கதிர் வீச்சு அளவி உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்கள் இந்தப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- தமிழக அரசின் தன்னிறைவு திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி நாகலாபுரத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

❖ ❖ ❖

# நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை



**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு**

- வேலூர் மாநகருக்கு வட்டச்சாலை (கட்டம்–I) அமைப்பதற்கு நில எடுப்பு பணி மேற்கொள்ள ரூ.38.82 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், ரூ.939.66 கோடி செலவில் 452.74 கி.மீ. நீள சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் 135 பாலம் / சிறுபாலம் / பாதுகாப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- திட்டம் சாரா பணிகளின் கீழ், ரூ.709.90 கோடி செலவில் 1,734.18 கி.மீ. நீள சாலையில் புதுப்பிக்கும் பணிகள் முடிவுற்றன.
- சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 52 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.55.07 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
- பகுதி–II திட்டத்தின் கீழ், 5 கட்டட பணிகள் ரூ.4.22 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதி திட்டத்தின் கீழ், 11 பணிகள் ரூ.92.32 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

**நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்**

- நபார்டு கடனுதவியுடன் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்தல் திட்டத்தின் கீழ், 26.3 கி.மீ நீளமுள்ள 7 சாலைகள் (13.2 கி.மீ நீளமுள்ள 3 சாலைகள் மேம்பாடு செய்தல் மற்றும் 13.1 கி.மீ நீளமுள்ள 4 சாலைகள் மறு கட்டமைப்பு செய்தல்) ரூ.2,621.31 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் 2 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பலன் அடைகின்றனர்.
- நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகின் மூலமாக நபார்டு கடனுதவியுடன் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ், 15 பாலங்கள் ரூ. 6,703.72 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டதன் மூலம் 10 மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பலன் அடைகின்றனர்.
- நபார்டு கடனுதவியுடன் அரசு சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ், ரூ.39.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.
- நபார்டு கடனுதவியுடன் கிராமச் சாலைகளில் பாலங்கள் கட்டுதல் திட்டத்தின் கீழ் ரூ.234.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**புதிய பணிகள்**

- மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் அமைந்துள்ள ரூ.56.755 கோடி

மதிப்பிலான 24 பாலப் பணிகளை மேற்கொள்ள ஆணை வெளியிடப்பட்டது. தற்போது 18 பாலப் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையிலும், 3 பாலப் பணிகள் வடிவமைப்பு நிலையிலும் மீதமுள்ள 3 பாலப் பணிகள் மதிப்பீடு நிலையிலும் உள்ளது.

- ரூ.115.31 கோடி மதிப்பில் உள்ள 56 பாலப் பணிகளுக்கான கருத்துரு (மாவட்ட இதரசாலை மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலை) அரசின் பரிசீலனையில் உள்ளது.

## தேசிய நெடுஞ்சாலை

**மூலப் பணிகள் (Annual Plan)**

- ரூ.166.73 கோடி மதிப்பிலான 64 கி.மீ நீளமுள்ள 3 சாலைப் பணிகள் மற்றும் 1 பாலப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் (Non Plan)**

- காலமுறை புதுப்பித்தல் / சிறப்புப் பழுதுபார்த்தல் தலைப்பின் கீழ், ரூ.14.90 கோடி மதிப்பிலான 54.72 கி.மீ நீளமுள்ள 5 சாலைப் பணிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

**புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம்**

- ரூ.21.87 கோடி மதிப்பிலான 28.20 கி.மீ நீளமுள்ள 3 சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராமப்புறச் சாலை அபிவிருத்தித் திட்டம்**

**திட்டம் பகுதி X (2016–2017)**

- ரூ.12.25 கோடி மதிப்பிலான 49.38 கி.மீ நீளமுள்ள 20 மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

**மாநிலங்களை இணைக்கும் சாலைத்திட்டம்**

- ரூ.4.34 கோடி மதிப்பிலான 24.30 கி.மீ நீளமுள்ள 1 சாலைப்பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**திட்டங்கள் அலகு**

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூடுவாஞ்சேரி அருகே ரூ.29.04 கோடி மதிப்பில் கடவு எண்.40க்கு மாற்றாக சாலை மேம்பாலம் 04.03.2017 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிங்காநல்லூர் அருகே ரூ.23.50 கோடி மதிப்பில் கடவு எண்.146க்கு மாற்றாக சாலை மேம்பாலம் 18.03.2017 அன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது.
- 1 சாலை மேம்பாலம் ரூ.49.42 கோடி மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டம், பொன்னேரிக்கரை அருகே 08.05.2017 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

**தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் – II**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக உலக வங்கி மூலம் US$300 மில்லியன் கடன் பெற வழி வகை செய்யும் கடன் மற்றும் திட்ட ஒப்பந்தங்கள் 28.05.2015இல் கையெழுத்திடப்பட்டது. கடன் ஒப்பந்தம் 10.07.2015 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாநிலத்தின் சாலை விரிவாக்கம், சாலை தரம் உயர்த்துதல், சாலைப் பாதுகாப்பு மற்றும் நிறுவன செயல்திறன் மேம்பாடு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ரூ.1,705 கோடி மதிப்பில், பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) வகை ஒப்பந்தம் மூலம் 427 கி.மீ நீளமுள்ள போக்குவரத்து செறிவு மிகுந்த மாநில சாலைகளை 10 தொகுப்புகளாக கடின தளப் பருவங்களுடன் கூடிய இரு வழிச் சாலையாக தரம் உயர்த்த ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. 16.02.2017 முதல் 15.05.2017ஆம் தேதி வரை 102.25 கி.மீ நீளத்திற்கு தார் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 93 சிறு பாலங்கள் (Culverts) மற்றும் 10 சிறிய பாலங்கள் (Minor Bridges) கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ஆற்காடு முதல் திருவாரூர் சாலை (265 கி.மீ நீளம்) மற்றும் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி சாலை (332 கி.மீ நீளம்) வரை உள்ள சாலையினை வெளித்திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான சாலை பராமரிப்பு ஒப்பந்தத்தின் (OPRC) கீழ், இரு தொகுப்புகளாக பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது 54.19 கி.மீ நீளத்திற்கு காலமுறை புதுப்பித்தல் பணிகள் முடிவடைந்துள்ளன.

❖ ❖ ❖

# உள்துறை, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத்துறை






**காவல் துறை**

- காவலர்கள் மற்றும் காவல் அதிகாரிகளுக்கு இடர்படி உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. அதன் மதிப்பு ஆண்டு ஒன்றிற்கு ரூ.60,73,42,500/–
- 100 எண்ணிக்கைகள் கொண்ட இரு சக்கர வாகனங்களும், 7 எண்ணிக்கை கொண்ட பேருந்துகளும், 5 எண்ணிக்கை கொண்ட சிறிய பேருந்துகளும் ரூ. 2,86,00,000/– செலவில் வாங்க அரசு ஆணையிடப்பட்டுள்ளது.
- 2 எண்ணிக்கை கொண்ட Bolero வாகனங்கள் ரூ. 13,00,000/– செலவில் வாங்கி NIB CID துறையை வலுப்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.
- அரசு ஒவ்வொரு நிதியாண்டிற்கு ரூ.5 கோடி தமிழ்நாடு காவல்துறை இயக்குநர் அவர்களின் விருப்புரிமை நிதியின் கீழ் பொருட்கள் வாங்க ஆணை வழுங்கப்பட்டுள்ளது. அத்தொகையிலிருந்து 16.02.2017 முதல் 15.05.2017 வரை ரூ.1,10,73,176/ 45 செயல்முறை ஆணைகளின் மூலம் நகரம்/ மாவட்டம் மற்றும் பிரிவு அலுவலகங்களுக்கு 938 பொருட்கள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ரூ.10.77 கோடி ஆணை வழங்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் சம்பவ இடங்களுக்கு விரைந்து செல்ல ஏதுவாக புதிய காவல் வாகனங்கள் வாங்க ரூ.2.86 கோடி, சாதனங்கள் மற்றும் இதர பொதுவான உபகரணங்கள் காவல் நிலையங்களுக்கு வாங்க ரூ.1.59 கோடி வழங்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் விஞ்ஞான காலத்தில் நவீன தகவல் தொலைத்தொடர்பு கருவிகள் / சாதனங்கள் வாங்க ரூ.6.32 கோடி, வழங்கப்பட்டுள்ளது.
- மாநில அரசின் நிருவாகம் மற்றும் நிதி ஒப்பளிப்பு மூலம் ரூ.0.43 கோடியில் திட்டங்களை செயல்படுத்த ஆணை. மரச் சாதனங்கள் வாங்க வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.4,99,500 மதிப்பில், சென்னை இருப்புப் பாதை காவல் அலுவலகத்திற்கு சுருக்கெழுத்து தட்டச்சர் (தரம் 3) பதவி வழங்கப்பட்டுள்ளது.
- ரூ.96,63,15,000 மதிப்பில், 2017ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படைக்கு 10,500 நபர்களை நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- ரூ.91,86,100 மதிப்பில் சென்னை உயர்நீதிமன்ற விழிப்பு பிரிவிற்கு கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- சென்னை தாம்பரம் சானடோரியம் மற்றும் சிட்டலபாக்கம் பகுதியில் அமைந்துள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பணப்பெட்டி பாதுகாப்புக்கு 1 த.கா. மற்றும் 6 இரண்டாம் நிலை ஆயுதப்படை காவலர்கள் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- 35 உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) பதவிகளை சரண் செய்து 25 துணை காவல்

கண்காணிப்பாளர்கள் (தொழில்நுட்பம்) பதவிகளை உருவாக்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- காவல் துறை தலைமை இயக்குநருக்கு துணை புரிய வழங்கப்பட்ட ஒரு சார்பு செயலாளர் (சட்டத்துறை) பதவியை துணைச் செயலாளர் (சட்டத்துறை) பதவியாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- திருச்சி மாநகர கன்டோன்மென்ட் பகுதியில் இயங்கி வரும் ஐசி ஐசிஐ வங்கிக்கு தொடர் பாதுகாப்புக்காக தலைமை காவலர் (ஆயுதப்படை) மற்றும் 3 இரண்டாம் நிலை காவலர் (ஆயுதப்படை) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- மதுரையில் இயங்கி வரும் சின்டிகேட் வங்கிக்கு தொடர் பாதுகாப்புக்கு 1 தலைமை காவலர் (ஆயுதப்படை) மற்றும் 6 இரண்டாம் நிலை காவலர் (ஆயுதப்படை) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டையில் இயங்கி வரும் மெர்கைன்டில் வங்கிக்கு தொடர் பாதுகாப்புக்கு 1 தலைமை காவலர் (ஆயுதப்படை) மற்றும் 6 இரண்டாம் நிலை காவலர் (ஆயுதப்படை) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வரின் விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணிப் பதக்கத்துடன் வழங்கப்படும் பண வெகுமதியினை காவல் உதவி ஆய்வாளர் (விரல் ரேகை)/ காவல் ஆய்வாளர் (விரல் ரேகை) மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் (விரல் ரேகை) / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (விரல் ரேகை) / காவல் கண்காணிப்பாளர் (விரல் ரேகை) ஆகியோருக்கு முறையே ரூ.10,000/– மற்றும் ரூ.15,000/–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வரின் சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப் பதக்கத்துடன் வழங்கப்படும் பண வெகுமதியினை ரூ.25,000/–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- தமிழக முதல்வரின் காவல் புலன் விசாரணை சிறப்புப் பணிப் பதக்கத்துடன் வழங்கப்படும் பண வெகுமதியினை ரூ.25,000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- காந்தியடிகள் பிறந்த நாளன்று காவலர் ஆளிநர்களுக்கு கள்ளச்சாராய ஒழிப்பிற்காக சிறப்பாக செயல்பட்டதிற்கான காந்தியடிகள் காவலர் விருது பதக்கத்துடன் வழங்கும் வெகுமதியினை ரூ.40,000/– மாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.
- பணியிலிருக்கும் போது இறக்கும் காவல் ஆளிநர்களின் குடும்பத்தினருக்கு ரூ.3 இலட்சம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டு வருகிறது. 16.02.2017 முதல் 15.05.2017 வரை பணியிலிருக்கும் போது மரணமடைந்த 101 காவல் ஆளிநர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணமாக ரூ.2.98 கோடி மாண்புமிகு தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.
- காவல்துறையில் பணிபுரியும் காவல் ஆளிநர்கள் பணியின் போது வீரதீர செயல்களில் ஈடுபட்டு மரணமடைவதும், படுகாயமடைவதும் மற்றும் ஊனமடையும் போது அவர்களுக்கு கருணைத் தொகையாக ரூ.10,000/– முதல் ரூ.5,00,000/– வரை வழங்கப்படுகிறது. அதன் விவரம் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.
- 16.02.2017 முதல் 15.05.2017 வரை இத்திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கு ரூ.2,20,000/– வழங்கப்பட்டுள்ளது.
- மறைந்த ஆயுதப்படை காவலர் 1593 வி.சங்கர் என்பவர் மஞ்சு விரட்டு நிகழ்ச்சியில் பொதுமக்களை காப்பாற்ற தனது கடமையினை செய்யும்போது காளை முட்டி அகால மரணமடைந்துள்ளதால் அவரது மனைவி திருமதி முத்துச்சடச்சி என்பவருக்கு காவல்துறையில் கருணை அடிப்படையில் முன்னுரிமை அளித்து சிறப்பு நிகழ்வாக (Special Case) கருதி இளநிலை உதவியாளருக்கான பணி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.
- தமிழக அரசு சென்னை பெருநகரத்தில் வசிக்கும் காவல் ஆளிநர்கள் பயனடையும் வகையில் கூடுதலாக ஒரு காவல் அங்காடியை (Police Canteen) நிறுவ ரூ.7,90,000/ வழங்கி உத்தரவிட்டுள்ளது.

**சிறைத்துறை**

- அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச்சிறைகள் மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் பாதுகாப்பு ஏற்பாட்டினை மேம்படுத்திட ரூ.4 கோடி செலவில் 100 கூடுதல் கண்காணிப்பு கேமிராக்கள் மற்றும் ஐ.பி. கேமிராக்கள் வாங்கிடவும் சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கு அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய மின்னணு அட்டை (Smart Card) வாங்கிடவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.



- பெண்கள் தனிச்சிறை, மாவட்ட சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் புதியதாக 47 சமையலர்கள் பணியிடம் தோற்றுவித்திட தொடர் செலவினமாக ரூ.84.51 இலட்சம் செலவில் வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- கோவை மத்திய சிறையின் நெசவுக் கூடத்திலுள்ள அளவிடல் இயந்திரங்களை மேம்படுத்திட ரூ.9.87 இலட்சம் வழங்கி ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- சிறைத்துறையில் உள்ள கட்டடங்களில் ஏற்படும் சிறு கட்டுமான பணிகள் மேற்கொள்ள சிறைத்துறை அதிகாரிகளின் செலவின அதிகாரத்தினை உயர்த்தி அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

- நிலைய அலுவலர்கள் அவர் தம் பணியினை செவ்வனே செய்ய முதற்கட்டமாக ரூ.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 30 விசை மிதிவண்டிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.
- விஸ்தரிக்கப்பட்ட சென்னை பெருநகரத்தில் பெருகி வரும் பல மாடிக் கட்டடங்களில் ஏற்படக்கூடிய தீயணைப்பு – மீட்புப் பணி சேவைகளை எதிர்நோக்கும் வகையில் தீயணைப்பு – மீட்புப் பணிகள் துறை பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யப்பட்ட 54 மீ உயரம் வரை செல்லக்கூடிய ஒரு நீட்டிப்பு ஏணி ஊர்தி மற்றும் பெரும் அடுக்குமாடி கட்டடங்களை கருத்திற்கொண்டு ரூ.4,603.97 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 104 மீ வான் நோக்கி உயரும் ஏணி கொண்ட 2 ஊர்திகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தீயணைப்பு – மீட்புப் பணிகள் துறைக்கு 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.
- இத்துறை அலுவலர்களும், பணியாளர்களும் விபத்து இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக ஜீப்புகள், சீருந்துகள், சிறிய பேருந்துகள், பெரிய பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற சார்பு ஊர்திகள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. எந்த வகையான அவசர காலத்திலும் முதன்மை

பொறுப்பாளர்களாக பணி புரியும் உதவி மாவட்ட அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக முதற்கட்டமாக ரூ.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 10 ஜீப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.

- வெள்ள காலங்களிலும் மற்றும் நீர்நிலைகளிலும் மீட்புப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக ரூ.32.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 13 நீட்டிச் சுருக்கும் ஆற்றல் கொண்ட மின் மோட்டார் இணைந்த ரப்பர் படகுகள் மற்றும் ரூ.25.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 17 நீட்டிச்சுருங்கும் ஆற்றல் கொண்ட மின் மோட்டார் அற்ற படகுகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.
- இருள் சூழ்ந்த இடங்களில் திறம் பட பணி மேற்கொள்வதற்காக ரூ.40.30 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 20 எளிதில் துக்கிச் செல்லக்கூடிய அவசர கால மின் விளக்குகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.
- 15 ஆண்டுகளுக்கு மேல் உழைத்துள்ள பழைய நீர்தாங்கி வண்டிகளுக்கு பதிலாக ரூ.304.11 இலட்சம் செலவில் கட்டுமானம் செய்யப்பட்ட 12 புதிய நீர்தாங்கி வண்டிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று வழங்கப்பட்டது.
- தீ விபத்து மற்றும் உயிர் மீட்புப் பணிகளுக்கான ஆட்பலத்தினை திரட்டி விரைந்து அனுப்புவதில் தீயணைப்பு – மீட்புப் பணி நிலையங்களுக்கு அருகிலேயே பணியாளர்களை குடியமர்த்தும் வகையில் சென்னை தங்கசாலையில் ரூ.105.68 இலட்சம் செலவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம் மூலம் கட்டுமானம் செய்யப்பட்ட தீயணைப்போருக்கான 6 குடியிருப்புகள் மற்றும் சென்னை வண்ணாரப்பேட்டையில் ரூ.73.22 இலட்சம் செலவில் கட்டுமானம் செய்யப்பட்ட நிலைய அலுவலர்களுக்கான 3 குடியிருப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று காணொளி மூலம் திறக்கப்பட்டது.
- திருப்பூர் மாவட்டம் காங்கேயம் தீயணைப்பு – மீட்புப்பணி நிலையத்திற்கு ரூ.66.96 இலட்சம் செலவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தினரால் கட்டுமானம் செய்யப்பட்ட புதிய நிரந்தரக் கட்டடம் காணொளி காட்சி மூலம் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னையில் உள்ள தீயணைப்பு – மீட்புப் பணி நிலையங்களில் புதியதாக பணியில் சேரும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த திருமணம் ஆகாத பணியாளர்கள் தங்குவதற்கு ஏதுவாக, சென்னை தங்க சாலையில் ரூ.113.13 இலட்சம் செலவில் கட்டுமானம் செய்யப்பட்ட 50 நபர்கள் தங்கக் கூடிய படைக்குடியிருப்புகள் (Barrack) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று காணொளி மூலம் திறக்கப்பட்டது.

**குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

- மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியின் இசைவுடன் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம், பிரிவு 25–அ (Cr.PC 25-A) Cr,ன்படி இவ்வியக்ககத்தில் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் / அரசு கூடுதல் வழக்கு நடத்துநர் தரத்தில் பணியாற்றும் 8 சட்ட அலுவலர்களை அவர்களின் பணி மூப்பு அடிப்படையில் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் மற்றும் 7 துணை இயக்குநர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள்.

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம்**

- 1,108 காவலர் வாடகை குடியிருப்புகள் ரூ.135.43 கோடி செலவிலும், 51 காவல் நிலையங்கள் ரூ.31.54 கோடி செலவிலும் மற்றும் 22 இதர கட்டடங்கள் ரூ.27.50 கோடி செலவிலும், 13 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை குடியிருப்புகள் ரூ.1.08 கோடி செலவிலும், 1 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் பணியாளர்களுக்கான பாசறை ரூ.1.13 கோடி செலவிலும் மற்றும் 1 சிறைத்துறை பணியாளர்களுக்கான பாசறை ரூ.0.30 கோடி செலவிலும் 16.02.2017 முதல் 15.05.2017 வரை உள்ள காலக் கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**நீதிமன்றங்கள்**

- 2013–2014 ஆண்டுகளுக்கான காலிப் பணியிடங்களில் 4 நபர்கள் உரிமையியல் நீதிபதிகளாக நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- சென்னை, தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழக நூலகருக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர்

பணியிடம் ரூ.7,30,350/– செலவீனத்தில் வழங்கப்பட்டது.

- சென்னை, தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சிக் கழகத்திற்கு கூடுதலாக 30 பணியாளர்கள் ஆண்டிற்கு ரூ.1,33,53,672/– செலவீனத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- நீதிபதிகளின் சட்ட பணியாளர்களின் மாத மதிப்பூதியம் ரூ.10,000/– இருந்து ரூ.15,000/–ஆக ஆண்டிற்கு ரூ.36,00,000/– இலட்சம் கூடுதல் தொடரும் செலவில் உயர்த்தப்பட்டது.
- சென்னையில் இயங்கி வரும் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் மற்றும் போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் சட்டம் ஆகிவற்றின் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களுக்கு புதியதாக 9 பணியாளர்களை ரூ.25.62 இலட்சம் செலவினத்தில் ஒப்பளிப்பு.
- தேனி, பரமக்குடி, ஆரணி, நாகர்கோவில், விழுப்புரம், பழனி, மேட்டூர், கும்பகோணம், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பத்து இடங்களில் உள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களுக்கு (விரைவு நீதி மன்றங்கள்), தலா 10 கூடுதல் பணியிடங்கள் வீதம் மொத்தம் 70 பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கும் செலவினமாக ரூ.267.32/–இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- சென்னை மாவட்டம், சைதாப்பேட்டையில் மாற்றத்தக்க ஆவணங்கள் சட்டம் (Negotiable Instrument Act) கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க, குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில், ஒரு விரைவு நீதிமன்றம் தோற்றுவிக்க ரூ.55.83 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மதுரையில் இயங்கி வரும் சென்னை உயர்நீதிமன்ற கிளைக்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில், ஒரு கூடுதல் தலைமைப் பதிவாளர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் ஒரு கூடுதல் பதிவாளர்–II (விழிப்புப்பணி), ஒரு கூடுதல் பதிவாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் புள்ளியியல்) மற்றும் ஒரு இணைப்பதிவாளர் (கணினி) ஆக மொத்தம் நான்கு பணியிடங்களை புதியதாக தோற்றுவிக்க ஒப்பளிப்பு.
- கரூர் மாவட்டம், கரூரில் இயங்கி வரும் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு இரண்டு அலுவலக உதவியாளர் பணியிடமும், ஒரு தோட்டப் பணியாளர் பணியிடமும் மற்றும் ஒரு துப்புரவு பணியாளர் பணியிடமும் ஆக மொத்தம் 4 கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு.
- தருமபுரி மாவட்டம், தருமபுரியில் இயங்கி வரும் நிலஅபகரிப்பு சிறப்பு நீதிமன்றத்திற்கு ஒரு பதிவுரு எழுத்தர் பணியிடமும் மற்றும் தருமபுரியில் இயங்கி வரும் விரைவு நீதிமன்றத்திற்கு (குற்றவியல் நடுவர் நீதிபதி) ஒரு மசால்ட்சி (Masalchi) பணியிடம் ஏற்படுத்துவதற்கு ஒப்பளிப்பு.
- திருச்சிராப்பள்ளியில் இயங்கி வரும் ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (Prevention of Corruption Act)-இன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு ஒரு சிரஸ்ததார் (Sherishtadar) பணியிடம் தோற்றுவிக்கவும், மேலும், ஒரு உதவியாளர் பணியிடத்தை நீதிமன்ற எழுத்தர் தரம்–II (Bench Clerk Grade-II) ஆக தரம் உயர்த்தவும் செலவினமாக ரூ.10.79 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- இம்மாநிலத்தில் இயங்கி வரும் பல்வேறு நீதிமன்றங்களுக்கு ஒளிநகல் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.6.15 இலட்சம் ஒப்பளிப்பு.
- பாலியல் வன்முறை வழக்குகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த வழக்குகள் ஆகியவற்றை விசாரிக்க, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் தலா ஒன்று வீதம் தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், நீலகிரி, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர், விழுப்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர், அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய 22 மகளிர் நீதிமன்றங்கள் (விரைவு மகளிர் நீதிமன்றங்கள்) இயங்கி வரும் இடங்களில், குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில் 22 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் அமைக்க, 2016–2017 முதல் 2017–2018 வரை ஆண்டிற்கு 11 நீதிமன்றங்கள் வீதம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.883.83 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- சென்னை உயர்நீதிமன்றத்தில், பணியாளர் தேர்வு மற்றும் பணி நியமனம் தொடர்பான மாண்புமிகு நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு உதவிடும் வகையில் ஏற்படுத்தப்படவிருக்கும் தனிபிரிவிற்கு, பதிவாளர் மற்றும் 12 அலுவலர்கள் பணியிடங்களை புதிதாக தோற்றுவிக்க செலவினமாக ரூ.99.80/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்றத்தில், ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் / உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் / நீதிபதிகள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு நலன் சார்ந்த பலன்கள் / பணிகள் கவனித்துக் கொள்ள ஏற்படுத்தப்படவிருக்கும் தனிப்பிரிவிற்கு, 10 அலுவலர்கள் பணியிடங்களை ரூ.54.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளைக்கு, 170 கூடுதல் பணியிடங்களை புதியதாக தோற்றுவிக்க செலவினமாக ரூ.972.01 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் ஒரு நடமாடும் நீதிமன்றம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.70.75 இலட்சம் செலவில் நிதி ஒப்பளிப்பு.

- சென்னையில், பரிசுச் சீட்டு மற்றும் பண சுழற்சித் திட்ட (தடைச்) சட்டம், 1978இன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண்.3876/2009–ஐ பிரத்யேகமாக விசாரிக்க, சார்பு நீதிபதி பதவித் தரத்தில், ஒரு சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்த செலவினமாக ரூ.71.16 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூரில் சுங்கவரிச் சட்டம், 1962 (Customs Act, 1962) மற்றும் தொடர்புடைய பிற வழக்குகளைப் பிரத்யேகமாக விசாரிக்க, குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில், ஒரு சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்த செலவினமாக ரூ.69.55 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- 2016இல் நடைபெற்ற உச்சநீதிமன்ற மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் தனிபிரிவிற்கு, பதிவாளர் மற்றும் 11 அலுவலர்கள் பணியிடங்களை ரூ.103.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- சென்னையில், போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ளநோட்டுக்கள் தொடர்பான வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க, உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் [Civil Judge (Junior Division)] அமைப்பதற்கு செலவினமாக ரூ.61.58 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் நில அபகரிப்பு தொடர்பான வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய ஒரு சிறப்பு நீதிமன்றம் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி தரத்தில் அமைப்பதற்கு செலவினமாக ரூ.62.69 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.75.11 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் மாற்றத்தக்க ஆவணங்கள் சட்டம் (Negotiable Instrument Act) கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க, குற்றவியல் நடுவர் நீதிபதி பதவித் தரத்தில், ஒரு சிறப்பு நீதிமன்றம் ஏற்படுத்த செலவினமாக ரூ.61.38 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் கூடுதலாக ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஏற்படுத்த செலவினமாக ரூ.76.66 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்துாரில் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவி தரத்தில் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.64.48 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- தமிழகத்தில் 51 வட்டங்களில், சிறப்பு நடுவர் நீதிமன்றங்களை ரூ.2,843.29 இலட்சம் செலவினத்தில் 2016–2017 முதல் 2018–2019 வரை மூன்று கட்டங்களாக ஏற்படுத்துவதற்கு நிருவாக ஒப்புதலும், 2016–2017ஆம் ஆண்டிற்கான முதல் கட்டமாக 17 வட்டங்களில் சிறப்பு நடுவர் நீதிமன்றங்களை ரூ.947.76 இலட்சம் நிதி ஒப்பளிப்பு .

- பட்டியல் இன வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 தொடர்பாக பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில், திண்டுக்கல், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தேனி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருவாரூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், கடலூர், நாமக்கல் மற்றும் விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில், தலா ஒன்று வீதமாக 16 சிறப்பு நீதிமன்றங்களை 2016–2017 முதல் 2019–2020 வரை ஆண்டிற்கு 4 நீதிமன்றங்கள் வீதம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.1,288.99 இலட்சம் நிருவாக ஒப்புதலும், மற்றும் 2016–2017ஆம் ஆண்டிற்கான 4 சிறப்பு நீதிமன்றங்கள் தலா ஒன்று வீதமாக திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும்

விருதுநகர் மாவட்டத்திலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் அமைப்பதற்கு செலவினமாக ரூ.322.24 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.

- தெற்கு தொடர்வண்டித்துறை சென்னை மண்லடத்தில், தொடர்வண்டித்துறை சட்டத்தின் (Railway Act) கீழ் பதிவாகும் சிறு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்கு சிவில் நிதிபதி இளநிலை பதவித் தரத்தில் ஒரு நடமாடும் நீதிமன்றத்தினை ரூ.32.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மதுரை மாவட்டம், மதுரையில் The Mines and Minerals (Development and Regulation) Amendment Act, 2015இன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்ய மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைப்பதற்கு செலவினமாக ரூ.149.82 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் செயல்பட்டு வரும் நூலகத்திற்கு 22 கூடுதல் பணியிடங்களை புதியதாக தோற்றுவிக்க செலவினமாக ரூ.93.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு.
- மதுரை மாவட்டம் மாட்டுத்தாவணியில் உள்ள 272 நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புக்கு தீ தடுப்பு உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.53.90 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதிபதிகளின் மாளிகைகளுக்கு கட்டுமானப் பணிகள் செய்வதற்கும் / கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.284 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துவதற்கு ரூ.500.32 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- மதுரை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை மாவட்டம் மாட்டுத்தாவணியில் உள்ள 272 நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புக்கு பழுதுப்பார்க்கும் பணி / பராமரிப்பு பணிகளுக்கு ரூ.601.15 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- மதுரை மாவட்டம் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் எல்.டி கேபிள், சுவிட்சு கியர், பகிர்மான பலகை போன்றவற்றை புதுப்பிக்கவும், உயர் அழுத்த மின் சாதனங்களை சீரமைப்பு பணிகளுக்கும் ரூ.105 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- மாநிலத்தில் உள்ள பல மாவட்டங்களில் உள்ள நீதிமன்ற கட்டடங்களில் நீதிபதிகள், அலுவலர், பொதுமக்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளின் பயன்பாட்டிற்காக கழிப்பிடம் கட்டி தருவதற்கான பணிகளுக்கு ரூ.909.71 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- மதுரை மாவட்டம் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையின் நிருவாக கட்டடத்தில் உள்ள அறை மற்றும் பிரிவுகளை 8 நீதிமன்ற அறைகளாக மாற்றுவதற்கும் உயர்நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில், 8 நீதிபதிகள் மாளிகைகளை கட்டுவதற்கும் ரூ.1,826.13 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- சென்னை உயர்நீதிமன்றத்தில் கட்டுமான மற்றும் மின்சார பராமரிப்பு பணிகளுக்கு கூடுதலாக ரூ.361.13 இலட்சம் செலவீனம் ஒப்பளிப்பு.
- சென்னையிலுள்ள கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்ற கட்டடத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட நான்கு கூடுதல் குடும்ப நல நீதிமன்றங்களையும் மாண்புமிகு நீதிபதிகளின் அரங்குகள் மற்றும் அலுவலகங்களையும் அமைப்பதற்கு சிறப்பு பராமரிப்பு பணிகளுக்கு ரூ.62 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு.
- மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 48 புதிய நீதிமன்றங்கள் ரூ.3,626.45/– இலட்சம் செலவில் அமைத்தல்.
- வேலூர் மாவட்டம் வேலூரில் கூடுதல் சார்பு நீதிமன்றம் ரூ.66,32,446/– செலவில் அமைத்தல்.
- புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றி ரூ.28,51,550/– செலவில் அமைத்தல்.
- மதுரை மாவட்டம் மேலூரில் சார்பு நீதிமன்றம் ரூ.94,56,758/–செலவில் அமைத்தல்.
- திருநெல்வேலி மாவட்டம் சிவகிரியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ரூ.78,94,186/– செலவில் அமைத்தல்.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் சார்பு நீதிமன்றம் ரூ.89,39,202/– செலவில் அமைத்தல்.

- 14ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ் நீதிமன்றங்களில் சமரசம் மற்றும் சமாதான (Incentives to Mediation and Conciliation) நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக சமரசம் செய்வோர்களின் (வழக்குரைஞர்களுக்கு) பயன்பாட்டிற்கு ரூ.12,08,00,000/– நிருவாக செலவினமாகவும் 2016–2017 ஆண்டிற்கான செலவாக ரூ.3,02,00,000/– ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர்–1 அலுவலக பயன்பாட்டிற்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ.2,48,240/– செலவில் ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள ஆலோசனை மற்றும் சமரச மையத்திற்கு புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கவும், சீற்றுந்து மற்றும் அறைகலன்கள் கொள்முதல் செய்யவும் ரூ.1.07 கோடி ஒப்பளிப்பு.

- 14ஆவது நிதிக்குழுவின் பரிந்துரையின் கீழ் வழக்குரைஞர்களுக்கு மற்றும் மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்க (Training to Mediators and Lawyears) பயன்பாட்டிற்கு ரூ.3.06/– கோடி நிர்வாக செலவினமாகவும் 2016–2017 ஆண்டிற்கான செலவாக ரூ.1.2075/– கோடி ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள சட்ட அலுவலர் அலுவலக ஐந்தாவது தளத்தில் உணவருந்தும் கூடமும், புதிய வளாகத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் பிற வசதிகள் அமைக்க ரூ.2.02 கோடி ஒப்பளிப்பு.

- நீதித்துறையிலுள்ள ஆவணங்களை கணினிமயமாக்க ரூ.27.67 கோடி நிருவாக செலவினமாக ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள மின்மாற்றியின் தரத்தை 500 KVA லிருந்து 1,000 KVA ஆக மாற்றுவதற்காக ரூ.2.30 கோடி ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இயங்கிவரும் ஆவணப் பிரிவிற்கு தளவாடங்கள் கொள்முதல் செய்ய ரூ.35.40 இலட்சம் ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்றத்தில் பணிபுரியும் மேலும் ஐந்து பதிவாளர்களுக்கு ஆப்பிள் ஐ பேடு கொள்முதல் செய்ய ரூ.3.43 இலட்சம் ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற பயன்பாட்டிற்கு, மேலும் 10 அதிநவீன ஸ்கேனர்கள் கொள்முதல் செய்ய ரூ.23.29 இலட்சம் ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள சட்ட அலுவலர் அலுவலக நான்காவது தளத்தில் அமைந்துள்ள கூடுதல் அரசுத் தலைமை வழக்கறிஞர்கள் I, II, IV & V அலுவலகங்களுக்கு குளிரூட்டும் வசதி மற்றும் பிற வசதிகள் அமைக்க ரூ.45.79 கோடி ஒப்பளிப்பு.

- சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இயங்கிவரும் கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணினி, ஒளிநகல் கருவி மற்றும் அறைகலன்கள் கொள்முதல் செய்ய ரூ.6.16 இலட்சம் ஒப்பளிப்பு.

- மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களுடைய துணைப்பதிவாளர் மற்றும் கூடுதல் தனிச் செயலாளர் பதவியினை, (ரூ.15,600–39,100 + த.ஊ. 7,600/– என்ற சம்பள விகிதத்தை) இணைப்பதிவாளர் மற்றும் கூடுதல் தனிச் செயலாளராக ரூ.37,400–67,000 + த.ஊ. 8,700/– என்ற சம்பள ஏற்றமுறையில் நிலை உயர்த்தி அரசாணை.

- தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப்பணிகளில் வகுப்பு IV-இல் நிலை 2ல் உள்ள சார்பு நீதிமன்ற நீதிபதிகள் ஷெரஸ்தர், மாவட்ட நீதிமன்ற தலைமை எழுத்தர், சென்ட்ரல் நசீர் ஆகிய பணியிடங்களுக்கு ஊதிய விகிதத்தை ரூ.1,600–2,660 இல் இருந்து ரூ.1,700–60–2,480–75–3,005 என்ற விகதித்திற்கு அரசாணை வெளியிட்டுள்ள நாளில் இருந்து கருத்தியலாகவும், அதற்கு தொடர்புடைய திருத்திய ஊதிய விகிதமாக ரூ.5,700–9,200–த்தினை பணப்பயன் பெறும் வகையில் தளர்த்தி அவ்வாணை வெளியிட்ட நாள் முதல் வழங்கி அரசாணை.

- சென்னை உயர்நீதிமன்றத்திற்கு முதல் 30 முதுநிலை நீதிமன்ற அலுவலர் / பிரிவு அலுவலர் / மேல்முறையீட்டு அலுவலர்களின் ரூ.15,600–39,100 + த.ஊ. 5,400/– என்ற சம்பள விகிதத்தை ரூ.15,600–39,100 + த.ஊ. 6,600/– என்ற சம்பள ஏற்றமுறையிலும், அடுத்த 30 முதுநிலை நீதிமன்ற அலுவலர் / பிரிவு அலுவலர் / மேல்முறையீட்டு அலுவலர்களின் ரூ.15,600–39,100 + த.ஊ. 5,400/– என்ற சம்பள விகிதத்தை ரூ.15,600–39,100 + த.ஊ. 5,700/– என்ற சம்பள ஏற்றமுறையிலும், நிலை உயர்த்தி அரசாணை.

- கோயம்முத்தூர் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்திற்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர் பணியிடங்களை உருவாக்கி நிருவாக ஒப்புதல்.

- கன்னியாகுமரி மாவட்டத்தில் தினக்கூலி மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றும் 5 பகுதி நேர துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்கி அரசாணை.

- சென்னை பெருநகர குற்றவியல் நீதிமன்றங்களுக்கு (V to IX, XII to XVIII and XXIII) 13 பென்ச் கிளர்க் தரம்–III பதவி ரூ.5,200–20,200+ த.ஊ. 2,800 என்ற சம்பள விகிதத்தை 13 பென்ச் கிளர்க் தரம்–II பதவியாக நிலை உயர்த்தி ரூ.9,300–34,800 + த.ஊ. 4,300/– என்ற சம்பள ஏற்ற முறையில் உயர்த்தி வழங்கி அரசாணை.

- தமிழ்நாடு குற்ற வழக்கு தொடர்வு துறையில் காலியாக உள்ள நிலை–2 அரசு உதவி வழக்கு நடத்துனர் பணியிடத்திற்கு புதிதாக 2 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- ரூ.57,08,413/– செலவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் அலுவலக பயன்பாட்டிற்காக தகவல் தொழில் நுட்ப பொருட்கள் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- ரூ.12,84,517/–செலவில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், செஞ்சி, உளுந்தூர்பேட்டை தாலுக்காவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு குறும்பரப்பு வலையமைப்பு வசதி அளிக்க நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை.

- ரூ.1,74,21,191/– செலவில் சென்னை மாவட்டத்தில் உள்ள மாநகர உரிமையியல் நீதிமன்றங்களுக்கு கனிணி மற்றும் தகவல் தொழில் நுட்ப பொருள்கள் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- ரூ.62,32,064/– செலவில் மாநிலத்தில் உள்ள மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ள 8 குடும்ப நல நீதிமன்றங்களுக்கு 8 வாகனங்கள் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- ரூ.6,11,498/– செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முதன்மை குற்றவியல் நீதிபதியின் அலுவலக பயன்பாட்டிற்காக புதிய மாருதி டிசையர் வாகனம் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- ரூ.6,33,960/– செலவில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள முதன்மை குற்றவியல் நீதிபதியின் அலுவலக பயன்பாட்டிற்காக புதிய மாருதி டிசையர் வாகனம் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- ரூ.2,86,520/– செலவில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதி அரசர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 6 இணைய தள இணைப்பு வசதியுடன் கூடிய தொலைபேசி இணைப்பு மற்றும் 7 புதிய தொலைபேசி இணைப்பிற்காக நிதி ஒப்பளிப்பு.

- ரூ.5,02,120/– செலவில் சென்னை உயர்நீதிமன்ற நீதி அரசர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 19 இணைய தள இணைப்பு வசதியுடன் கூடிய தொலைபேசி இணைப்பு மற்றும் 5 புதிய தொலைபேசி இணைப்பிற்காக நிதி ஒப்பளிப்பு.

- ரூ.3,75,000/– செலவில் சென்னை உயர்நீதிமன்ற நீதி அரசர்களின் பயன்பாட்டிற்காக புதிய 15 செல்பேசி (Cell Phone) வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு.

- தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களுக்கு பல்வேறு வகைப்பட்ட 1,075 கூடுதல் பணியாளர்கள் பணியிடங்கள் ரூ.36,71,63,284/– செலவில் தோற்றுவித்து ஆணை.

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள லால்குடி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு பல்வேறு வகைப்பட்ட 19 கூடுதல் பணியாளர்கள் பணியிடங்கள் ரூ.86,50,416/– செலவில் தோற்றுவித்து ஆணை.

- கும்பகோணம் ஒருங்கிணைந்த நீதிமன்றம் வளாகத்தில் பணிபுரியும் துப்புரவு பணியாளரை முதன்மை குற்றவியல் நீதிமன்றத்திற்கு நியமித்து ரூ.1,17,760/– ஆணை.

- கரூர் மாவட்டம் – மாவட்ட நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதலாக 1 துப்புரவு பணியாளர் நியமனம் செய்து ரூ.8,68,925/– ஆணை.

- நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறையில் இயங்கும் நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதலாக 2 மின் தூக்கி இயக்குபவர் மற்றும் துப்புரவு பணியாளர் நியமனம் செய்து ரூ.7,53,624/–ஆணை.

- தருமபுரி மாவட்டம் – முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதலாக 1 இளநிலை உதவியாளர் பணி தோற்றுவித்து ரூ.2,65,075/– ஆணை.

- விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு 1 தோட்டக்காரர் மற்றும் துப்புரவாளர் பணியாளர் பணியிடம் தோற்றுவித்து ரூ.5,02,416/– ஆணை.
- ஈரோடு மாவட்டம் – ஒருங்கிணைந்த குற்றவியல் நீதிமன்றம் கட்டடத்திற்கு ஒரு மின்தூக்கி இயக்குபவர் பணி தோற்றுவித்து ரூ.2,51,208/– ஆணை.
- கும்பகோணம், திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்கும் ஒருங்கிணைந்த நீதிமன்றம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களுக்கு பல்வேறு வகைப்பட்ட கூடுதல் பணியாளர்கள் பணியிடங்கள் தோற்றுவித்து ரூ.35,95,700/– ஆணை.
- சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கு கூடுதலாக 10 தட்டச்சர்கள் நியமனம் செய்து ரூ.42,81,000/– ஆணை.
- திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கும் முதன்மை குற்றவியல் நீதிமன்றத்திற்கு, பல்வேறு வகைப்பட்ட 6 கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்து ரூ.27,67,608/– ஆணை.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இயங்கும் நீதிமன்றங்களுக்கு கூடுதலாக 10 தட்டச்சர் பணியாளர்கள் நியமனம் செய்து ரூ.43,47,840/– ஆணை.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் இயங்கும் மாவட்ட நீதிமன்றத்திற்கு கூடுதலாக 3 நகல் பணியாளர் / அலுவலக உதவியாளர்கள் மற்றும் 2 ஜெராக்ஸ் இயந்திரம் இயக்குபவர் நியமனம் செய்து ரூ.12,75,528/– ஆணை. இதர உபகரணங்களுக்கு ரூ.2,42,000/–க்கு ஆணை.
- சேலம் மாவட்டம் – ஓமலூரில் இயங்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கூடுதலாக 11 பல்வேறு வகைப்பட்ட பணியாளர்கள் நியமனம் செய்து ரூ.34,37,040/– ஆணை.
- நாமக்கல் மாவட்டம் – திருசெங்கோடு ஒருங்கிணைந்த நீதிமன்றங்களுக்கு 12 பல்வேறு வகைப்பட்ட பணியாளர்கள் நியமனம் செய்து ரூ.40,17,600/– ஆணை.
- திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதலாக 12 பல்வேறு வகைப்பட்ட பணியாளர்கள் நியமனம் ரூ.33,45,200/– செய்து ஆணை வழங்கப்பட்டது. மேலும், முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு கணினி மற்றும் இதர உபகரணங்களுக்கு ரூ.2,35,000/– ஒப்பளிப்பு.
- திருநெல்வேலி மாவட்டம் – வள்ளியூரில் இயங்கும் சார்பு நீதிமன்றத்திற்கு கூடுதலாக பல்வேறு வகைப்பட்ட 7 பணியாளர்கள் தோற்றுவித்து ரூ.40,19,424/– ஆணை.
- திண்டுக்கல் மாவட்டம் – வேடசந்தூரில் இயங்கும் சார்பு நீதிமன்றத்திற்கு கூடுதலாக 3 பெஞ்ச் கிளார்க் (நிலை 2) தோற்றுவித்து ரூ.22,87,152/– ஆணை.
- பெரம்பலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டடத்திற்கு கூடுதலாக 3 மசால்சி மற்றும் 2 இரவு காவலர் பணியிடங்கள் தோற்றுவித்து ரூ.12,56,040/– ஆணை.
- தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு கூடுதலாக பல்வேறு வகைப்பட்ட 10 பணியாளர் பணியிடம் தோற்றுவித்து ரூ.42,17,568/– ஆணை.
- திண்டுக்கல் மாவட்டத்தில் இயங்கும் அனைத்து மாவட்ட நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு கூடுதலாக 24 கணிப்பொறி இயக்குபவர் பணியிடம் தோற்றுவித்து ரூ.1,04,34,816/– ஆணை வெளியிடப்பட்டது. இதர உபகரணங்களுக்கு ரூ.13,20,000/–க்கு ஆணை.
- நாமக்கல் மாவட்டத்தில் இயங்கும் சார்நிலை நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு பல்வேறு வகைப்பட்ட கூடுதலாக 14 பணியிடங்கள் தோற்றுவித்து ரூ.60,85,536/– ஆணை வழங்கப்பட்டது. இதர உபகரணங்களுக்கு ரூ.1,43,250/–க்கு ஆணை.
- திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கும் சார்பு நீதிமன்றம் மற்றும் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கு 11 கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்து ரூ.45,79,008/– ஆணை.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் இயங்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சேலம் மாவட்டத்தில் இயங்கும் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடத்திற்கு கூடுதல் பணியாளர்கள் தோற்றுவித்து ரூ.10,07,616/– ஆணை.

❖ ❖ ❖

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை



**தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்**

- ரூ.624.93 கோடி மதிப்பீட்டில் 1,378 புதிய குடியிருப்பு அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு / மேம்படுத்தப்பட்டுள்ளன.
- 1,043 ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத் திறனாளிகளுக்கு வாரியத் திட்டங்களில் 10 அலகுகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
- 546 குடியிருப்பு அலகுகள் விற்பனை செய்ததன் மூலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ.170.95 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.
- 2 வணிக அலகுகள் விற்பனை செய்ததன் மூலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ.2.97 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்**

- ரூ.593.88 கோடி மதிப்பில் 14 திட்டப்பகுதிகளில் 9,847 குடியிருப்புகள் / வீடுகள் தொடங்கி வைக்கப்பட்டன.
- ரூ.1.72 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்ட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய கோவை சரகம் மற்றும் கோட்ட அலுவலக வளாகம் திறந்து வைக்கப்பட்டது.
- 168 குடியிருப்புகள் மற்றும் 132 மனைகளுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 1,736 குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- சென்னை (ஆப்பூர்), ஆட்டோ நகரில் ரூ.19.64 கோடி செலவில் 1,657 வணிக மனைகள் மேம்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கோவையில் 5 திட்டப்பகுதிகளில்

கட்டப்பட்டுள்ள 7,136 குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோக அமைப்புகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ரூ.19.51 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- பெரும்பாக்கம் மறுகுடியமர்வு திட்டப்பகுதியில் 100 அடி சாலை அமைக்க ரூ.6.38 கோடி மற்றும் பேருந்து நிலையம்/பணிமனை அமைக்க ரூ.4.70 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.
- அனைவருக்கும் வீட்டுவசதித் திட்டத்தின் ஒருபகுதியாக குடியிருப்புகள் / வீடுகள் கட்டுவதற்கு ரூ.133.46 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.
- அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 24,576 குடியிருப்புகள் / வீடுகள் ரூ.833.58 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.
- மூலதன செலவினமாக ரூ.123.99 கோடி பல்வேறு திட்டப்பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.
- 64 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 17 இளநிலைப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

**கூட்டுறவு வீட்டுவசதித் துறை**

- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தால் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்துடன் 31.03.2017இல் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, 2017–2018ஆம் ஆண்டிற்கான தவணைக் கட்டணமாக ரூ.28,69,020/– செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,188 ஊழியர்களுடன் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் 3,564 பேர் சேர்த்து ஆகமொத்தம் 4,752 பேர் பயனடைவார்கள்.
- சிறப்புக் காசுக்கடனாக ரூ.30 இலட்சம் வீதம் இரண்டு முதன்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.60 இலட்சம் கடன் வழங்கப்பட்டது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தால் 16.02.2017 முதல் 16.05.2017 வரை முதன்மை கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 231 உறுப்பினர்களுக்கு ரூ.8.57 கோடி அடமானக்கடன் வழங்கப்பட்டது.
- சென்னைப் பெருநகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் ஐம்புலி காலனி, மாதவரத்தில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் திருமண மகால் 11.05.2017அன்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் 16.02.2017 முதல் 16.05.2017 வரை 1,054 உறுப்பினர்களின் கடன் கணக்குகள் முடிக்கப்பட்டு விற்பனைப் பத்திரங்கள் திரும்ப வழங்கப்பட்டுள்ளன.
- மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் ஏழை எளியோர்கள் பயனடையும் வகையில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் ஐந்து அம்மா திருமண மண்டபங்கள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டு அரசாணை வழங்கப்பட்டது. அரசாணையின் அடிப்படையில் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களால் இத்திட்டத்தினை உரிய காலத்தில் துரிதமாக முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நகர் ஊரமைப்பு இயக்ககம்**

- பெருங்குளம், சுசீந்திரம் மற்றும் கொடுமுடி ஆகிய மூன்று புராதன நகரங்களுக்கு புராதன நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானியமாக ரூ.116.29 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலூர், குழித்துறை, ஆத்தூர் மற்றும் பொள்ளாச்சி ஆகிய நான்கு நகராட்சிகளுக்கு ரூ.83.43 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் திருக்கழுக்குன்றம், மேலூர் மற்றும் அண்ணாமலை நகர் ஆகிய மூன்று பூங்காக்களுக்கு ரூ.11.21 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து ரூ.38.29 கோடி பழைய மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகரின் பிரதான நீரேற்றம் மற்றும் குடிநீர் குழாய் அமைப்பதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் திட்டங்களுக்குரூ.7.89கோடிவிடுவிக்கப்பட்டுள்ளது.
- திண்டுக்கல் மற்றும் கடலூர் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியினை விரிவாக்கம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- தேனி அல்லிநகரம் கூட்டு உள்ளூர் திட்டப் பகுதியாக அரசால் உறுதி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- நெல்லியாளம் தனித்த உள்ளூர் திட்டப் பகுதியாக அரசால் உறுதி செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான விதிகள் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971–இன் பிரிவுகள் 113 மற்றும் 122–இன்கீழ் வெளியிடப்பட்டுள்ளன.
- இணையதளம் மூலம் நேரடியாக திட்ட அனுமதி விண்ணப்பங்கள் பெறப்படுவதுடன், அதன் தற்போதைய நிலையை தெரிந்து கொள்ளும் வகையிலும் மற்றும் அனைத்துத் திட்டப்பகுதிகளுக்குமான நிலப்பயன்பாடு குறித்த விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் மென்பொருள் தயாரிக்கப்பட்டு 11.05.2017 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கட்டட வரைபட விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதற்கான மென்பொருள் 11.05.2017 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் புதியதாக கட்டப்பட்ட மண்டல அலுவலகம் மற்றும் உள்ளூர் திட்டக் குழும அலுவலகக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

- திட்ட அனுமதியின் கால வரையறை 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.
- துரித ரயில் போக்குவரத்துத் திட்டம், பகுதி–2–விற்காக ரூ.5.46 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான இறுதி பங்களிப்பாக ரூ.90 இலட்சம் தமிழக அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.
- துரித இரயில் போக்குவரத்துத் திட்டம், பகுதி–2 நீட்டிப்பிற்காக ரூ.10.86 கோடி செலவிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖






- சிப்காட் தொழில் பூங்கா இருங்காட்டு கோட்டையில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.10.98 கோடி செலவில் ஒரு சரக்கு வாகன முனையமும், வல்லம்–வடகால் சிப்காட் தொழில் பூங்காவில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.10.25 கோடி செலவில் ஒரு சரக்கு வாகன முனையமும் என இரண்டு சரக்கு வாகன முனையங்கள் உருவாக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- சிப்காட் நிறுவனத்தின் தொழில் வளாகங்களில், ரூ.1,771.37 கோடி முதலீட்டினை ஈர்த்து, 3,254 நபர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையில், 132.25 ஏக்கர் நிலம் 26 தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**டிட்கோ மற்றும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கிடையே பொன்னேரியில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்கா (Multimodal Logistics Park) அமைப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.**

- தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலை ஆணையமும் இணைந்து ஒரு பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காவை மத்திய அரசின் தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சரக்கு போக்குவரத்து மேம்பாட்டு திட்டத்தின் கீழ் அமைக்க 15, மே திங்கள், 2017 அன்று புதுடெல்லியில் மத்திய அரசின் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு. நிதின் ஜெய்ராம் கட்கரி மற்றும் தமிழக அரசின் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் அவர்களின் முன்னிலையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டம், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் காமராஜர் துறைமுகத்திற்கு அருகிலும் பொன்னேரி தொழில் முனைய மேம்பாட்டுபகுதியின் நடுவிலும் உள்ள சுமார் 360 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.1,295 கோடி முதலீட்டில் அமைக்கப்படும். இந்த பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்காவை அமைப்பதால் போக்குவரத்து செலவுகள், வாகனங்களினால் ஏற்படும் மாசு மற்றும் சாலை நெரிசல் வெகுவாக குறையும்.

- தமிழக அரசின் 3% வட்டி மானியத்துடன் 299 தொழில்களுக்கு ரூ.163.48 கோடி தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் வழங்கியுள்ளது. இதனால் இந்நிறுவனங்கள், வெளிச்சந்தையில் நிலவும் கடனுக்கான வட்டி விகிதத்தை விட குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெற்று பயன் அடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து மின் ஆக்கிகள் வாங்குவதற்கு பெறப்படும் கடன்களுக்கு தொழில் முனைவோரின் மூலதனத்தை 10 விழுக்காடாகக் குறைத்த திட்டத்தின் கீழ், 4 பயனீட்டாளர்கள் ரூ.27.95 இலட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு, பயன் அடைந்துள்ளனர்.
- படித்த இளைஞர்கள் முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவெடுக்க உதவுவதை குறிக்கோளாகக் கொண்ட மாநில அரசின் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு (NEEDS) திட்டத்தை இக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 29 பயனீட்டாளர்கள், ரூ.16.19 கோடி கடன் அனுமதிக்கப்பட்டு பயன் அடைந்துள்ளனர்.
- தமிழ்நாடு உப்பு நிறுவனம், 16.02.2017 முதல் 15.05.2017 வரை 6,340 டன் அம்மா உப்பினை விற்பனை செய்துள்ளது. அம்மா உப்பு விற்பனை துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுநாள் வரை விற்பனை செய்யப்பட்ட அம்மா உப்பின் அளவு 51,958 டன் ஆகும்.
- தமிழ்நாடு உப்பு நிறுவனம், 16.02.2017 முதல் 15.05.2017 வரை 60,440 டன் தொழிலக தரமுடைய உப்பினை உற்பத்தி செய்துள்ளது.
- தமிழ்நாடு உப்பு நிறுவனம், வாலிநோக்கத்தில் ரூ.5.63 கோடி செலவில் உப்பு சுத்திகரிப்பு தொழிற்சாலை நிறுவியுள்ளது. இந்த ஆலை 20.04.2017 அன்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தகவல்தொழில் நுட்பத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு 30,000 டன் சுத்திகரிக்கப்பட்ட அயோடின் உப்பு மற்றும் 10,000 டன் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு தயாரிக்கப்படும்.

**“தமிழ்நாடு உப்பு நிறுவனம், 16.02.2017 முதல் 15.05.2017 வரை 6,340 டன் அம்மா உப்பினை விற்பனை செய்துள்ளது. அம்மா உப்பு விற்பனை துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுநாள் வரை விற்பனை செய்யப்பட்ட அம்மா உப்பின் அளவு 51,958 டன் ஆகும்.”**

- வெளிச்சந்தையில் விற்கப்படும் சிமெண்ட் விலையேற்றத்தினால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள மக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கும் வகையில், சலுகை விலையில் சிமெண்ட் விற்பனை செய்யும் “அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம்” தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிமெண்ட் மூட்டை ஒன்றுக்கு ரூ.190/– என்ற சலுகை விலையில் விற்கப்பட்டு வருகிறது. அம்மா சிமெண்ட் திட்டத்தில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை 2,38,494 மெ.டன் (47,69,880 மூட்டைகள்) விற்கப்பட்டுள்ளது. மேலும் இந்த காலக்கட்டத்தில் 78,255 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.
- டான்செம் நிறுவனம் திறந்த வெளிச்சந்தையில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை 85,078 மெ.டன் சிமெண்ட் விற்பனை செய்துள்ளது. மேலும் டான்செம் நிறுவனம் இந்த காலக்கட்டத்தில் அரசு நிறுவனங்களுக்கு 48,395 மெ.டன் சிமெண்ட் வழங்கியுள்ளது.

❖ ❖ ❖

# தகவல் தொழில் நுட்பவியல் துறை




### தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

**நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடம்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 23.05.2017 அன்று தலைமைச் செயலகத்தில், சேலம், ஜாகீர்அம்மாபாளையத்தில் அமைந்துள்ள தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் 19 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 1 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிருவாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

**திருச்சியில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம்**

- ரூ.59.85 கோடி செலவில் தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கான தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் திருச்சியிலுள்ள எல்கோசெஸ்ஸில் அமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 01.03.2016 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

- 50 அடுக்குகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்தினை மேலும் 100 அடுக்குகளுடன் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டு அதற்கான தகவல் தொழில் நுட்பம் சார்ந்த மற்றும் தகவல் தொழில்நுட்பம் சாராத உட்கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மையம் 5 வருட இயக்கம் மற்றும் மேலாண்மை நோக்குடன் ஏப்ரல் 2017 முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

**தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)**

- தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.
- தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இணைப்பு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 19 தாலுகாகளில் வழங்கப்பட்டுள்ளது.
- தற்போது 5000–க்கும் மேற்பட்ட அரசு துறைகளுக்கு தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இணைப்பின் மூலம் அரசுத் துறைகள் தங்களது தரவுகளை தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் மிகவும் எளிதாக ஏற்றம் செய்ய முடியும்.
- இதுவரை கிடைமட்ட இணைப்பு போக்குவரத்து துறை, பொருளாதாரம் மற்றும் புள்ளியல், வணிகவரித் துறை, கருவூலம் மற்றும் கணக்கு துறை, நகராட்சி நிருவாகத்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, பதிவுத் துறை, வனத்துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, நில அளவைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய துறைகள் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் சேவையினை திறம்பட பயன்படுத்துகின்றனர்.
- 2016–2017 ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இணைப்புகள் 700 அரசு துறைகளில் நிறுவப்பட்டுள்ளது.
- தற்பொழுது சென்னை உயர்நீதிமன்றம், மதுரை உயர்நீதி மன்றம் உட்பட மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றம் மற்றும் தாலுக்கா நீதிமன்ற வளாகங்களில் உள்ள 271 இடங்களில் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இணைப்பு வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதன் பேரில், இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்**

- 2016–2017 ஆண்டுக்கான மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்திற்காக சிறப்பு திட்டங்கள் செயலாக்க துறையில் வெளியிடப்பட்ட அரசாணை எண். 11, நாள்: 02.09.2016இல், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தன்னிடம் உள்ள இருப்புடன் சேர்த்து 5.35 இலட்சம் மடிக்கணினி வழங்குவதற்கு தமிழக அரசின் நிருவாக ஒப்புதல் ஆணை வெளியிடப்பட்டது.
- 2016–2017ஆம் ஆண்டில், 23.05.2016 முதல் 06.03.2017 வரை, 12,775 மடிக்கணினிகள் பல் தொழில் நுட்பக் கல்லூரி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், 400 மடிக்கணினிகள் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாற்று திறனாளி மாணவ, மாணவியர்களுக்கும், ஆக மொத்தம் 13,175 மடிக்கணினிகள் ரூ.18,66,76,575/– (ரூபாய் பதினெட்டு கோடி அறுபத்து ஆறு இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து ஐநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

## மின் ஆளுமை ஆணையரகம் / தமிழ்நாடு மின்னாளுமை முகமை

**மின் மாவட்டம்**

- இ–சேவை மையங்கள் மூலம் தற்போது அரசுத் துறைகளால் மின்மாவட்ட வலைதளம் மூலம் வழங்கப்பட்டு வரும் சேவைகளுடன், கூடுதலாக மேலும் 319 சேவைகள் வழங்கிட பணி ஆணை (Work Order) மென்பொருள் ஒருங்கிணைப்பாளருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, செயல்பாட்டு தேவை குறிப்புகள் (FRS) தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**அரசு இ–சேவை மையங்கள்:**

- 01.04.2017 அன்றுள்ளவாறு தமிழ்நாடு முழுவதும் 10,615 அரசு இ–சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- மாவட்ட ஆட்சியரக அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்கள் போன்ற முக்கிய இடங்களில் தமிழக அரசின்

பொதுத்துறை நிறுவனங்களான தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) மற்றும் தமிழ் நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) மூலமாக அரசு இ–சேவை மையங்கள் அமைக்கப்பட்டு அரசின் அனைத்து மின்னணு சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- மேலும், உள்ளூர் மக்களின் அமைப்புகளான தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலமாக ஊரகப் பகுதிகளில் அரசு இ–சேவை மையங்கள் அமைத்து மின்னணு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் குறைந்தது ஒரு அரசு இ–சேவை மையமாவது செயல்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கும் அரசு இ–சேவை மைய மாதிரியை DeitY மத்திய மின்னணு (ம) தகவல் தொழில்நுட்பவியல் துறை ஏற்றுக்கொண்டுள்ளது. இது CSC 2.0 திட்டத்தில் சேர்க்கப்பட்டு இந்திய மின்னனு சேவை நிறுவனத்தின் (CSC e-Governance India Ltd.) மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- அரசு இ–சேவை மையங்கள் மூலம் வருவாய்த்துறை மற்றும் சமூகநலத்துறை சார்ந்த சான்றிதழ்கள், ஜீவன் பிராமாண் வாழ்வு சான்றிதழ், மின்கட்டணம் செலுத்தும் வசதி, ஆதார் அட்டை வழங்குதல், இணையவழியில் பாடப் புத்தகங்கள் பெறுதல் போன்ற 27.83 இலட்சம் சேவைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- நடமாடும் அரசு இ–சேவை மையம் (Mobile CSC) மூலம் முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் இடத்திற்கே சென்று ஆதார் அட்டை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**உள்ளங்கையில் சான்றிதழ்**

- மின்மாவட்டத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பல்வேறு அரசு துறைகளின் சான்றிதழ் சேவைகளை பொதுமக்கள் இணையத்தின் உதவியுடன் அவரவர் வீட்டிலிருந்தபடி கைபேசி மூலமாகப் பெற உதவிடும் “உள்ளங்கையில் சான்றிதழ்” என்ற திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.05.2017 அன்று துவக்கி வைத்தார்கள்.

**மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம்**

- தமிழ்நாட்டில் மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தினை நிறுவிட அரசு ஆணையிட்டுள்ளது. இம்மையத்தில், தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் மூலம் குடிமக்களின் பயோமெட்ரிக் தரவுத் தளத்தை உருவாக்கி, அவை மைய அரசின் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) நிறுவன ஆதார் தரவுகளின் மூலம் சரிபார்க்கப்படும். இத்திட்டம் ரூ.25.93 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.
- முதலமைச்சர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1,15,70,135 நபர்களின் தகவல்கள் ஒப்பிடப்பட்டு ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.
- கரூவூலம் (ம) கணக்கு துறைக்காக 3,53,859 நபர்களின் தகவல்கள் ஒப்பிடப்பட்டு ஆதார் எண்களுடன் இணைக்கப்பட்டு தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.
- அதேபோல் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஆதார் பணிகள் தொடங்கப்பட்டு நடந்து வருகின்றன.
- மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தின் பயன்களை மற்ற துறைகளும் பயன்பெறும் பொருட்டு, அத்துறைகளை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தொடர்பு கொண்டு வருகிறது.

**நிரந்தர பதிவு மையம்**
**(Permanent Enrollment Center)**

- தமிழகத்தில் ஆதார் பதிவாளராக மின் ஆளுமை ஆணையரகம் / தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுகிறது. இவ்வாணையரகம் தமிழ்நாடு அரசு கம்பிவட தொலைகாட்சிக் கழகம் லிட்., (M/s. TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (M/s.ELCOT) மூலம் தேசிய மக்கள் தொகை பதிவேட்டையும், ஆதார் பதிவையும் மேற்கொள்கிறது. தேசிய மக்கள் தொகை பதிவேட்டிற்கு பதிவாளராக தமிழக அரசின் வருவாய் துறையே தொடர்ந்து செயல்படும் .




- 301 ஆதார் சேவை மையங்கள், அதாவது 285 வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சியின் 15 மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றின் மூலம் 1,50,000 மக்கள் பயனடைந்துள்ளனர்
- ஆதார் அட்டையில் உள்ள தகவல்களான பெயர் , முகவரி, கைபேசி எண் முதலியன திருத்தம் செய்யும் வசதி 2017 ஏப்ரல் மாதத்தில் இருந்து தமிழ்நாடு அரசு கம்பிவட தொலைகாட்சிக் கழகம் லிட்., (M/s.TACTV) மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுனம் (M/s.ELCOT) மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.
- 01.10.2016 முதல் அனைத்து வட்டங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி பகுதிகளில் 518 நிரந்தர ஆதார் சேர்க்கை மையங்கள் துவக்கப்பட்டு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலம் இதுவரை 11.71 இலட்சத்திற்கும் மேல் ஆதார் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 05.10.2016 முதல் 06.03.2017 வரை 8.51 இலட்சம் பிளாஸ்டிக் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்**

- பொது மக்களுக்கு குறைந்த செலவில் நிறைந்த தரமான கேபிள் டிவி சேவையை வழங்குவது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நோக்கமாகும்.
- அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை மாநகரப்பகுதிகளுக்கு 100 சேனல்களை தெளிவுடனும் தரமுள்ளதாகவும் ரூ.70/– என்ற மாதக்கட்டணத்தில் வழங்கி வருகிறது.

**DAS உரிமம்**

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம். டிஜிட்டல்மயமாக்கலுக்கு தேவையான, சென்னை DAS பகுதிகளுக்கான எம்.எஸ்.ஓ (MSO) உரிமம் வழங்கக் கோரி 05.07.2012 அன்றும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு உரிமம் வழங்கக் கோரி 23.11.2012 அன்றும் மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்து, அவ்விண்ணப்பம் கடந்த 5 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது.
- 2012ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செய்த இடைவிடாத முயற்சியின் காரணமாக, 17.04.2017 அன்று மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள DAS பகுதிகளுக்கான எம்.எஸ்.ஓ தற்காலிக டிஜிட்டல் உரிமம் வழங்கியுள்ளது.

**இணையதள சேவைகள்**

- 01.03.2016 அன்று 1,100 இணைப்புகளுடன் தொடங்கப்பட்ட இல்லந்தோறும் இணையம் தற்பொழுது 1,764 இல்லங்களுக்கு வழங்கப்படுகிறது.

- வருவாய் பங்கீட்டு முறையில் 388 விருப்பம்கோரும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு 134 விண்ணப்பதாரர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு சுமார் 13,400 இல்லங்களுக்கு இணைப்பு வழங்கப்படவுள்ளது.

**செல்பேசி செயலி**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் உருவாக்கியுள்ள செல்பேசி செயலியினை துவக்கி வைத்தார்கள்.
- இச்செயலியைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசு கேபில் டிவி நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய மாத சந்தாத் தொகையான ரூ.70/– ஐ சந்தாதாரர்கள் தங்களது செல்பேசியிலிருந்தே நேரடியாக இந்நிறுவனத்திற்கு செலுத்திவிடலாம்.
- இந்தச் செயலி ஆண்ட்ராய்டில் இயங்கும் செல்பேசிகளில் செயல்படும். இதனை பொதுமக்கள் கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பாரத்நெட்**

- மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 14.09.2015 அன்று தமிழ்நாட்டிலுள்ள 12,524 கிராம ஊராட்சிகளும் ஆப்டிகல் ஃபைபர் (Optical Fibre) மூலம் இணைக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் பல்வேறு சேவைகளை பொதுமக்கள், தங்கள் கிராமங்களில் இருந்தே இணையம் மூலமாக பெற்று பயனடையும் வகையில் 3,000 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழக அரசே செயல்படுத்தும் என விதி 110இன் கீழ் அறிவித்தார்.
- இந்த அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு ஃபைபர்நெட் காப்பரேஷன் நிறுவனம் உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை 01.02.2016இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்கு அரசின் பங்கு முதலீடாக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு இந்நிறுவனத்தினை பதிவு செய்வதற்கான பூர்வாங்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, அவை செயல்படுத்துவதற்காக மத்திய மாநில மற்றும் பாரத் பிராட்பேண்ட் நெட்வொர்க் லிமிடெட் இடையேயான கையெழுத்திடப்பட்ட முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 25.4.2017 அன்று பரிமாறிக்கொள்ளப்பட்டது.

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

- உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர், மாணவர், பதிப்பகத்தார் மற்றும் வடிவமைப்பாளர்கள் பயன்பெறும் வகையிலும், தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் ஒருங்குறியின் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்திடும் வகையிலும், தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamilnadu Innovative Initiatives scheme) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ் மென்பொருள்களை உருவாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக "தமிழிணையம் ஒருங்குறி மாற்றி" மற்றும் "தமிழிணையம் ஒருங்குறி எழுத்துக்கள்" ஆகிய 2 தமிழ் மென்பொருட்களை தமிழ் இணையக் கல்விக் கழகம் உருவாக்கியுள்ளது. தமிழிணையம் ஒருங்குறி மாற்றியை (Tamil Unicode Converter) பயன்படுத்துவதால், பலதரப்பட்ட தமிழ் குறியீடுகள் வாயிலாக உருவாக்கப்பட்ட உரைகள், அட்டவணைகள், புள்ளிவிவரங்கள் போன்றவற்றை எவ்வாறு உள்ளனவோ அதேநிலையில் பாதுகாப்பாக தமிழ் ஒருங்குறிக்கு மாற்ற இயலும். இந்த தமிழ் இரண்டு மென்பொருட்களை இணையதளம் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.05.2017 அன்று வெளியிட்டார்கள். தமிழிணையஒருங்குறிஎழுத்துகளைதமிழ்இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்திலிருந்து **http:/www.tamilvu.org/tkbd/html.index** இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

❖ ❖ ❖

# தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை



### சமரசப் பணிகள்

- 16.02.2017 முதல் 15.05.2017 வரை 912 தொழில் தகராறு வழக்குகள் சமரச பேச்சு வார்த்தை மூலம் தீர்த்து வைக்கப்பட்டன. 467 வழக்குகள் சுமூகமான முறையில் முடிக்கப்பட்டன.
- ஒரு பொறியியல் நிறுவனத்திலும், ஆறு நூற்பாலை நிறுவனங்களிலும் ஒரு தோல் பதனிடும் நிறுவனத்திலும் மற்றும் ஒரு இதர நிறுவனத்திலும் வேலை நிறுத்தம் விலக்கிகொள்ளப்பட்டு, 4,201 தொழிலாளர்களின் பணி பாதுகாக்கப்பட்டது. 1,100 தொழிலாளர்களை கொண்ட ஒரு இதர நிறுவனத்தில் கதவடைப்பு வழக்கு முடிக்கப்பட்டது.

### நிருவாகப் பணிகள்

- கடலூர் மாவட்டத்தில் சட்டமுறை எடையளவு ஆய்வகங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ரூ.2,78,50,000/– செலவில் கட்டப்பட்டு 04.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- சேலம் மாவட்டத்தில் சட்டமுறை எடையளவு ஆய்வகங்களுடன் கூடிய தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ரூ.3,90,50,000/– செலவில் கட்டப்பட்டு 07.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தருமபுரி, நாமக்கல், நாகப்பட்டினம் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் சட்டமுறை எடையளவு ஆய்வகங்களுடன் கூடிய தொழிலாளர் அலுவலர் அலுவலக வளாகம் ரூ.7.86 கோடி செலவில் கட்டப்பட்டு 16.03.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

### நுகர்வோர் பாதுகாப்பு

- சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 83,504 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.24,50,550/– இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டு, ரூ.7,79,46,398/– முத்திரை கட்டணமாக பெறப்பட்டுள்ளது. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் கீழ் 32,711 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.14,19,000/– இணக்கக் கட்டணமாக விதிக்கப்பட்டு, ரூ.66,500/– பதிவுக் கட்டணமாகவும் பெறப்பட்டுள்ளது.
- நுகர்வோர் மற்றும் பொது மக்கள் நலன் காக்கும் வகையில் சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் பெறப்படும் புகார்களுக்கு உடனடி நிவாரணம் அளித்திட புதிதாக கைப்பேசி செயலி (Mobile Apps) உருவாக்கப்பட்டு 04.03.2017, அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- சட்டமுறை எடையளவு சட்டம் குறித்தும், நுகர்வோரின் குறைகளை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கைபேசி செயலி குறித்தும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு விளம்பர குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

**குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்**

- சட்ட அமுலாக்க அலுவலர்கள் மற்றும் மாவட்ட குழந்தை தொழிலாளர் தடுப்பு படை மூலம் அனைத்து மாவட்டங்களிலும் **46,589** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் **10** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட **10** குழந்தைகளும், குழந்தைகள் நலக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மூலமாக பெற்றோர்களிடம் அவர்களது இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு உரிய அறிவுரைகளுடன் ஒப்படைக்கப்பட்டனர்.
- தற்போது **322** தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் **8,151** மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் கல்வி பயில்கின்றனர். இக்கால கட்டத்தில் **161** குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**தொழிலாளர் நல வாரியம்**

- தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் **7,437** பயனாளிகளுக்கு **ரூ.16,29,724/–** மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

**அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம்**

- **17** அமைப்புசாரா நல வாரியங்களில் **16.02.2017** முதல் **15.05.2017** வரையிலான காலத்தில் **55,856** தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டதுடன், **70,917** பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் **ரூ.30,48,25,332** கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.
- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து **60** வயது பூர்த்தியடைந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் **ரூ.1,000/–** **3,604** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி பயில்வதற்காக வழங்கப்பட்டு வந்த கூடுதல் கல்வி உதவித் தொகையினால் **24,870** பேர் பயன் பெற்றுள்ளனர்.
- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் அதிக அளவில் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்து நலத் திட்ட உதவிகளை வழங்குவதற்கு ஏதுவாக பிரதிமாதம் இரண்டு முறை சிறப்பு முகாம்கள் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு வருகிறது. **16.02.2017** முதல் **15.05.2017** வரை **130** சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு **13,862** தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
- பணியிடத்தில் பணியில் ஈடுபட்டு இருக்கும்போது, விபத்து ஏற்பட்டு இறக்கும் கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் விபத்து நிவாரணம் ரூபாய் **5** இலட்சம் **16.02.2017** முதல் **15.05.2017** வரை எட்டு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் உருவாக்கப்பட்ட நகரும் மருத்துவமனைகள் மூலம் **16.02.2017** முதல் **15.05.2017** வரை சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் **8,080** கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களது பணியிடம் தேடி சென்று சுகாதார சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.
- அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் மையங்களில் கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி பெற ஏதுவாக அவர்களின் பணியிடம் / தங்குமிடத்திலிருந்து சென்று வர வழங்கப்படும் வாகன வசதி **2016–2017** ஆம் ஆண்டில் **ரூ.8.1** இலட்சம் செலவில் **270** குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கட்டுமானத் தொழிலாளர்கள் தற்காலிகமாக தங்கும் வகையில் அம்மா உணவகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சலவைசெய்யும் வசதி, குழந்தைகள் மற்றும் முதியோர் பாதுகாப்பு மையம், வங்கி தொடர்பு சேவை,

படிப்பகம், சுகாதார மையம், பொழுதுபோக்கு மையம் ஆகிய வசதிகள் உள்ளடக்கிய 1,000 பேர் தங்கும் வசதி கொண்ட தூங்கும் அறைகள் காஞ்சிபுரம் மாவட்டம், எழிச்சூரில் கட்டப்பட்டு 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. தையூர் 'B' கிராமத்தில் தூங்கும் அறைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

- அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்யவும், நலதிட்ட உதவிகளை எளிதாக பெறுவதற்கும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு செலுத்தும் பங்களிப்புத் தொகையினை இணையம் வழியாக (Online) வாரிய வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்த ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருளை (Application Software) ரூ.1,04,72,000/– செலவினத்தில் TNeGA நிறுவனம் மூலம் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் திட்டங்கள் பற்றிய விவரங்களை பெறுவதற்கும், தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் வெளிமாநில தொழிலாளர்களின் குறைகளை களைவதற்கும் வசதியாக ரூ.9,95,119/– செலவில் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய பன்மொழி உதவிமையம் ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிகளவில் நல வாரியங்களில் பதிவு செய்து நலத்திட்ட உதவிகள் பெற விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாரியத் திட்டங்கள் குறித்து குறும்படம் தயார் செய்யப்பட்டு வாணியம்பாடியில் 11.03.2017 அன்று மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- 32 மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட தொழிலாளர் அலுவலர்களுக்கு 16.05.2017 அன்று 32 ஈப்புகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

### தொழிற்சாலைகள் பதிவு செய்தல்

- மேற்படி காலத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 611 தொழிற்சாலைகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு அதன் விளைவாக தொழிலாளர்கள் 15,316 பயனடைந்துள்ளனர்.

### கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள்

- மேற்படி காலத்தில் 258 கட்டுமான நிறுவனங்கள், கட்டிடம் மற்றும் கட்டுமான தொழிலாளர்கள் (முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996இன் கீழ் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. கட்டட நிறுவன வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த 61 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 5,693 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### மாநில பாதுகாப்பு விருதுகள்:

- தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் சார்பாக 2013–ம் ஆண்டிற்கான தொழிற்சாலைகள் பாதுகாப்பு விருதுகள் மற்றும் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் வழங்கும் விழா 06.05.2017 அன்று சென்னையில் நடைபெற்றது. அதில் 126 மாநில பாதுகாப்பு விருதுகள் 77 தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் , உயர்ந்த உழைப்பாளர் விருதுகள் 94 தொழிலாளர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

### தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் மற்றும் சென்னை மண்டல அலுவலகங்களுக்கான ஒருங்கிணைந்த சொந்தக் கட்டடம்

- வாடகை கட்டடத்தில் இயங்கி வந்த தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இயக்குநர் அலுவலகம் மற்றும் சென்னை மண்டலத்தில் இயங்கும் 16 அலுவலங்களுக்கு சொந்த கட்டடம் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 16.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள்:**

- பாதுகாப்பு பிரசாரக் குழுக்கள் காலமுறைதோறும் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலை, வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு சென்று தொழிலில் உள்ள அபாயங்கள் குறித்தும் பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுவது குறித்தும் நிர்வாகத்தினர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கியும், விபத்தினை தடுக்கும் வகையில் தொழிலாளர்களால் கடைப்பிடிக்கப்படவேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்கப்படுகின்றன. மேற்படி காலத்தில் 23 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 1,038 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்பு பயிற்சி :**

- பாதுகாப்பான முறையில் பணிபுரிவதன் முக்கியத்துவம் குறித்து தொழிலாளர்களுக்கும் மற்றும் நிர்வாகத்தினருக்கும் கற்பிப்பதற்காக, இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மேற்படி காலத்தில் 123 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 8,844 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**பட்டாசு தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்**

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு பாதுகாப்பு பயிற்சி மையம் சிவகாசியில் ரூ.2.61 கோடி செலவில் 2015ஆம் ஆண்டு துவங்கப்பட்டுள்ளது. மேற்படி காலத்தில் 2 குழுக்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 24 போர்மேன்கள் பயனடைந்துள்ளார்கள். மேலும் இதுவரை 5 ஒரு நாள் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 912 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

**தொழில் முனைவோருக்கு உதவும் பொருட்டு தனிப்பட்ட இணைய தளத்தினை உருவாக்குதல்**

- 2014–2015 சட்டமன்ற கூட்டத்தொடரில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, இவ்வியக்கத்திற்கென பிரத்யேக வலைதளம் ரூ.1.81 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் தொழிற்சாலை நிர்வாகத்தினர், உரிமங்களை பெறுதல், புதுப்பிதல், வரைபட ஒப்புதல் பெறுதல், ஒப்பந்த பணி பதிவு மற்றும் உரிமம் பெறுதல்,வெளிமாநில தொழிலாளர்கள் பதிவு மற்றும் உரிமம் பெறுதல், அழுத்தகலன் சோதனைச் சான்று பெறுதல், ஆண்டறிக்கைகள்அனுப்புதல் முதலான செயல்பாடுகள் இணையதளம் மூலமாக விண்ணப்பித்து, 30 நாட்களுக்குள் பயனடைய இயலும்.
- மேலும் வலைதள அடிப்படையிலான கணினி மயமாக்கப்பட்ட தொழிற்சாலை ஆய்வுத் திட்டமும் இயக்கக இணைய தளத்தில் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

**கட்டுமான பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள்**

- மடிக்கணினிகள் வாங்குதல் தொடர்பாக கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு மற்றும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அலுவலர்களுக்கு 30 மடிக்கணினிகள் வழங்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு குறும்படங்கள், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள்**

- ரூ.15 இலட்சம் வழங்க கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு மற்றும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு குறும்படம் தயாரிக்கவும், நிலையான பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகளின் மாதிரிகள் தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**வேலைவாய்ப்பு பிரிவு**

- வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றி

அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் திறன் பயிற்சி அளிக்கின்றன.

- வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையினை இரு மடங்காக உயர்த்தியதன் மூலம் பயனடைந்தோரின் எண்ணிக்கை 54,821 மற்றும் அதற்கான செலவினம் ரூ.4.60 கோடி ஆகும்.
- திருச்சி, தருமபுரி, திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ரூ,9.27 கோடி செலவில் கட்டப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- இணையவழி கற்பித்தல் முறையினை உருவாக்குவதற்கு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- அரசு கலை கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் போட்டித்தேர்வுகளை எழுத பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வேலைவாய்ப்பு அலுவலங்கள் மூலம் நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளுக்கான 10 பயிற்சி வகுப்புகளில் 520 மனுதாரர்கள் கலந்துகொண்டனர்.
- வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் 634 வேலை நாடுநர்கள் அரசு துறையிலும் 4,216 வேலை நாடுநர்கள் தனியார் துறையிலும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.
- பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் தூத்துக்குடி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது. இதில் 262 வேலையளிப்போரும், 6,910 வேலை நாடுநர்களும் கலந்து கொண்டதில் 884 நபர்கள் தனியார்துறைகளில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.
- துறையின் முக்கிய நிகழ்வுகள் அனைவரையும் சென்றடையும் விதத்தில் திறன் தமிழகம் என்ற காலாண்டு இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.
- உயர் கல்விதுறையின் RUSA திட்டத்தின் கீழ் 19 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,538 மாணவர்களுக்கு திறன்பயிற்சி அளிக்கப்பட்டது.
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி பயிலும் 33,532 மாணவர்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**பயிற்சிப் பிரிவு**

- 22 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை ரூ.7.70 இலட்சத்தில் அறிமுகப்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டது.
- தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழிற் பழகுநர்களை தேர்ந்தெடுப்பதற்கு தொழிற் பழகுநர்களுக்கான முகாம்கள் ஒவ்வொரு வருடமும் ரூ.10 இலட்சம் செலவில் நடத்திட அரசாணை வெளியிடப்பட்டு, திருநெல்வேலி, மதுரை, சேலம், திருச்சி ஆகிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலூர் வாணியம்பாடியில் தொழிற் பழகுநர்களுக்கான முகாம்கள் நடத்தப்பட்டது.
- 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெறும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் முதல்வர் பணியிடங்களை துணை இயக்குநர் / முதல்வர் பணியிடங்களாக ரூ.2.59 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டது.
- உளுந்தூர்பேட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கு பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.32.68 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- மேட்டூர் அணை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் வயர்மேன் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- சேலம் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் ஏ/சி மெக்கானிக் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- நாகர்கோவில் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேச இயலாதோருக்கு பொருத்துநர் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.36 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தர்மபுரி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் வயர்மேன் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- 23 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ரூ.258.98 இலட்சம் செலவில் பற்றவைப்பவர் தொழில் நுட்பத்தைக் கணினி மூலம் கற்பிக்கும் கருவி தமிழ்நாடு முன்னோடி திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் அரசு தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடங்கள் ரூ.287.15 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- தஞ்சாவூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் மின்பணியாள் தொழிற் பிரிவிற்கான பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள் ரூ.38 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- 17 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் அமைத்திட ரூ.517.96 இலட்சம் செலவில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.
- 8 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 12 புதிய தொழிற் பிரிவுகள் ஏற்படுத்திட ரூ.1,067.00 இலட்சம் செலவில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு திறன் மேம்பாடுக் கழகம்

- திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான இணையதளம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.
- கடந்த 100 நாட்களில் 236 திறன் பயிற்சி நிறுவனங்கள் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக குழுமம் 62,130 இளைஞர்கள் பயன் பெறும் வகையில் ரூ.9,040.53 இலட்சம் செலவில் பல்வேறு துறைகளில் குறுகிய கால திறன் பயிற்சியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.
- மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடி வரும் வேலைநாடுநர்கள் மற்றும் இளைஞர்களின் தொழில் திறன்களை மதிப்பீடு செய்து அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்க ஏதுவாக 32 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ரூபாய் 87.40 கோடி செலவில் திறன் மதிப்பீடு மற்றும் ஆய்வு மையங்கள் பயிற்சிக்கான உபகரணங்களை அமைக்க அரசு ஆணை வழங்கப்பட்டது.
- 35 ஊராட்சி ஒன்றியங்களில் 700 நபர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் ரூபாய் 1.40 கோடி செலவில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் அம்மா இரு சக்கர வாகன சேவை மற்றும் பராமரிப்பு மையங்கள் அமைக்க அரசு ஆணை வழங்கப்பட்டது
- மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் திறன் போட்டிகள் மற்றும் மாநில அளவிலான திறன் உச்சி மாநாடு ரூபாய் 40 இலட்சம் செலவில் நடத்த அரசு ஆணை வழங்கப்பட்டது
- 60 ஊராட்சி ஒன்றியங்களில் திறன் பயிற்சி மையங்கள் அமைத்து 3,600 நபர்களுக்கு ரூ.2.94 கோடி செலவில் பயிற்சி வழங்கவும் மற்றும் 20,000 இளைஞர்களுக்கு சேவைத் துறையில் திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பட்டியலிடப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் ரூ.18 கோடி செலவில் திறன் பயிற்சி அளிக்கவும் அரசு ஆணை வழங்கப்பட்டது .
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் 1,00,000 தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழில் அனுபவத்தினால் பெற்ற திறனை சோதித்து சான்றிதழ் வழங்க ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வழங்கப்பட்டது

❖ ❖ ❖

# சட்டத்துறை



- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்துகொண்ட சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் பயின்று வரும் 7 மாணவர்களுக்கு, தலா ரூ.75,000/– வீதம் ரூ.5,25,000/– நிதி ஒப்பளித்து ஆணை.
- 2017ஆம் ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ஹாங்காங் மற்றும் வியந்னாவில் நடைபெற்ற சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டியில் கலந்து கொள்வதற்காக கொண்ட திருச்சிராப்பள்ளி தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளியில் பயின்றுவரும் 4 மாணவர்களுக்கு தலா ரூ.75,000/– வீதம் மொத்தம் ரூ.3,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை.
- செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் 2017–2018ஆம் கல்வியாண்டு முதல் "Criminal Law with Cyber Crime" என்ற பாடப்பிரிவில் முதுகலை (எல்.எல்.எம்) சட்டப்படிப்பு துவக்கிட அனுமதி அளித்து ஆணை.
- மதுரை, திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரிகளில் நூலகப் பயன்பாட்டிற்குத் தேவையான அறைகலன்கள் மற்றும் மரத் தளவாடங்கள் வாங்குவதற்காக ரூ.10,92,292/– நிதி ஒப்பளித்து ஆணை.
- வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கென புதிதாக கட்டப்பட்டுள்ள நிரந்தரக் கட்டடத்திற்கு தேவையான அறைகலன்கள் வாங்கிட ரூ.50,000/– நிதி ஒப்பளித்து ஆணை.

❖ ❖ ❖

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை



- படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில்முனைவோராக மாற்ற உதவும் நோக்குடன் “புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம்” எனும் புதிய திட்டத்தை 2012–2013ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு ரூ.1 கோடி வரையிலான திட்ட மதிப்பில் ‘உற்பத்தி மற்றும் சேவை’ தொழில் நிறுவனங்களை துவங்க வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வாயிலாக 25 விழுக்காடு மானியம் மற்றும் 3 விழுக்காடு வட்டிச் சலுகையுடன் கூடிய கடனுதவி பெற உதவி செய்யப்படுகிறது மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிக தொடர்பு ஏற்படுத்தித் தர இத்திட்டம் வழிவகுக்கிறது.
- கடந்த 100 நாட்களில், மொத்தமாக ரூ.152.73 கோடி மானிய மதிப்பிலான 1,771 விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற கழகம் ஆகியவற்றிக்கு தற்காலிக ஒப்புதல் வழங்கும் பொருட்டு பரிந்துரை செய்யப்பட்டன. இவற்றில், ரூ.119.33 கோடி மானிய மதிப்பிலான 1,243 விண்ணப்பங்களுக்கு இந்நிறுவனங்களிலிருந்து தற்காலிக ஒப்புதல் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட ஒப்புதல்களில் 602 பயனாளிகளுக்கு சென்னையிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்றோரில் 470 பயனாளிகளுக்கு ரூ.51.71 கோடி மானிய மதிப்பிலான விண்ணப்பங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ஆகிய நிறுவனங்கள் வாயிலாக முறையான ஒப்புதல் மற்றும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. அரசு இந்த பயனாளிகள் தங்கள் நிறுவங்களை தொடங்கும் நோக்கில் ரூ.190.69 கோடி மானியத் தொகை வழங்கியுள்ளது. 2016–2017ஆம் நிதியாண்டில் ரூ.9.55 கோடி 3% பின்முனை வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.
- வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது 2011ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு, சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சார்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த குறுந்தொழில்களில் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தி அதன் மூலம் வேலையில்லாத நிலையை நீக்க வழிசெய்கிறது. 16.02.2017 முதல் 26.05.2017 வரை, 4,180 பயனாளிகளுக்கு ரூ.2,694.21 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராம

வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து முதல்தலைமுறை தொழில் முனைவோர்கள் குறுந்தொழில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களைத் துவங்க, பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்ற ஊக்கத் தொகையுடன் கூடிய புதிய கடனளிப்புத் திட்டம் 2008ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 16.02.2017 முதல் 26.05.2017, 88 பயனாளிகளுக்கு ரூ.113.62 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

- எல்.இ.டி. விளக்குகள் மற்றும் பிட்டிங்குகள் சோதனை வசதிகள் ரூ.5.35 கோடி மதிப்பீட்டில் மத்திய மின்பொருள் சோதனை கூடம், காக்களூரில் ஏற்படுத்திட மாநில திட்டக்குழுவால் தமிழ்நாடு மாநில புதுமை நிதியின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டத்திற்கு ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு.
- முதலமைச்சர் 30.08.2016 அன்று விதி 110இன்கீழ் அறிவித்த திட்டத்திற்காக ரூ.50 இலட்சம் கோயமுத்தூர் மாவட்டத்தில் காளப்பட்டியில் உள்ள மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டையின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்து ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் சிட்கோ மூலம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- அரசினர் தொழில் நுட்பபயிலகம், கிண்டியில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்அறிவிப்பின்படி, அனைத்திந்திய தொழில் நுட்பகல்வி கழகத்தினுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வண்ணம், கூடுதல்கட்டடம் கட்டும் பணிக்கு அரசு ஒதுக்கிய ரூ.7.02 கோடி பெறப்பட்டு கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பபட்டு கட்டடப்பணி முழுமையாக முடிவடைந்து, 04.03.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு 2016–2017, அரசின் இலக்கு 25,000 படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புடன் கூடிய அதிகபட்சமாக பயிற்சி 6 மாத காலத்திற்குஅளிக்கப்படும். பயிற்சி காலத்தில் தொழில் நிறுவனங்கள் மாதம் ரூ.5,000/– உதவித் தொகை வழங்கும். அதில் அரசின் பங்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு நபருக்கு ரூ.2,000/– வீதம் அதிகபட்சமாக ரூ.12,000/– வரைஅரசு மானியமாக வழங்கும். இந்த ஆண்டு 2016–2017, 31.03.2017 தேதி வரை தமிழகம் முழுவதும் இப்பயிற்சியை சுமார் 632 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் சுமார் 20,121 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- உத்யோக் ஆதார் பதிவறிக்கை: குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் படி தொழில் முனைவோர் பதிவறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது 18.09.2015 முதல் எந்த ஒரு தொழில் முனைவோரும் www.udyogaadhar.gov.in என்ற இணையதளத்தின் மூலம் உத்யோக் ஆதார் பதிவறிக்கையினை மாவட்ட தொழில் மையத்திற்கு செல்லாமலே உடனடியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் சுமார் 51,618 நிறுவனங்கள் ரூ.6,909.44 கோடி அளவிற்கு முதலீடு செய்து சுமார் 1.36 இலட்சம் நபருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய வகையில் உத்யோக் ஆதார் பதிவறிக்கை செய்துள்ளார்கள்.
- 311 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.253.48 கோடி மதிப்பிற்கு விற்பனை எய்துள்ளன. இதில் 258 தொழிற்கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.
- ஸ்புருட்டி திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில், கயிறு பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்கில் மதிப்பு கூட்டப்பட்ட கயிறு பொருட்களை உற்பத்தி செய்ய 7 கயிறு குழுமங்கள் திண்டுக்கல், நாகர்கோவில், பொள்ளாச்சி, மதுரை, திருநெல்வேலி, திருப்பூர், மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.28.65 கோடியில் அமைக்க மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டது. ஒப்புதல் பெற்ற கயிறு குழுமங்களில் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்வதை இறுதி செய்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

- 2017–2018ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், ரூ.22 கோடி திட்ட மதிப்பீட்டில் நெகமம், பூதலூர் மற்றும் ஈரோடு ஆகிய 3 இடங்களில் கயிறு குழுமங்கள் அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவிப்பு செய்துள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006இன் படி சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு நிறுவனங்கள் தாம் விற்பனை செய்த பொருட்களுக்கு பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகையினை விரைந்து பெற்றுத் தரும் நோக்குடன் அரசு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. 6 வசதிக்காகக் குழு கூட்டம் நடத்தப்பட்டு 7 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ. 423.61 இலட்சம் பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- இதனால், 7 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு தாம் விற்பனை செய்த பொருட்களுக்கு பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையினை விரைந்து பெற்றுத்தரப்பட்டதனால் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் நலிவிலிருந்து பாதுகாக்கப்பட்டது.

## தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

- ரூ.20.11 கோடி மதிப்பிலான 65 தொழில் மனைகள் 65 தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- திருமழிசை தொழிற்பேட்டையில் உள்ள அடுக்குமாடி தொழிற் வளாகத்தில் 2 தொழிற்கூடங்கள் வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- 50 தொழிற்பேட்டைகளில் உள்ள ரூ.32 கோடி மதிப்பிலான 70 தொழில் மனைகளுக்கு விற்பனை கிரய பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
- தனியார் தொழிற்குழுமத்தை மேம்படுத்துவதற்காக மதுரை இன்ஜினியரிங் குழுமம் (பி) லிட், மதுரை மாவட்டம். குழுமத்திற்கு தமிழக அரசின் பங்கு தொகையின் ரூ.682.33 இலட்சத்தில் (மொத்த திட்ட மதிப்பில் 50% - ரூ.1,364.66 இலட்சம்) இதில் முதல் தவணையாக ரூ.341.165 இலட்சம் வழங்க ஆணை வெளியிடப்பட்டது. இது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- தமிழகத்தில் தகவல் தொடர்பு துறையினை செயல்படுத்த சிட்கோ எளிய முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் பயனடையும் பொருட்டு சேவை அளிக்க மொத்த தொகையான ரூ.44 இலட்சமானது "தமிழ் நாடு புதுமை முயற்சி திட்டத்தின் மூலமாக வழங்க அரசாணை எண் G.O.Ms.No.16 MSME (C) துறை நாள் 17.03.2017இல் ஆணை வெளியிடப்பட்டது. இது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சர்வதேச கூட்டுறவு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமல்படுத்த மொத்த தொகையான ரூ.1 கோடி நிதியானது "தமிழ் நாடு புதுமை முயற்சி திட்டத்தின் மூலமாக 2016–2017ஆம் நிதி ஆண்டில் வழங்க ஆணை வெளியிடப்பட்டது. இது தொடர்பாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாண்புமிக தமிழக முதல்வர் அவர்களின் 110ஆவது விதியின் கீழ் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட, புதிய தொழிற்பேட்டை சிட்கோ மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் உருவாக்க மானிய தொகை வழங்க வழிகாட்டுதல்கள் வரையறுக்கப்பட்ட திருத்தங்கள் செய்யப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது. இது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மத்திய அரசின் – குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் (MSE-CDP) கீழ் பொது வசதி மையம் அமைக்க தங்க நகை குழுமம், மதுரை, கயிறு குழுமம், ஈரோடு, பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம், ஆய்த்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம், ஆகிய 4 குழுமங்களுக்கு ரூ.11.66 இலட்சம், ரூ.14.60 இலட்சம், ரூ.29 இலட்சம் மற்றும் ரூ.9.36 இலட்சம் வழங்க அரசாணை வெளியிடப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகிறது.

❖ ❖ ❖

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை



**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பேருந்து சாலைகள் துறை**

- தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் 32 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளை புதுப்பிக்கப்பட்டு ரூ.18.25 கோடி மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளன.

- கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரை புதிதாக துவங்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் 20 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் பின் ஒப்படைதல் என்ற அடிப்படையில் அமைக்க திட்டமிடப்பட்டு 13 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

- எழும்பூர் பகுதியில் உள்ள 8 சாலைகளில் நடைபாதை அமைக்கும் பணிக்கு ரூ.14.08 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

- 2016ஆம் ஆண்டு வரதா புயலினால் பாதிக்கப்பட்ட சாலைகள், நடைபாதைகள் மற்றும் நிழற்குடைகள் சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் முடிக்கப்படும்.

**உட்புறச்சாலைகள்**

- தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு (TURIF) திட்டத்தின் கீழ் 1,794 உட்புறச்சாலைகள் 316 கி.மீ. நீளத்தில் ரூ.170.02 கோடி மதிப்பீட்டு தொகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1493 உட்புறச்சாலைகள் 268.54 கி.மீ. நீளத்தில் ரூ. 139.07 கோடி மதிப்பீட்டு தொகையில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

**மழைநீர் வடிகால் துறை**

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு ரூ.1,101.43 கோடி மதிப்பிலான 1,147 எண்ணிக்கையில் 326 கி.மீ. நீளத்திற்கு

தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் இந்த அரசு அமைந்த 100 நாட்களில் 246 எண்ணிக்கையில் 60 கி.மீ. நீளத்திற்கு 153 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கடந்த மழை காலத்தில் மழைநீர் தேக்கம் கண்டறியப்பட்ட பகுதிகளில் ரூ.91.71 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.50 கோடி மதிப்பிலான பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

**ஆர்.கே. நகர் தொகுதி**

- ஆர்.கே.நகர் தொகுதியில் மழைநீர் தேங்காவண்ணம் இளையா தெரு முதல் வடக்கு டெர்மினல் சாலை வரை காமராஜர் சாலை, A.E. கோயில் தெரு வழியாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.4.31 கோடி மதிப்பீட்டில் 1.67 கி.மீ. நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது.

- இளையா தெரு மற்றும் காமராஜர் சாலை ஆகிய தெருக்கள் மிகவும் தாழ்வான பகுதியாக இருப்பதால் மழைநீர் வடிகால் மூலம் A.E. கோயில் தெருவில் அமைக்கப்பட்டு வரும் கீழ் நிலை தொட்டியில் மழைநீரை சேமித்து அங்கிருந்து நீழ் மூழ்கி உயர் அழுத்த பம்புகள் மூலம் தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையில் அமைக்கப்பட உள்ள மழைநீர் வடிகால் மூலம் வெளியேற்ற திட்டமிடப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

- ஆர். கே. நகர் தொகுதியில் உள்ள நீர்வழிக் கால்வாய்கள் கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய்களுக்கு வெள்ள தடுப்பு சுவர் 2.52 கி.மீ, நீளத்திற்கு ரூ.27.87 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 75 சதவிகிதம் பணிகள் முடிவடைந்துள்ளது.

**பாலங்கள் துறை**

- கீழ்க்கண்டுள்ள பணிகள் ரூ. 125.17 கோடி மதிப்பீட்டில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- எண்ணூர் நெடுஞ்சாலை இரயில்வே சந்திக்கடவு எண். 2எ மற்றும் மணலி சாலை இரயில்வே சந்திக்கடவு எண். 2பி–யை ஒருங்கிணைத்து மேம்பாலம் அமைக்கும் பணி.

- தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தை இணைக்கும் கொடுங்கையூர் கால்வாயின் குறுக்கே பெட்டக வடிவ பாலம் அமைக்கும் பணி.

- கொரட்டூர் உபரி நீர் கால்வாயின் குறுக்கே கால்வாய் சாலையில் மதனாங்குப்பம் பிரதான சாலை அருகேயுள்ள தரைப் பாலத்தினை இடித்து விட்டு புதிய பெட்டக வடிவ பாலம் (9 vents box culvert) அமைக்கும் பணி.

- நுங்கம்பாக்கம் சுரங்கப்பாதையில் உள்ள தரையை சீரமைக்கும் பணி .

- துரைசாமி சுரங்கப்பாதையில் உள்ள தரையை சீரமைக்கும் பணி .

- மேட்லி சுரங்கப்பாதையில் உள்ள தரையை சீரமைக்கும் பணி .

- ரிசர்வ் வங்கி அருகிலுள்ள பாலம் மற்றும் வாகன சுரங்கப்பாதையில் உள்ள நடைபாதை கைப்பிடி சுவர்களை சீரமைக்கும் பணி.

- ரெட்டேரி சந்திப்பு, ஸ்டீபன்சன் சாலை மற்றும் வாசுகி நகர் பகுதிகளிலுள்ள பாலங்கள் மற்றும் வாகன சுரங்கப்பாதையில் உள்ள நடைபாதை கைப்பிடி சுவர்களை சீரமைக்கும் பணி.

- விஜயராகவா சாலை, ஜி.என். செட்டி சாலை மற்றும் வெங்கட்நாராயணா சாலைகளில் உள்ள பாலங்கள் மற்றும் வாகன சுரங்கப்பாதையில் உள்ள நடைபாதை கைப்பிடி சுவர்களை சீரமைக்கும் பணி.

- வைத்தியநாதன் பாலத்தில் மேற்கு பக்கத்திலுள்ள தாங்கு சுவரை (Revetment) சீரமைக்கும் பணி.

**கட்டடத்துறை**

- 2016–2017 நிதியாண்டில் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் 2 பள்ளி கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- வார்டு அலுவலகம் ஒன்று ரூ.0.54 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நான்கு மருத்துவமனை கட்டிடங்கள் ரூ.6.16 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

- ஆக மொத்தம் 7 பணிகள் ரூ.8.89 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

**திட்டத்துறை**

**அம்மா குடிநீர்**

- மாண்புமிகு மறைந்த தமிழக முதல்வர் அவர்கள்



13.02.2016 அன்று சென்னை பெருநகரில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் (Reverse Osmosis) மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஏழை எளிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்கிணங்க "அம்மா குடிநீர் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்டார்கள்.

- இதன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏழை எளிய மக்கள் அதிகம் வசிக்கும் 50 இடங்களில் எதிர்மறை சவ்வூடு பரவுதல் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையங்கள் ரூ.5.30 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மணிக்கு 2,000 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். மக்களின் தேவைக்கேற்ப இதன் உற்பத்தி திறன் மேலும் அதிகரிக்கப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு விலை ஏதுமின்றி சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஏழை எளிய மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் தானியங்கி நிலையத்தில் எளிதில் குடிநீர் பெறும் வகையில் ஸ்மார்ட் கார்டு (Smart Card) வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 17.05.2017 வரை நாளொன்றுக்கு 20 லிட்டர் வீதம் மொத்தம் 5.23 கோடி லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுவருகின்றது.

**மின்துறை**

- மண்டலம் 4, 6, 8 மற்றும் 13இல் பல்வேறு இடங்களில் புதியதாக 320 எண்ணிக்கையில் 7 ஆண்டு உத்திரவாதத்துடன் தெரு விளக்கு கம்பங்களுடன் எல்.இ.டி. பிட்டிங்குகள் மற்றும் 8.15 கி.மீ. நீளம் புதை மின் கம்பி அமைக்கும் பணிகளுக்கு ரூ.195.88 இலட்சத்துக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.
- மண்டலம் 4 மற்றும் 5இல், 3 உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.18.8 இலட்சத்துக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது.

**பூங்கா துறை:**

- பசுமை இடங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் திறந்தவெளிகளில் பசுமையை மேம்படுத்தி பராமரிக்கப்படுவதுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு பிரிவுகள் அமைத்து நகரங்களின் உன்னதமான மதிப்பை அதிகரிக்க செய்வதே அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT) நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், 8 புதிய பூங்காக்கள் அமைப்பதற்கு ரூ. 7.55 கோடிக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை 4 பூங்கா பணிகள் முடிவுற்றுள்ளது மற்றும் மீதமுள்ள 4 பூங்கா பணிகள் ஜூன்' 2017 –க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- மேலும், 2016–2017ஆம் நிதியாண்டில், அடல் புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (AMRUT scheme) கீழ் 20 எண்ணிக்கையிலான பூங்காக்கள் அமைப்பதற்காக ரூ.10.47 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதிசெய்யப்பட்டு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

- ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் ஒரு பகுதியாக, தி.நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள பூங்காக்களை மறுசீரமைப்பு செய்து, நவீன வசதிகளுடன் கூடிய கட்டமைப்பினை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக, பகுதி சார்ந்த வளர்ச்சிப்பணிகள் (Area Based Development – ABD) பகுதியில் 8 பூங்காக்களில் மறுசீரமைப்பு செய்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.9.96 கோடி ஆகும்.

**இயந்திரப்பொறியியல் துறை**

- 3 மீட்டருக்கு குறைவான அகலம் கொண்ட கால்வாய்களில் தேங்கியுள்ள குப்பை மற்றும் மிதக்கும் கழிவுகளை அகற்றி சீரான நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு ஒழிப்பு மற்றும் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு , 3 – Robotic Multi-Purpose Excavator – கள் ரூ.19.65 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**அம்மா உணவகம்**

- பெருநகர சென்னை மாநகராட்சியில் 200 கோட்டங்களில் 400 அம்மா உணவகங்களும் பொது மக்கள் அதிகமாக பயன்படுத்தும் 7 அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்களும் மொத்தம் 407 அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

- 16.02.2017 முதல் 15.05.2017 வரை அம்மா உணவகங்கள் மூலமாக 2.69 கோடி இட்லிகளும், 79.73 இலட்சம் பலவகை சாதங்களும் 1.69 கோடி சப்பாத்திகளும், மேற்கண்ட உணவகங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் சுமார் 3.50 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

- இத்திட்டமானது சமூக பொருளாதார நிபுணர்களால் உலகில் மிக சிறந்த திட்டமாகவும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு உந்து சக்தியாகவும் விளங்குவதாக கருதப்படுகிறது.

**மருத்துவ சேவைகள் துறை**

- புற நோயாளிகளின் எண்ணிக்கை : 14,11,080
- 2,211 குழந்தைகளுக்கு காசநோய் தடுப்பூசிப்போடப்பட்டது.
- 12,815 குழந்தைகளுக்கு பெண்டா தடுப்பூசி போடப்பட்டது.
- 679 குழந்தைகளுக்கு தட்டம்மை நோய் தடுப்பூசி போடப்பட்டது.
- 16,07,363 குழந்தைகளுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டது.
- 20,390 குழந்தைகளுக்கு ஊசிவழி போலியோ தடுப்பூசி போடப்பட்டது.
- 6,604 ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு முழுமையான தடுப்பூசி போடப்பட்டது.
- 38,182 ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- 8,994 தாய்மார்களுக்கு கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.
- 1,146 தாய்மார்களுக்கு சுகப்பிரசவம் நடைபெற்றுள்ளது.
- 1,055 தாய்மார்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் பார்க்கப்பட்டுள்ளது.
- 1,674 தாய்மார்களுக்கு பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.
- 9 ஆண்களுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம்**

- 100 நாட்களில் 2,254 நபர்களுக்கு ரூ.9,67,00,000/– மற்றும் 9,016 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம்**

- டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில்

பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொள்ளும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் ரூ.8,78,92,000/– வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 26,180 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

**ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம்**

- பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.600/– வழங்கப்படுகிறது. 2,092 மொத்த பயனாளிகளுக்கு ரூ.12,55,200/- இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

**கல்வித்துறை**

- 2016 – 2017 கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமையான திட்டங்களான '**Spark Programme for Gifted and talented**' மற்றும் '**Spark programme for Challengers**' என்பவைகளின் மூலம் சிறப்பு பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி விகிதங்கள் அதிகமானதுடன் பல்வேறு சாதனைகளும் மாணவ மாணவியர்களால் நிகழ்த்தப்பட்டது.
- தேர்ச்சி விழுக்காடு 88.7%, இது கடந்த ஆண்டை விட 2.5% கூடுதல் ஆகும்.
- முதல் மதிப்பெண் 1,177, இதுவே பெருநகர சென்னை மாநகராட்சி வரலாற்றில் அதிகபட்ச மதிப்பெண் ஆகும்.
- இரண்டு பள்ளிகள் 100% தேர்ச்சி பெற்றுள்ளது.
- பாடங்களில் 100% மதிப்பெண்கள் பெற்றவர்கள் எண்ணிக்கை கடந்த ஆண்டு 51 ஆக இருந்தது இந்த ஆண்டு 119 ஆக உயர்ந்துள்ளது.
- 1000க்கு மேல் மதிப்பெண்கள் பெற்றவர்கள் எண்ணிக்கை கடந்த ஆண்டு 323 ஆக இருந்தது இந்த ஆண்டு 524 ஆக உயர்ந்துள்ளது.
- 10 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு இரண்டு மாணவிகள் 4 முதன்மை பாடங்களிலும் 100% மதிப்பெண் பெற்றுள்ளார்கள்.

**நகராட்சி நிருவாக ஆணையரகம்**

- தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டிற்கு கூடுதல் நிதியாக ரூ.101.93 கோடி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சாலைகளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2016–2017ஆம் ஆண்டிற்கு உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.75.48 கோடியும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.31.83 கோடியும் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிளை மேம்படுத்த ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.
- அம்ருத் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டில், 1 மாநகராட்சி மற்றும் 3 நகராட்சிகளில் ரூ.1,056.97 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகளும், 4 மாநகராட்சிகள் மற்றும் 2 நகராட்சிகளில் ரூ.1,491.70 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் மற்றும் 24 நகராட்சிகளில் ரூ.65.03 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டு பணிகளும் மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட நிதி உதவியுடன் 2016–2017 ஆம் ஆண்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் 1 மாநகராட்சி மற்றும் 36 நகராட்சிகளில் ரூ.116.16 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 231 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 11 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டில், 1,25,532 தனி குடியிருப்பு கழிவறைகள் கட்ட மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 40875 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.
- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டில் 2,184 இருக்கைகளுடன் சமுதாயக் கழிவறைகள் கட்ட மத்திய , மாநில மற்றும் உள்ளாட்சி நிதி பங்களிப்புடன் கட்டப்படவுள்ளது. 2,184 இருக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதில் 361 இருக்கைகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

**வறட்சி காலஅவசர நடவடிக்கைகள்**

**வீராணத்திலிருந்து தண்ணீர் பெறுதல்**

- தற்போது வீராணம் திட்டக் குழாய்கள் மூலம் நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் அளவு தண்ணீர் நெய்வேலியிலுள்ள சுரங்கங்களிலிருந்து கண்டறியப்பட்டு சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக பரவனாற்றிலிருந்து தண்ணீர் பெறுவதற்கு

தேவையான கூடுதல் உந்து வசதி செய்யப்பட்டது. ஏற்கனவே உள்ள 28 ஆழ்துளை கிணறுகளை சரி செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளது.

**கல் குவாரிகளிலிருந்து தண்ணீர் பெறுதல்**

- சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சார்ந்த புறநகர் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கு, நாளொன்றுக்கு 30 மில்லியன் லிட்டர் தண்ணீரை குன்றத்தூர் அருகில் சிக்கராயபுரத்தில் உள்ள கைவிடப்பட்ட குவாரிகளிலிருந்து பெற ஆய்வு செய்யப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

**விவசாய நிலங்களிலுள்ள கிணறுகளை வாடகைக்கு அமர்த்துதல்**

- தற்போதைய வறட்சி நிலை காரணமாக, 300 தனியார் விவசாய நிலங்களில் உள்ள ஆழ்துளை கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் தண்ணீர் பெறப்பட்டு வருகிறது. தேவைகேற்ப நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் வரை தண்ணீர் பெறப்படும்.
- நடமாடும் குடிநீர் ஊர்திகளின் எண்ணிக்கை 520லிருந்து 620ஆகவும், குடிநீர் ஊர்திகளின் நடையை (Trip) நாளொன்றுக்கு 4,200லிருந்து 6,200க்கு உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்தியா மார்க்–II பம்புகள் 150ம், 500 குடிநீர் தொட்டிகளும் (HDPE) பல்வேறு தெருக்களில் நிறுவி குடிநீர் வழங்கப்படவுள்ளது.

**பேரூராட்சிகள் இயக்ககம்**

- அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவடைந்த 95,437 பயனாளிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ரூ.3,006.27 கோடி மதிப்பீட்டில் சூரிய ஒளியுடன் கூடிய கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்அவர்களால் துவக்கப்பட்டு, 5 பயனாளிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- வேளாங்கன்னி பேரூராட்சியில் புராதன நகர வளர்ச்சி மற்றும் மேம்பாடு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக ரூ.10.37 கோடி மதிப்பீட்டில் 14 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ள 02.05.2017 அன்று பணியாணை வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைக்கு இந்திய அளவில் சிறந்த செயல்பாட்டிற்கான (Best Practice) விருது "சுகாதாரம்" என்ற தலைப்பின் கீழ் தமிழக பேரூராட்சிகளின் இயக்ககத்திற்கு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு நிறுவனத்தின் 47 வது வருடாந்திர விழாவில் மத்திய அரசால் வழங்கப்பட்டது. மேலும், அதற்கான பரிசுத் தொகை ரூ 1,00,000/– மற்றும் சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டது.
- தேனி மாவட்டம், குச்சனூர் பேரூராட்சியில் சுற்றுலா வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள 2 பணிகளுக்கு 25.05.2017 ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கன்னி பேரூராட்சியில் தமிழ்நாடு அரசு மற்றும் அம்ரூட் திட்டத்தின் (AMRUT) கீழ் ரூ.33.51 கோடி மதிப்பீட்டில் பாதாளசாக்கடை திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- 2016–2017ஆம் ஆண்டு நபார்டு திட்டத்தின் கீழ் 151 பேரூராட்சிகளில், 151 எண்ணிக்கையிலான சாலைப் பணிகள் 315.499 கி.மீ. நீளத்திற்கு ரூ.130 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.
- 2017–2018ஆம் ஆண்டில், தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் சமுதாய கட்டமைப்பு நிதியின் கீழ் ரூ.37 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் புதிய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணிகளுக்கு 26.05.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 1,751 குடியிருப்புகள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் வல்லம்



பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ315.70 கோடி மதிப்பீட்டில் 7.63 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- திருக்கழுகுன்றம் மற்றும் பொத்தனூர் பேரூராட்சிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ரூ 14.64 கோடி மதிப்பீட்டில் 0.48 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- அரியலூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கருங்குழி பேரூராட்சி கசடு மேலாண்மைத்திட்டம் ரூ.8.23 கோடி மதிப்பீட்டில் 0.16 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- கோடைக்காலத்தில் ஏற்பட்டுள்ள மற்றும் எதிர்நோக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி குடிநீர் வழங்கும்பொருட்டு பல்வேறு நிதி உதவியுடன் ரூ.121.18 கோடி மதிப்பீட்டில் 2,282 பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு, கூடுதலாக 93 மில்லியன் லிட்டர் குடிநீர் ஆதாரம் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

- கன்னியாகுமரி மாவட்டத்தில், 2.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகள் பயன் பெறவும், ஏற்கனவே பயனில் உள்ள பத்மநாபபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர் திட்டங்களை மேம்படுத்தவும், பொது சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.174 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

- நீடித்த நிலையான குடிநீர் பாதுகாப்பு இயக்கம் 2017–2018 (SuWaSeM) திட்டம் ரூ.20 கோடி செலவில் மாநிலத்தின் அனைத்து நகர்ப்புற பகுதிகளிலும் செயல்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தும் நோக்கில், அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி பல்வேறு செயற்குழு உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை



**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

- 21.02.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட தொகுதி–4 பணிகளுக்கான தேர்வில் 5,451 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 24.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட இளநிலை அறிவியல் அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 26.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட உதவி சிறை அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 104 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 27.04.2017 அன்று முடிவு அறிவிக்கப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் பணிகளுக்கான தேர்வில் 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.
- 16.02.2017 முதல் 17.05.2017 முடிய மொத்தம் 5,594 பேர் பல்வேறு பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- பவானி சாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் மூலம் 2 அணிகளில் 1,019 அலுவலர்களுக்கு 41 நாட்கள் கொண்ட அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 37 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சியினை கோவை, சேலம் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த அனுமதியும் ரூ.1,79,43,000/– நிதி ஒதுக்கீடும் வழங்கி உத்திரவிடப்பட்டது. இப்பயிற்சி அணிகள் துவங்கப்பட்டு இதுவரை 4 பயிற்சி அணிகளில் 3,308 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த 100 நாட்களில் மட்டும் 1,657 அலுவலர்களுக்கு 2 அணிகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- ஆக மொத்தம் பவானிசாகர் மற்றும் கோவை, வேலூர், சேலம் காவலர் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் கடந்த 100 நாட்களில் மட்டும் 2,676 அலுவலர்களுக்கு பயிற்சி அளித்து முடிக்கப்பட்டுள்ளது.
- அண்ணா மேலாண்மை நிலையம் மூலம் மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய மண்டல மையங்களையும் சேர்த்து 77 பயிற்சி திட்டங்களை நடத்தி 2,722 அரசு அலுவலர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.
- மண்டல பயிற்சி நிலையங்கள் 26 பயிற்சிகளின் மூலம் சுமார் 1,122 அலுவலர்கள் இந்த மூன்று மண்டல மையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டனர். இப்பயிற்சிகள் 32 மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒருங்கிணைப்புடன் நடத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

❖ ❖ ❖

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை



### சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

**கட்டம் –1:**

- இரண்டு வழித்தடங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையும் சின்னமலை முதல் சென்னை விமான நிலையம் வரையும் மற்றும் ஆலந்தூர் முதல் பரங்கி மலை வரையும் உள்ள அனைத்து உயர்த்தப்பட்ட வழித்தடங்களிலும் பயணிகள் சேவை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில், திருமங்கலம், அண்ணா நகர் கோபுரம், அண்ணா நகர் கிழக்கு, ஷெனாய் நகர், பச்சையப்பன் கல்லூரி, கீழ்ப்பாக்கம் நிலையங்கள் வழியாக உள்ள ஏழு நிலத்தடி மெட்ரோ இரயில் நிலையங்களில் 7.40 கி.மீ நீளத்தில் சுரங்க இரயில் பாதையில் மெட்ரோ இரயில் சேவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**கட்டம் – II**

- சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக ரூ.85,047 கோடி என்ற உத்தேச மதிப்பீட்டளவில் 107.55 கி.மீ. நீளத்தில் மேலும் மூன்று வழித்தடங்களில் மெட்ரோ இரயில் சேவையை செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு,மாநில அரசின் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையில் கடனுதவி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

- மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மேற்கொள்ளும் மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் அரசின் கொள்கை முடிவுகள் எடுப்பதற்கும் திட்டங்களை பயனுள்ள வகையில் செயல்படுத்துவதற்கும் உதவுகிறது. மேலும், அரசால் நிறைவேற்றப்படும் மேம்பாட்டு பணிகளுக்கான திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து மதிப்பீட்டாய்வு செய்யப்படுகிறது.
- இத்துறையின் ஆராய்ச்சி உதவியாளர்களுக்கு ஒரு மாத கால திறன் மேம்பாட்டுப் பயிற்சி அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது.

- இத்துறையின் மூலம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தி உள்ள சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டத்தில் உள்ள புதிய பயனாளிகளின் உண்மை விவரத்தை உறுதி செய்வது குறித்து மதிப்பீட்டாய்வு மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆக்கிரமிக்கும் அந்நியக் களைகளை உள்நாட்டு தாவரங்கள் வளர்ப்பதன் மூலம் பரவாமல் தடுப்பதால் ஏற்படும் பயன்பாட்டை மதிப்பீட்டாய்வு செய்து அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- மேலும் தமிழ்நாட்டில் திருமாங்கல்யம் திட்டத்தின்கீழ் தாலிக்குத் தங்கம் (விலையில்லா தங்க நாணயம்) வழங்கப்படுவது குறித்த மதிப்பீட்டாய்வு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் குறித்த ஆய்வு, நீர் பாதுகாப்பு மற்றும் விதான மேம்பாட்டுத் திட்டம் குறித்த ஆய்வு மற்றும் பள்ளிகளின் கல்வித் தர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ஆய்வு போன்றவை அரசின் மூலம் தெரிவு செய்யப்பட்ட வெளி மதிப்பீட்டாய்வு நிறுவனங்கள் மூலம் இத்துறையின் மேற்பார்வையின் கீழ் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பல்வேறு அரசு துறைகள் மதிப்பீட்டாய்வு செய்ய கேட்டுக்கொண்டதற்கிணங்க 11.05.2017 அன்று நடைபெற்ற மாநில மதிப்பீட்டுக் குழு கூட்டத்தில் இத்துறைக்கு 2017–2018ஆம் ஆண்டிற்கு 17 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் – அலகு – I, உதகமண்டலம்**

- சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டிற்கு மொத்தம் திட்ட நிதி ஒதுக்கீடாக ரூ.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ.25 கோடி சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் அலகு–I, உதகமண்டலம் மற்றும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் அலகு–II, சென்னை ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்ட நெறிமுறைகளின்படி உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் அலகு–I, உதகமண்டலத்திற்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 153 பணிகளுக்கான நிருவாக அங்கீகாரம்வழங்கப்பட்டது. அப்பணிகளுக்கான 50% தொகை சம்மந்தப்பட்ட பணிகளை செயல்படுத்தும் அலுவலர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 16.02.2017 முதல் 26.05.2017 வரையிலான 100 நாட்களில் நீலகிரி 110, கோயம்புத்தூர் 21, திருப்பூர் 8, ஈரோடு 14, ஆகிய மாவட்டங்களில் ரூ.1,499.927 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் 153 பணிகளில் 63 பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள 190 பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**மாநில திட்டக் குழு**

**தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்**

- 2017–2018ஆம் ஆண்டின் முதல் சுற்று 27 திட்டங்கள் ரூ.68.83 கோடி மதிப்பீட்டில் மூன்றாண்டுகளுக்கு பரிந்துரை செய்துள்ளது.

- வேளாண்மை மற்றும் சார்ந்த துறைகள், கல்வி, காடுகள்மற்றும் சுற்றுச்சூழல், போக்குவரத்து, தொழில்கள், தகவல் தொழில்நுட்பம், பொது சுகாதாரம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலன் ஆகியதுறைகள் சார்ந்ததாகும்.

- மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைகள் அரசுக்கு தேவையான ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி**

- மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி தமிழ்நாடு அரசால் வட்டாரங்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வைக் களைவதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறந்த தனித்துவமான திட்டமாகும்.

- இத்திட்டத்தின் கீழ் ரூ.50.38 கோடி மதிப்பீட்டில் 50 திட்டங்கள் மருத்துவம், கல்வி, வாழ்வாதாரம் ஆகியவற்றின் மூலமாக பின்தங்கிய வட்டாரங்களை மேம்படுத்துவதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**மனித மேம்பாட்டு அறிக்கை தயாரித்தல்**

- மாநிலத் திட்டக்குழு 32 மாவட்டங்கள் மற்றும் மாநிலத்திற்கான மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
- மாநில மனித மேம்பாட்டு அறிக்கை 11.05.2017இல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.
- 32 மாவட்டங்களுக்கான மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிப்புப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

**தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்சி வாரியம்**

- தமிழ்நாடு நிலப் பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்திற்காக ரூ.79.99 இலட்சம் ஆராய்ச்சி ஆய்வுகளுக்காகவும் மற்றும் அச்சகச் செலவிற்காக ரூ.2.46 இலட்சம் 2016–2017ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 2016–2017ஆம் ஆண்டில் ஐந்து புதிய ஆராய்ச்சி ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.
- அவற்றில் மூன்று ஆராய்வுகள் புவியல்சார் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்தல் சார்ந்த ஆராய்வுகளான காட்டுத் தீ பரவும் பகுதிகளைக் கண்டறிதல், நகர்ப்புற பசுமைப் போர்வை மற்றும் மாபெரும் மரம் வளர்ப்பு திட்ட மதிப்பீடு ஆகும்.
- கடந்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டின் நிலப் பயன்பாட்டு மற்றும் நிலப்பரப்பு மாற்றங்கள் மதிப்பிடுவதற்காக ஆராய்வு மற்றும் கிழக்கு கடற்கரைப் பகுதிகளை பசுமைப்படுத்துவதற்கான நிலங்களை கண்டறியம் உத்திகளுக்காக ஓர் ஆராய்வும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.
- பிப்ரவரி 2017இல், 2016–2017ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொடர் திட்டங்கள் மற்றும் புதிய ஆராய்ச்சிகளுக்காக ரூ.47.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- அச்சகச் செலவின் கீழ், தமிழ்நாட்டு மேற்கு தொடர்ச்சி மலைக்கான வாய்ப்புகள் குறித்து ஆவணப்படுத்துதல் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**சிறப்புபகுதி மேம்பாட்டு திட்டம்**

- சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- இத்திட்டம் மலைப்பகுதிகளை இலக்காகக் கொண்டுள்ளது இத்திட்ட செயல்பாட்டிற்காக ரூ.75 கோடி 2016–2017ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- திட்ட முன் மொழிவுகள் 30.11.2016ஆம் தேதி நடைபெற்ற முதலாவது மாநில அளவிலான அதிகார குழு கூட்டத்தில் ஒப்புதலுக்காக சமர்பிக்கப்பட்டது. மலைப்பகுதிகளின் மண் மற்றும் நீர் பாதுகாப்பிற்கும், மலைவாழ்மக்களின் வாழ்வாதார திட்டங்களுக்கும் சிறப்பு கவனம் அளிக்கப்பட்டுள்ளது.
- இக்கூட்டத்தில் மொத்தம் ரூ.76.23 கோடி மதிப்பிலான 630 திட்டங்கள் முன் மொழியப்பட்டது. இதில் ரூ.55.13 கோடி மதிப்பிலான 536 திட்டங்களுக்கு 2016–2017ஆம் நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- பிப்ரவரி 2017இல் ரூ.25 இலட்சம் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖



- முன்னாள் இராணுவத்தினர் 01.04.2003க்கு முன்பு குடிமைப் பணிபுரிந்து ஓய்வுபெற்று உயிர்நீப்பவருக்கு இராணுவ ஓய்வூதியத்துடன் குடிமைப் பணி ஓய்வூதியமும் அனுமதித்து ஆணையிடப்பட்டது

- அறிக்கை காலத்தில் வழங்கப்பட்ட நிதியுதவிகள்: ( 16.02.2017 முதல் 15.05.2017 வரை)

- 7688 நபர்களுக்கு தொகுப்பு நிதியிலிருந்து, கல்வி உதவித்தொகை வருடாந்திர பராமரிப்பு மானியம் உள்ளிட்ட உதவித் தொகைகள் ரூ.8,30,05,791/– வழங்கப்பட்டது.

- 15 நபர்களுக்கு ரூ.2,52,750/– செலவில் தையல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மருத்துவம், முதியோர் பாதுகாப்பு, சமூகப்பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 1,181 உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதி மூலமாக ரூ.1,18,02,694/– வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

- 16.02.2017 முதல் 15.05.2017 வரை 70 (11348–11278) முன்னாள் படைவீரர்கள் பல்வேறு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

- 12 முன்னாள் படைவீரர்களின் குடும்பங்களுக்கு வருங்கால வைப்புநிதி அமைப்பின் ஈட்டுறுதி காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.5,000/– முதல் ரூ.3,60,000/– வரை இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பொது (மறுவாழ்வு)த் துறை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பதவி ஏற்றதிலிருந்து தமிழகத்தில் உள்ள 107 முகாம்களில் (1 சிறப்பு முகாம் உட்பட) 01.04.2017 தேதி நிலவரப்படி வசிக்கும் 62,788 இலங்கை தமிழ் அகதிகளும் மற்றும் வெளிப்பதிவில் உள்ள 37,011 வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீடித்த மற்றும் உயர்த்தப்பட்ட நிவாரண திட்டங்கள் பின்வருமாறு:–

- தமிழக மக்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்கள், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

- இலவச அரிசி திட்டத்தின் கீழ், பயனாளிகள் – 19,274, 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் – 6 கி.கி. ஏனையோருக்கு மாதம் 12 கி.கி.

- முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டம் : 6 பேர்.

- குடிமை பொருட்கள் வாங்குவதற்கான அனுமதி 19,274 பேர்.

- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் பயனாளிகள் – 1 (வேலூர்) 8 வயதிற்குட்பட்ட குழந்தைகள் – 1 பெண் குழந்தைக்கு ரூ.50,000/– ஏனையோருக்கு – 2 பெண் குழந்தைகளுக்கு ரூ.25,000/– வீதம்

- **மாதாந்திர பணக்கொடை:** மாதாந்திர பணக்கொடை பின்வருமாறு உயர்த்தப்பட்டு முகாம்களில் வசிக்கும் அனைத்து அகதிகளுக்கும் வழங்கப்படுகின்றன (முந்தைய பணக்கொடை அடைப்பு குறியில் வழங்கப்பட்டுள்ளது). குடும்பத் தலைவருக்கு ரூ.1000/– (ரூ.400/–), பெரியவர்களுக்கு ரூ.750/– (ரூ.288/–), 12 வயதுக்குட்பட்ட சிறியவர்களுக்கு ரூ.400/– (ரூ.180/–). முகாம்களில் தங்கியுள்ள 62,778 அகதிகளுக்கும் மாதாந்திர அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

- **ஈமக்கிரியைக்கான நிதி உதவி :** இறந்தவர்களுக்கான ஈமக்கிரியை நிதி உதவி ரூ.2,500/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இந்த வருடம் நிலுவையில் உள்ள 107 குடும்பங்கள் பயனடைந்துள்ளனர். (திண்டுக்கல் 22, கிருஷ்ணகிரி 9, மதுரை 20, சேலம் 16, திருப்பூர் 4, திருவள்ளூர் 20, திருவண்ணாமலை 7, வேலூர் 8 விருதுநகர் 1).

- **மருத்துவர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்கு மகப்பேறுக்காக வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 6,000/–லிருந்து ரூ.12,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 94 பெண்கள் பயனடைந்துள்ளனர். (விழுப்புரம் 1, திண்டுக்கல் 31, நாமக்கல் 5, சேலம் 49, திருவண்ணாமலை 2, வேலூர் 6).

- **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவி திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் பட்டம் / பட்டயம் கல்வி பயின்ற பெண்களுக்கு ரூ.50,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது. இதரப்பெண்களுக்கு ரூ.25,000/– மற்றும் 4 கிராம் திருமாங்கல்யத்திற்கான தங்கம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 6 பெண்கள் பயனடைந்துள்ளனர். (திண்டுக்கல் 22, விழுப்புரம் 1, நாமக்கல் 1 ).

- **முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதி:** முதலமைச்சரின் இலங்கை அகதிகள் நிவாரண நிதியிலிருந்து விபத்து காரணமாக இறப்பவருக்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூ.15,000/– யிலிருந்து ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 3 குடும்பங்கள் (3 குடும்பம் ரூ.25,000/– வீதம்) இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். (திருவண்ணாமலை 2, திண்டுக்கல் 1).

- **சுழல் நிதி** – வெளிநாடு வாழ் தமிழர்கள் இறப்பின் போது அவர்களின் உடலைக் கொண்டு வருவதற்கும், வறிய நிலை / மருத்துவ இயலாமையில் உள்ள தமிழர்களை ஆணையர் (மறுவாழ்வு மூலமாக தாய் நாட்டிற்கு திரும்ப அழைத்து வருவதற்கும் ஏற்படும் செலவினங்களை மேற்கொள்ள ரூ.1 கோடி சுழற்சி நிதியாக வழங்கப்பட்டதில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை ரூ.17,25,000/– மருத்துவ படிப்பிற்காக ஜார்ஜியா நாட்டிற்குச் சென்று உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்த திரு சீனிவாசன் என்பவருக்கும் ரூ.62,658/– சவுதி நாட்டிலிருந்து திருப்பி தாயகம் அனுப்பப்பட்ட 44 தமிழர்களுக்கு செலவிடப்பட்டது.

❖ ❖ ❖

## பொதுப்பணித்துறை






### நீர்வள ஆதாரத்துறை

**2017–2018ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீடு**

- 2017–2018ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் பாசன கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் பயன்பாட்டிலுள்ள பாசன கட்டுமானங்களை புனரமைக்கும் பணிகளுக்கு ரூபாய் 3,264 கோடியே 70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, ரூபாய் 9 இலட்சம் 73 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் (DRIP)**

- தமிழ்நாட்டில் உள்ள 107 அணைகளில் உலக வங்கி கடனுதவியுடன் இத்திட்டம் செயலாக்கத்திலுள்ளது. இதில், நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகளும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் (TANGEDCO) 38 அணைகளும் அடங்கும். இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூபாய் 745 கோடியே 49 இலட்சமாகும். இதில், நீர்வள ஆதாரத்துறையின் பணிகளுக்கான திட்ட மதிப்பீடு ரூபாய் 469 கோடியே 94 இலட்சமாகும்.
- நீர்வள ஆதாரத்துறையின் 69 அணைகளில், 67 அணைகளின் புனரமைப்பு பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு 35 அணைகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 32 அணைகளில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் மேற்கொள்ளப்படும் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டம்.**

- காவேரி கழிமுகப்பகுதியில், பருவநிலை மாறுதலை எதிர்கொள்ள ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவி ரூபாய் 1,092 கோடி மதிப்பீட்டில் கடைமடை பகுதிகளில் உள்ள நீரொழுங்கிகளை மீள அமைத்து, வடிகால்களை மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 1,560 கோடி மதிப்பில் செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில், ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆலோசனை குழுவின் பரிந்துரையான கீழ்வெண்ணாறு அமைப்பின் திட்டப் பணிகள் 'தனி திட்டப் பணியாக' மேற்கொள்ளப்படவுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆலோசனை குழுவின் பரிந்துரைப்படி இதர பகுதிகளில் (காவேரி வடிநிலம் மற்றும் வெண்ணாறு வடிநிலத்தின் விடுபட்ட பகுதிகள்) தொடர் திட்டங்களாக செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைக்கு ரூ.960 கோடியே 66 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 6 ஆறுகள் / வடிகால்களில் அரிச்சந்திரா நதி, அடப்பாறு ஆறு, பாண்டவையாறு, வெள்ளையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய், தனித்திட்டப் பணியான வெண்ணாறு உபவடிநிலத்தின் உப்பனாறு வடிகால் மற்றும் 13 மின் இறவை பாசன திட்டங்களை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளன. அனைத்து தொகுப்புகளிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திட்ட மேலாண்மை அலகு அமைத்தல், திட்ட செயலாக்க அலகு அமைத்தல், சுற்றுப்புறச் சூழல் மற்றும் கடலோர ஒழுங்குமுறை மண்டல தடைநீக்க கட்டணம், சுற்றுப்புறச்சூழல் தாக்க பணிகள் தொடர்பாக ஆலோசகர் நியமனம் மற்றும் மறுகுடியமர்வு பணிகள் ஆகியவை ரூ.164 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

**புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல்**

- பெரம்பலூர் மாவட்டத்தில் மருதையாற்றின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம், திருவள்ளூர் மாவட்டத்தில் கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் மற்றும் வேலூர் மாவட்டத்தில் மலட்டாற்றின் குறுக்கே மண் அணை, வழிந்தோடி மற்றும் மதகுகள், ரூபாய் 483 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில், 3 புதிய நீர்த்தேக்கங்களை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் 9133 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

**புதிய அணைக்கட்டுகள்**

- சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை வட்டம், உதயாச்சி கிராமத்தின் அருகில் கைக்குடி மற்றும் அதன் தொகுப்பு ஏரிகளுக்கு நீர் வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே ரூபாய் 10 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் அணைக்கட்டு அமைக்கும் பணி நபார்டு வங்கி நிதியுதவியுடன் நிறைவடைந்துள்ளது. இதன் மூலம் 1,501 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடைந்துள்ளன.

**ஏரிகளைப் புனரமைத்தல்**

- சென்னை, இராமநாதபுரம், வேலூர், சிவகங்கை, ஆகிய மாவட்டங்களிலுள்ள 105 ஏரிகளை ரூபாய் 54 கோடியே 68 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைத்து, புனரமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு 84 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் வெவ்வேறு நிலையில் முன்னேற்றத்திலுள்ளன.

**வெள்ளத் தடுப்புப் பணிகள்**

- கடலூர் மாவட்டத்தில், வெள்ளப்பாக்கம் வாய்க்கால், கடிலம் ஆறு, விசூர் ஓடை மற்றும் பெரியகாட்டுப் பாளையம் ஓடை ஆகியவற்றை புனரமைத்தல், பாசிமுத்தான் ஓடை, தில்லையம்மன் ஓடை, ஓமக்குலம் வடிகால், கான்சாகிப் கால்வாய் மற்றும் முத்தையாபிள்ளை உபரி ஆகியவற்றிற்கு வெள்ளத் தடுப்புப் பணிகள் மற்றும் மணவாய்க்கால் மற்றும் பழைய கொள்ளிடத்தினை புனரமைத்தல் ஆகிய 5 வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூபாய் 140 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ள அரசின் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**கடலோரப் பாதுகாப்புப் பணிகள்**

- திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர் குப்பம் முதல் எண்ணூர் வரை தொலை கல் 15/200 கி.மீ. முதல் 19/000 கி.மீ. வரை, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடு புதூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இரவிபுத்தன்துறை கிராமத்தில் தூண்டில் வளைவுகள்/ கடலரிப்பு தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகளுக்கு ரூபாய் 112 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**நீர்நிலைகளை தூர்வாருதல்**

- பாசன மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கு உரிய நேரத்தில் நீர் அளிக்க நீர்வள ஆதாரத்துறை அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள வண்டல் மண்ணை விவசாயிகள், மண்பானை செய்பவர்கள் மற்றும் பொதுமக்களின் உபயோகத்திற்கு இலவசமாக



எடுத்து செல்வதற்கு உரிய கருத்துருக்களை நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர்கள் தயாரித்து மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் நீர்நிலைகளில் உள்ள வண்டல் மண் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## அணைகளை தூர்வாருதல்

### பரப்பலாறு நீர்த்தேக்கத்தைத் தூர்வாருதல்

- பரப்பலாறு நீர்த்தேக்கத்தை ரூபாய் 19 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் கொள்ளளவினை மீளப்பெறும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திடமிருந்து, சுற்றுச்சூழல் தடையின்மைச் சான்று பெறப்பட்டவுடன் தூர்வாரும் பணிகள் செயலாக்கப்படும்.

### வீராணம் ஏரியைத் தூர்வாருதல்

- கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், லால்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள வீராணம் ஏரியினை ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் தூர்வாரி, அதன் 1,465 அடி முழுக்கொள்ளளவினை மீளப்பெறுவதற்கான பணிகள் செயலாக்கத்திலுள்ளன. மேலும், இத்திட்டத்தில், இவ்வேரிக்கு நீர்வழங்கும் வடவாறு வாய்க்காலினை புனரமைத்து அதன் நீர்க் கடத்தும் திறனை அதிகரிப்பதற்கான பணிகளும் செயலாக்கப்படுகின்றன. இந்த ஏரி 44,856 ஏக்கர் பாசன நிலங்களுக்கு விவசாயத்திற்கும் மற்றும் சென்னை பெருநகரத்தின் குடிநீர் தேவையையும் பூர்த்தி செய்கின்றது.

### தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) நிதியுதவியுடன் செயலாக்கப்படும் திட்டங்கள் / பணிகள்

- நபார்டு வங்கி (RIDF XXII) நிதியுதவியுடன் ரூ.363 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டிலான 71 பணிகள் மேற்கொள்ள அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. 36 பணிகள் நிறைவடைந்துள்ளன; மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்திலுள்ளன.

### விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் (AIBP) கீழ் காவேரி ஆற்றுப் படுகையை நவீனப்படுத்தும் திட்டம் .

- காவேரி வடிநிலத்தில் பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைத்து திறன்மிகு பாசன நீர் மேலாண்மையினை உறுதி செய்யும் வகையில் திட்ட முதல் நிலை அறிக்கை

ரூபாய் 11,420 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மத்திய நீர்க் குழுமம், இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க, கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. காவேரி வடிநிலப்பகுதியில் உள்ள பாசன அமைப்புகளை மேம்படுத்தி, புனரமைப்பதற்கு 9 சிப்பங்களில் கருத்துரு தயாரிக்கப்பட்டு, சிப்பம் (Package) வாரியான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

- இத்திட்டத்தின் முதற்கட்டமாக "கல்லணைக் கால்வாய் கட்டுமானங்களை மேம்படுத்திப் புனரமைக்கும் திட்டம்" எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 2,610 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன பயன் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறும் பொருட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. செயலாளர், ஆறுகள் மேம்பாடு மற்றும் கங்கையினை புதுப்பிக்கும் துறை, நீர்வள ஆதார அமைச்சகம் (MoWR) அவர்கள் தலைமையில் நடைபெற்ற மத்திய நீர் குழுமத்தின் பாசனம், வெள்ளத்தடுப்பு மற்றும் பல்வகை பயன்பாடு திட்டத்திற்கான, தொழில்நுட்ப குழுவின் 130வது கூட்டத்தின் போது இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.2,298 கோடியே 75 இலட்சத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டது.
- மேலும், கட்டளை உயர்மட்டக் கால்வாய் பாசன அமைப்பை மேம்படுத்தி, புனரமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.270 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. நிலத்தடி நீர்ச் செறிவூட்டும் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை, ரூ.110 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது, இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை 2016–2017ஆம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ.131 கோடிக்கு தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.
- இதே போன்று, ராஜாவாய்க்கால், கீழ் கொள்ளிடம், நொய்யல், கீழ் பவானி திட்டம், காவேரி மற்றும் வெண்ணாறு வடிநில பாசன அமைப்புகளை புனரமைத்து மேம்படுத்திட விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**நீர்வள நிலவள திட்டம் II**

- வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட நீர்வள நிலவளத் திட்டத்தின் தொடர் திட்டமாக நீர்வள நிலவளத் திட்டம்–II, மாநிலத்தின் 29 மாவட்டங்களில் மீதமுள்ள 66 உப வடிநிலங்களிலுள்ள 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன் பெறும் வகையில் ரூ.3,042 கோடி மதிப்பீட்டில் 2017ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்தபடவுள்ளது.
- இத்திட்டம், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தொடர்புடைய 7 துறைகளை ஒருங்கிணைத்து நீர்வள ஆதாரத்துறை மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.
- இத்திட்டத்தில், நீர்வள ஆதாரத்துறையின் மூலம், ரூபாய் 2,195 கோடி மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளை புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், ஏரியின் நீர்ப் பரப்பு பகுதியில் செயற்கைமுறை நீர் செறிவூட்டும் கிணறுகளை கட்டுதல், காவேரி கழிமுகப்பகுதி மற்றும் பிற உப வடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- முதற்கட்டமாக, 18 உப வடிநிலங்கள் புனரமைப்பு பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, 18 விரிவான திட்ட அறிக்கைக்கு உலக வங்கி தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது.

**குடிமராமத்து பணிகள்**

- 2016–2017ஆம் ஆண்டு, குடிமராமத்து திட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சர் அவர்களால் 13.03.2017 அன்று துவங்கப்பட்டு மாநிலத்தின் 30 மாவட்டங்களில் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் குடிமராமத்து பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
- 2017–2018ஆம் ஆண்டில் 2,065 குடிமராமத்து பணிகள் ரூ.331.679 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளன; இப்பணிகள் நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP)**

- 8 இடங்களில் நீர்வள ஆதாரத்தினை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகளை

உருவாக்குவதற்கு ரூ.21 கோடிக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பசுமை பருவநிலை நிதித்திட்டம்**
**(Green Climate Fund)**

- பருவ நிலை மாறுதலால் ஏற்படும் விளைவுகள் மற்றும் மாற்றங்களை குறைப்பதற்காக மத்திய நீர்க்குழுமத்தின் வழிகாட்டலின்படி 2008இல் பருவநிலை மாறுதலுக்கான தேசிய செயல் திட்டம் (NAPCC) முறைப்படுத்தப்பட்டது.
- இதனடிப்படையில், தமிழ்நாட்டில் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் பாசன அமைப்புகளின் விரிதிறனை அதிகரிக்கும் வகையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டுவதற்காக ரூபாய் 1,444 கோடியே 99 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, பசுமை பருவநிலை நிதித்திட்டத்தின் கீழ், பருவ நிலை மாறுதலுக்கான தமிழ்நாடு மாநில செயல் திட்டத்தின் மாநில அளவிலான செயற்குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**சென்னை மாநகருக்கு கிருஷ்ணா குடிநீர் பெறுதல்**

- 2016–2017ஆம் ஆண்டில் 18.10.2016 முதல் 22.12.2016 வரை 992 மில்லியன் கன அடி மற்றும் 19.01.2017 முதல் 23.03.2017 வரை 1286 மில்லியன் கன அடி ஆக மொத்தம் 2278.216 மில்லியன் கன அடி கிருஷ்ணா நதிநீர் பெறப்பட்டுள்ளது. இதில், 16.02.2017 முதல் 17.05.2017 வரை 495.80 மில்லியன் கன அடி கிருஷ்ணா நதிநீர் பெறப்பட்டுள்ளது. மேலும், சென்னை மாநகருக்கு பெறப்படவேண்டிய மொத்த அளவு நீரினை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மணல் விற்பனை**

- 16.02.2017 முதல் 17.05.2017 வரை 1,68,606 லாரி லோடுகள் மணல் விற்பனை செய்யப்பட்டு அரசுக்கு ரூபாய் 14 கோடியே 16 இலட்ச வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தற்பொழுது மணல் குவாரி மற்றும் மணல் கிடங்குகளை அரசு நேரடியாக எடுத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ரொக்கமில்லா பரிவர்த்தனையை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கட்டட அமைப்பு**

- விருதுநகர் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "ஏ மற்றும் பி" வகை அரசு அலுவலர்களுக்கு 25 பணியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் 72.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைக் கட்டடம் (2 அறைகளுடன்) கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்களால் 29.04.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை, அடையாறு பசுமைவழிச் சாலையில் அமைந்துள்ள பொதிகை வளாகத்தில் 4.84 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அமைச்சர்களுக்காக நான்கு அரசு மாளிகைகள் கட்டும் பணி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.
- சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கட்டடத்திலுள்ள பணியாளர் கழிவறை, தரைகள் மற்றும் அலுவலக அறைகள் ஆகியவற்றினை 76.95 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி சுற்றுலா மாளிகை வளாகத்தில் 3.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி கட்டும் பணி தொடங்கப்படவுள்ளது.

❖ ❖ ❖

# வருவாய்த் துறை




- அம்மா திட்ட முகாமில் 16.02.2017 முதல் 15.05.17 வரை 98,380 மனுக்கள் பெறப்பட்டு 92,697 மனுக்கள் தீர்வு.

- சிவகங்கை, மதுரை, வேலூர், அரியலூர், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் முக்கிய பிரமுகர் வருகைக்கான 7 புதிய வாகனங்கள் வாங்க ரூ.1,34,20,448/– நிதி ஒதுக்கீடு. மேலும், திருவள்ளூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் சிவகங்கை ஆகிய 4 மாவட்ட ஆட்சியர்களுக்கு புதிய சீருந்துகள் வாங்க ரூ.39,29,651/– நிதி ஒதுக்கீடு.

- 440 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பொருட்டு ரூ.1,88,35,958/– மற்றும் 9191 கிராம நிருவாக அலுவலர்களின் மடிக்கணினிகளுக்கு 3G இணையதள இணைப்பிற்காக ரூ.3,16,34,962/–நிதி ஒதுக்கீடு.

- 462 துணை ஆட்சியர்களுக்கு டேப்லெட் கணினிகள் வழங்கும் பொருட்டு ரூ. 2,35,30,584/– நிதி ஒதுக்கீடு.

- 31 வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் கட்ட ரூ.74,18,92,000/– மற்றும் 31 வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்ட ரூ.6,96,57,000/– ஆக மொத்தம் ரூ.81,15,49,000/– நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை.

- 5 கோட்டாட்சியர் அலுவலகங்கள். இவற்றில் சென்னை மாவட்டத்தில் ரூ.486 இலட்சம் மதிப்பீட்டில் எழும்பூர் மற்றும் தண்டையார்பேட்டை ஆகிய 2 கோட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் கட்டுவதற்கும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.210 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டாட்சியர் அலுவலகம், மதுரை மாவட்டத்தில் ரூ.204 இலட்சம் மதிப்பீட்டில் மேலூர் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் ரூ.204 இலட்சம் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகம் கட்டடம் என 5 கோட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு ரூ.8,77,05,000/– மற்றும் 5 கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.1,61,25,000/–ஆக மொத்தம் ரூ.10,38,30,000/– நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- கடலூர் மாவட்டத்தில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் குறிஞ்சிபாடி வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் பாபநாசம் வட்டாட்சியர் அலுவலகம் ஒவ்வொன்றும் ரூ.2,34,30,000/– ஆகிய இரண்டு வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள்

கட்டுவதற்கு ரூ.4,68,60,000/– நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.

- தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.2.57 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.
- தூத்துக்குடி மாவட்டத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.
- திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.
- திருப்பூர் மாவட்டத்திலுள்ள பெருந்திட்ட வளாகத்தில் ஜம்மனைப் பள்ள ஓடையில் ஏற்படும் வெள்ளப்பெருக்கினை தடுப்பதற்கு தடுப்புச்சுவர் கட்டுவதற்கு ரூ.7,85,80,000/– நிருவாக மற்றும் நிதி ஒதுக்கீடு.
- 33 வருவாய் துறை கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**பேரிடர் மேலாண்மை**

2016ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் பருவமழை பொய்த்ததினால், தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி நிலைமையினை சமாளிக்க கீழ்க்காணும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

- 3 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதி வரையறைகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருள் மானிய நிவாரணத் தொகை வழங்க ரூ.2,247/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது.
- கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.26.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கால்நடை தீவனம் விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து சென்னை பெருநகர குடிநீர் வாரியம்–40 கோடி, தமிழ்நாடு குடிநீர் வாரியம்– ரூ.25 கோடி, நகராட்சி நிருவாகத் துறை–ரூ.35 கோடி என மொத்தம் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- வறட்சியை தவிர்க்கும் வகையில் நீண்டகாலப் பணியாக நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டல்களை தூர்வாரிடவும் அவற்றை விவசாய நிலங்களுக்கு இலவசமாக வழங்கிடவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

**நில நிருவாகம்**

**"இணையவழி பட்டா மாறுதல் திட்டம்"**

- இந்த அரசு 16.02.2017 அன்று பதவியேற்ற நாள் முதல் 15.05.2017 வரை 4,78,275 பட்டா மாறுதல் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றில் 3,45,302 மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, 2,10,025 பட்டா மாறுதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

**நிலச்சீர்திருத்தம்**

**முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம்**

- இயற்கை மரணத்திற்கான நிதியுதவி 24.04.2017 முதல் ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.
- இத்திட்டத்திற்கு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த ரூ.205.99 கோடி நிதியானது 2017–2018ஆம் ஆண்டில் ரூ.250.99 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- இப்புதிய திட்டத்தின் கீழ் 16.02.2017 முதல் 15.05.2017 வரையில் ரூ.63.07 கோடி 1,50,305 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**வருவாய் நீதிமன்றம்**

- பயிரிடு குத்தகைதாரர்கள் மற்றும் நிலஉடமைதாரர்கள் (கோயில் நிலங்கள் உள்பட) ஆகியோர்களுக்கிடையே ஏற்படும் தகராறுகள் மாநிலத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களால் தீர்த்து வைக்கப்பட்டன.

- 31.01.2017 அன்று 4,951 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 16.02.2017 முதல் 15.05.2017 வரை 1,442 வழக்குகள் வரப்பெற்று மொத்தம் நிலுவையில் உள்ள 6,393 வழக்குகளில் 16.02.2017 முதல் 15.05.1207 வரை 2114 வழக்குகள் முடிக்கப்பட்டுள்ளன. 15.05.2017 அன்று 4,279 வழக்குகள் மாவட்டத்தில் உள்ள 10 வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

- உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5.00 ஏக்கர் வரை புஞ்சை நிலம் அல்லது 2.50 ஏக்கர் வரை நன்செய் நிலம் வைத்திருந்து அதில் நேரடியாக விவசாயம் செய்யும் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், குத்தகை அடிப்படையில் விவசாயம் செய்யும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெற்று வருகின்றனர்.

- இத்திட்டத்தின் கீழ் கல்வி, திருமணம், காசநோய், புற்றுநோய், எச்.ஐ.வி./எய்ட்ஸ், இடைச் சவ்வூடு மூலம் பிரித்தல் (Dialysis), கை, கால் சம்பந்தப்பட்ட எலும்பு முறிவு மற்றும் நிலைகுலைவு, நரம்பு சம்பந்தப்பட்ட நோய், முதுகு தண்டுவடம் பாதிப்பு, இதய நோய், பார்வை இழத்தல், கல்லீரல் நோய், சிறுநீரக நோய், மனநிலை பாதிப்பு, அரிவாள் செல் இரத்த சோகை, இரத்த அளிவு சோகை, ரத்த உறையா நோய் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட விவசாய உறுப்பினர்களின் தற்காலிக உடல் திறனற்ற காலத்திற்கு மாத உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம், விபத்து நிவாரணம், இயற்கை மரண உதவித்தொகை, ஈமச்சடங்கு செலவு மற்றும் எச் ஐ வி–யினால் உயிரிழந்த உறுப்பினரின் அநாதை குழந்தைகளுக்கு உதவித்தொகை ஆகியவைகள் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

- 1,59,58,265 நபர்கள் உறுப்பினர்களாகவும் 1,17,49,934 நபர்கள் உறுப்பினர்களைச் சார்ந்த உறுப்பினர்களாகவும் மொத்தம் 2,77,08,199 நபர்கள் இத்திட்டத்தின்கீழ் கணக்கெடுக்கப்பட்டுள்ளனர்.

**நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்ட விவரம்**

- நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை சார்பாக கடந்த 100 நாட்களில் 1,533 நத்தம் பட்டாக்களும், 71,049 நகர பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன

**இணையவழி பட்டா மாறுதல்**

- நிலஅளவைப் பதிவேடுகள் துறையின் நவீன மயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக 01.01.2014 முதல் வட்ட வாரியாக இணையவழி பட்டா மாறுதல் நடவடிக்கைகள் படிப்படியாக இணையவழிக்கு கொண்டுவரப்படுகின்றன. மேலும், ஏற்கெனவே இணையவழிக்கு கொண்டுவரப்பட்டுள்ள 277 வட்டங்களுக்கும் கூடுதலாக கடந்த 100 நாட்களில் 3 வட்டங்கள் இணையவழிக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

**புலப்படங்கள் கணினி மயமாக்கல் திட்டம்**

- நில அளவை ஆவணங்களை கணினி மயமாக்கும் பணிகளில் ஒன்றான புலப்படங்களை கணினிமயமாக்கும் பணியில் கடந்த 100 நாட்களில் 4.25 இலட்சம் புலப்படங்கள் வெளி ஆதார முறை மூலம் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 55.49 இலட்சம் புலப்படங்களில் 49.75 இலட்சம் புலப்படங்கள் இதுவரையில் கணினிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 144 வட்ட புலப்பட தரவுதளம் மத்திய சேவைக் கணினிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் மூலம் அ–பதிவேடு / சிட்டா நகல்களைப்போன்றே புலப்படங்களை பொதுமக்கள் இணையவழியில் பெற இயலும்.

**இணையவழி பட்டா மாறுதல் திட்டத்திற்காக வட்ட துணை ஆய்வாளர்கள், வட்ட ஆவண வரைவாளர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்**

- இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை செம்மையாக நிறைவேற்றுவதற்காக, துணை ஆய்வாளர்கள் மற்றும் வட்ட ஆவண வரைவாளர்கள் ஆகியோருக்கு மடிக்கணினி வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது. அதன்படி, வட்ட அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் 161 வட்டத்துணை ஆய்வாளர்கள் மற்றும் 126 வட்ட ஆவண வரைவாளர்களுக்கு ரூ.82.34 இலட்சம் செலவில் மடிக்கணினி வழங்கிட எல்காட் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மே–2017 இறுதியில் மடிக்கணினிகள் விநியோகம் துவங்கப்படும் என எதிர் நோக்கப்படுகிறது.

**நவீன நில அளவைப் பயிற்சி**

- மாநிலம் முழுவதும் தற்போது நடைபெற்று வரும் நவீன நில அளவை பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்காக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலுள்ள சி.ஸ்டார் பயிற்சி நிலையத்தில் 75 நிலஅளவர் மற்றும் வரைவாளர்களுக்கு நவீன நில அளவை பயிற்சி கடந்த 100 நாட்களில் வழங்கப்பட்டுள்ளது.

- இது தவிர ஒரு இந்திய ஆட்சி பணி அலுவலர் மற்றும் 4 துணை ஆட்சியர்கள், நிலஅளவை பதிவேடுகள் துறை, வருவாய் துறை, பத்திரப்பதிவுத்துறை, தமிழ்நாடு தலைமைச் செயலக பல்வேறு துறை சார்ந்த 531 அலுவலர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு நிலஅளவை பயிற்சி நிலையத்தில் நிலஅளவை சார்ந்த அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**கூட்டுப்பட்டாவை தனிப்பட்டாவாக மாற்றுதல்**

- மாநிலத்தில் கூட்டுப்பட்டாக்களைத் தனிப்பட்டாவாக மாற்றும் திட்டம் காஞ்சிபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, இம்மாவட்டங்களில் கடந்த 100 நாட்களில் 781 கூட்டுப்பட்டாக்கள் தனிப்பட்டாக்களாக பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

**நவீன நில அளவை தொழில்நுட்பம் மூலம் மறு நில அளவை**

- கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களில் நவீன நிலஅளவை தொழில்நுட்பத்தைக் கொண்டு மறு நிலஅளவைப் பணிகளை மேற்கொள்ள அரசு ஏற்கெனவே ஆணையிட்டுள்ளது. இதை துவங்குவதற்கும் அதனை விரைவாக மேற்கொள்வதற்கும் 200 பூகோள நிலைக்கலன் கருவி–RTK Receivers (Differentially Global Positioning System –Real Time Kinematic Receivers) ஆகியவற்றினை கொள்முதல் செய்ய பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இக்கருவிகள் மே–2017 இறுதிக்குள் பெறப்பட்டு மறுநிலஅளவைப் பணி முழுவீச்சில் துவங்கப்பட உள்ளது.

- மேலும், பூகோள நிலைக்கலன் கருவி மூலமான நிலஅளவைப் பணியின் துல்லியத்தன்மையை அதிகரிப்பதற்காக மாநிலம் முழுவதும் 70 அடிப்படை நிலையங்களைக் கொண்ட தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலையங்களை (Continuously Operating Reference Stations- CORS) நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியான இயக்க குறிப்பு நிலைய வலையமைப்பு செப்டம்பர் – 2017 தொடக்கத்தில் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கருணை அடிப்படையில் பணி நியமனம்**

- சிறப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக 117 பணியாளர்கள் (76 நில அளவர்கள், 33 வரைவாளர்கள், 3 இளநிலை உதவியாளர்கள், 4 புல உதவியாளர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர்) கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**காலிப்பணியிடங்களை நிரப்புதல்**

- இவ்வியக்ககத்திலுள்ள பெரும் எண்ணிக்கையிலான காலியிடங்களை நிரப்பிடும் வகையில் 340 நிலஅளவர்கள் மற்றும் 291 வரைவாளர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அப்பதவிகளை நிரப்பிட நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது பணியில் இருக்கும் 1,141 பணியாளர்களின் எண்ணிக்கையில் 55 விழுக்காடாக உள்ள இக்காலியிடங்கள் நிரப்பப்பட்டு பணியாளர்கள் 2 – 3 மாதங்களுக்குள் பணியில் இணைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதுடன் இது இவ்வியக்ககத்தின் நடவடிக்கைகளை பெரிதும் முன்னேற்றம் அடைய செய்யும்.

**போட்டோ சின்கோ அச்சகத்தை நவீனப்படுத்துதல்**

- போட்டோ சின்கோ அச்சகம் ரூ.1 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராம/ வட்ட / மாவட்ட வரைபடங்கள் மற்றும் இதர வரைபடங்களை பொதுமக்களுக்கு இடர்பாடின்றி வழங்கிட இயலும்.

❖ ❖ ❖

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை




## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்

- முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் 20,000 வீடுகள் ரூ.420 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குக்கிராமங்கள்மேம்பாட்டுத் திட்டத்தின் (தாய்–II) கீழ் 1,200 சிறுபாசன ஏரிகளை ரூ.300 கோடி ஒதுக்கீட்டில் புனரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

- தாய்–II திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், தெருக்களின் சந்துக்களை மேம்படுத்துதல், இடுகாடு / இடுகாடு செல்ல வழி அமைத்தல் போன்ற 7,282 அடிப்படை உட்கட்டமைப்புப் பணிகள் ரூ.150 கோடி செலவில் எடுக்கப்பட்டுள்ளன.

- தாய்–II திட்டத்தின் கீழ், 1,369 கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.300 கோடி செலவில் மேம்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- ஊரக இளைஞர்களின் உடல்திறன் மற்றும் மனவளத்தை மேம்படுத்த உட்புற மற்றும் வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய 500 “அம்மா உடற்பயிற்சி கூடங்கள்” உடற்பயிற்சி கூடம் ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகின்றன.

- நகர பகுதிகளுக்கு இணையாக ஊரக பகுதிகளில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய 500 “அம்மா பூங்காக்கள்” பூங்கா ஒன்றுக்கு ரூ.20 இலட்சம் வீதம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுகின்றன.

- ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டுதல், சமையலறை, குடிநீர் வசதி, கழிவறை வசதி போன்ற 6,015 உட்கட்டமைப்பு பணிகள் ரூ.99.82 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

- ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை மற்றும்

பொதுமக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், ரூ.39.42 கோடி செலவில் பள்ளிக் கட்டடங்கள், நூலகங்கள், பாலங்கள், குடிநீர் ஆதாரம் உருவாக்குதல், சாலை மேம்பாடு, சமுதாயக் கூடம் மற்றும் நியாயவிலை அங்காடிக் கட்டடம் கட்டுதல் போன்ற 766 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

- பிரதமமந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 1,76,338 வீடுகள் ரூ.2,116.056 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன.
- ஊரக பகுதிகளில் குழல் விளக்குகளுக்கு பதிலாக 8.22 இலட்சம் எல்.இ.டி. விளக்குகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படுகின்றன.
- தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 4,650 கி.மீ. நீளமுள்ள 2,563 சாலைப் பணிகள் ரூ.800 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டிற்காக எடுக்கப்பட்டுள்ளன.
- பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி X–2016–2017இன் கீழ், 1,366.797 கி.மீ. நீளமுள்ள 583 சாலைகள் மற்றும் 22 பாலங்கள் ரூ.758.44 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.
- நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ், ரூ.250.96 கோடி மதிப்பீட்டில் 522.814 கி.மீ. நீளமுள்ள 242 சாலைப் பணிகள் மற்றும் 58 பாலங்கள் எடுக்கப்பட்டுள்ளன.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், 39.99 கோடி மனித சக்தி நாட்கள் 31.03.2017 வரை உருவாக்கப்பட்டன. மேலும் நடப்பு ஆண்டில் 2.53 கோடி மனித சக்தி நாட்கள் 15.05.2017 வரை உருவாக்கப்பட்டது.
- நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.221.20 கோடி மதிப்பீட்டில் 3,529 உள்கட்டமைப்பு வளர்ச்சி பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 7,712 உள்கட்டமைப்பு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், 3,872 கிராம ஊராட்சிகள் திறந்தவெளி மலம்கழித்தல் அற்ற ஊராட்சிகளாக தாங்களாக அறிவித்துள்ளது.
- 2016–2017ஆம் ஆண்டு தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் கீழ், 11.17 இலட்சம் தனி நபர் இல்ல கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.
- 2016–2017ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை செயல்பாடு பகுதி–III, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் ஒருங்கிணைத்து மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில், 3,524 கிராம ஊராட்சிகளில் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல் படுத்தப்படுகின்றது. இத்துடன் மாநிலத்தில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடு செயல் படுத்தப்படுகின்றன.

## தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

**சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன அமைப்பு :**

- 3,039 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.1,862.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.
- விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு 313 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**திறன் வளர்ப்பு**

- 519 வங்கியாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலக நிர்வாகிகள் நிதி உள்ளாக்கம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தில் (MGNREGS – Project LIFE) 840 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்க நிர்வாக அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.
- 368 செயலிழந்த குழுக்களிலுள்ள 4,502 உறுப்பினர்களுக்கு 2 நாட்கள் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**நிதி உள்ளாக்கம்:**

- வங்கிகள் மூலம் 32,520 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு ரூ.1,096.79 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- 7,621 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானிய தொகையாக ரூ.111.80 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**தொழில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு :**

- திறன் மேம்பாடானது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார

இயக்கத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்றது. "தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா" (ஆஜிவிக்கா திறன் பயிற்சி திட்டம்) திட்டத்தின் மூலம் பணியமர்வுடன் கூடிய தொழில் பயிற்சி ஊரக பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

- இத்திட்டத்தில் 15 முதல் 35 வயது வரை உள்ள கிராமப்புற ஏழை இளைஞர்கள் கண்டறியப்பட்டு பயிற்றுவிக்கப்படுகின்றனர். இருப்பினும் பெண்கள் மற்றும் சிறப்பு பிரிவினருக்கு 45 வயது வரை தளர்வு செய்யப்பட்டுள்ளது.
- 16.02.2017 முதல் 15.05.2017 வரை இத்திட்டத்தின் மூலம் 631 பயிற்சி பெற்ற இளைஞர்கள் ஊதியம் ஈட்டும் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதன் பொருட்டு பயிற்சிகட்டணம், பயிற்சியாளர்களுக்கான உணவு மற்றும் போக்குவரத்து செலவினம், பணியமர்விற்கான ஆரம்ப செலவினம் முதலியவற்றிக்காக ரூ.4.50 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**வேலை வாய்ப்பு முகாம் 2016–2017:**

- 2016–2017ஆம் ஆண்டில் மாநிலத்தின் அனைத்து வட்டாரங்களில் 385 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.
- அதனடிப்படையில் 16.02.2017 முதல் 15.05.2017 வரை வேலை வாய்ப்பு முகாம்கள் 161 வட்டாரங்களில் நடத்தப்பட்டு அதில் 11,145 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.
- மேற்கண்ட வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்திட ரூ.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**தீன்தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத் (DAY-NULM) திட்டத்தின் கீழ் எய்தப்பட்ட சாதனைகள்:**

- நகர்ப்புறங்களில் 4,158 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- 898 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.0.9 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.
- 139 பகுதி மற்றும் நகர் அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.
- சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,464 தனி நபர்கள் ரூ.10.7 கோடி உதவி பெற்றுள்ளனர்.
- சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 187 சுய உதவிக் குழுக்கள் ரூ.6.05 கோடி உதவி பெற்றுள்ளனர்.





- நகர்ப்புறங்களில் செயல்படும் 3,383 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.136.13 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- EST&P (திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்)இன் கீழ் 1,805 இளைஞர்கள் பயிற்சிப் பெற்று வருகின்றனர்.

**வாழ்வாதாரம்:**

- ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 5,895 நபர்களுக்கு பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலம் 605 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- பண்ணை சாரா தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு 6,960 பயனாளிகளுக்கு தலா ரூ.10,000/– வீதம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சந்தைப்படுத்துதல்:**

- சென்னையில் நடைபெற்ற மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சி பிற மாநிலங்கள் பங்கு கொண்டு ரூ.42.48 இலட்சம் விற்பனை நடைபெற்றுள்ளது.
- மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதுடெல்லியில் நடைபெற்ற ஆஜிவிகா மேளாவில் கலந்து கொண்டு ரூ.3.58 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் மதி விற்பனை அங்காடியில் ரூ.59.17 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் அம்மா சிமெண்ட் 1,24,563 மூட்டைகள் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்

**இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சி**

- 7,412 இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளில் தொழில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களில் 5,117 நபர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

**ஒத்த தொழில் கூட்டமைப்புகள்**

- கூடுதலாக 5 கால்நடை தீவன அரவை ஆலைகள் இராமநாதபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ரூ.1.04 கோடி செலவில் நிறுவப்பட்டு கால்நடை தீவனம் உற்பத்தி செய்து கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் லாபம் ஈட்டி வருகின்றனர்.
- வேளாண் விற்பனை மையங்கள் காஞ்சிபுரம், தேனி, திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், சேலம், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ரூ.46.12 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டு உறுப்பினர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களை விற்பனை மையத்தில் விற்பனை செய்து லாபம் ஈட்டி வருகின்றனர்.
- 19.24 இலட்சம் அகத்தி மரக்கன்றுகள் விலையில்லா வெள்ளாடுகள் பயனாளிகளுக்கும் பொது இடங்களில் நடுவதற்கும் கால் நடை பராமரிப்புத்துறை மூலமாக ரூ.1.54 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

**வங்கி கடன் இணைப்பு**

- 10,254 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.384.38 கோடி வங்கிகளின் மூலம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்**

- 128 மன நலக்குறைபாடு உடையவர்கள் மன நல மருந்துகள் பெற்றுள்ளனர். 23 நபர்களுக்கு உள்நோயாளி சிகிச்சை சேவை வழங்கப்பட்டு பயனடைந்துள்ளனர் .
- 525 மன நல இயலாமையில் உள்ளவர்களுக்கு ரூ.76,12,500 அளவில் தனிநபர் கடன்கள் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- 572 மாற்றுத் திறனாளிகள் மற்றும் 468 நலிவுற்றோருக்கு ரூ.1.64 கோடி அளவில் தனிநபர் கடன் வழங்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMD) மூலம் 520 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி மற்றும் உபகரணங்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**சமூக வல்லுநர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி**

- 758 தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக வல்லுநர்களுக்கு மூன்று நாள் கணக்கு மற்றும் பதிவியல் பயிற்சி அளிக்கப்பட்டு கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகிய சமூக அமைப்புகளுக்கு மேம்பட்ட பதிவியல் செய்திட பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
- வாழ்வாதார வேளாண்மை, கால்நடை பாரமாரிப்பு மற்றும் தொழில் திட்டம் தயாரித்தல் பற்றிய பயிற்சி தேர்ந்தெடுக்கப்பட்ட 667 சமூக வல்லுநர்களுக்கு அளிக்கப்பட்டு இலக்கு மக்களுக்கு உதவிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**கிராம கற்றல் மையம்**

- கிராம பஞ்சாயத்துகளில் செயல்பட்டு வரும் 4,174 கிராம கற்றல் மையத்தில் 70,989 மின் ஆளுமை பரிவர்த்தனைகள் மற்றும் 2,224 ஆதார் அட்டை மூலம் பண பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.



- கிராம கற்றல் மையங்களை மின் கட்டணம் செலுத்தும் மையமாக தமிழக அரசு அங்கீகரித்துள்ளது. இ–சேவை இணையம் மூலமாக இதுவரை 2,156 மின் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன.

### பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

- 8,349 நபர்கள் பல்வேறு காப்பீடு திட்டங்களில் இணைந்துள்ளனர்.
- 3,059 பயனாளிகளுக்கு துயர் குறைப்பு நிதியாக ரூ.191.66 இலட்சம் மென் கடன் வழங்கப்பட்டுள்ளது.
- 322 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1,022 இலட்சம் வங்கி கடன் இணைப்பு 11,474 பயனாளிகளுக்கு பெற்றுத் தரப்பட்டுள்ளது.
- நுண்தொழில்களை மேம்படுத்தும் பொருட்டு 467 கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கருத்துரு அனுமதிக்கப்பட்டு ரூ.1,108.67 இலட்சம் கடனுதவி 2,335 பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.
- 2 மீன் விற்பனை சங்க அலுவலகக் கட்டிடங்கள் ரூ.14 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- ரூ.8.92 இலட்சம் செலவில் 1 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- ரூ.56 இலட்சம் செலவில் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீனவ சங்க கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- 12 வலை பின்னும் கூடம் ரூ.101.79 இலட்சம் செலவிலும் மற்றும் 3 மீன் உலர் தளம் ரூ.16.75 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- விழுப்புரம், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பவளப்பாறை உருவாக்கும் பணி ரூ.71 இலட்சத்தில் முடிக்கப்பட்டுள்ளது.
- 1,130 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிர்களை இணைத்து 226 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு பிணையில்லா கடனாக ரூ.90.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 156 தலைச்சுமை மீன் வியாபாரம் செய்யும் மகளிருக்கு ரூ.8.04 இலட்சம் மதிப்பீட்டில் மீன் விற்பனை உபகரணங்கள் வழங்கப்பட்டட்டுள்ளது.

மேற்கண்ட 100 நாட்கள் சாதனைகளின் ரூ.2,689.23 இலட்சம் மொத்த செலவீட்டில் 26,503 பயனாளிகள் பயனடையும் வகையில் 12 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

❖ ❖ ❖

# பள்ளிக் கல்வித் துறை




- பள்ளிக் கல்வித் துறைக்கென 2017–2018ஆம் ஆண்டிற்கு ரூ.26,932 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- 150 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நடவடிக்கை.
- ரூ. 352 கோடி செலவில் பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மாணவ, மாணவியருக்கு நான்கு சீருடைத் தொகுப்புகள், புத்தகப்பைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் வடிவியல் பெட்டிகள் உள்ளிட்ட கல்வி கருவிகளையும், மிதிவண்டிகள் மற்றும் பேருந்துக் கட்டணச் சலுகைகள் போன்ற நலத்திட்டங்களுக்காக ரூ.1,503 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மடிக்கணினிகள் வழங்குவதற்காக ரூ.758 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ‘குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்’ கீழ் சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவுகளைச் சார்ந்த குழந்தைகள் தனியார் பள்ளிகளில் கல்வி பயில ரூ.201 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்காக ரூ.314 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 12 (1) (சி) இன் கீழ் 25 சதவிகித இட ஒதுக்கீட்டில்




2013–2014 மற்றும் 2014–2015ஆம் கல்வி ஆண்டுகளில் சேர்க்கை செய்யப்பட்டு தொடர்ந்து கல்வி பயின்று வரும் குழந்தைகள் மற்றும் 2015–2016ஆம் கல்வியாண்டில் சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத் தொகை ரூ.124.94 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டத்தின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் வண்ணமும், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதிக அளவில் பயன் பெறும் வண்ணமும், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் பொருட்டும் இவ்வகைச் சேர்க்கைக்கு இணைய வழியாக விண்ணப்பிக்க ஆணை வெளியிடப்பட்டது.

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் ரூ.5.81 கோடி மதிப்பீட்டிலான 20 புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடங்களும், 25 கூடுதல் வகுப்பறை கட்டடங்களும், 1 தரம் உயர்த்தப்பட்ட நடுநிலைப் பள்ளிக் கட்டடமும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டத்தின் கீழ் ரூ.319.08 கோடி மதிப்பீட்டிலான 164 புதிய உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களும், 8 மாதிரிப் பள்ளி கட்டடங்களும், ஒரு மாணவியர் விடுதி கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

- ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கு வெளிப்படையான கலந்தாய்வு நடத்தப்பட்டு மொத்தம் 4,122 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளன.

- ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்திட 14 முதுநிலை விரிவுரையாளர்கள், 84 விரிவுரையாளர்கள் மற்றும் 19 இளநிலை விரிவுரையாளர்கள் என மொத்தம் 117 விரிவுரையாளர்கள் நியமனம்.

- மார்ச் 2017 மேல்நிலைப் பொதுத்தேர்வின் முடிவுகள் முதன்முறையாக பள்ளி மாணவர்களுக்கு அவர்களின் கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டன.

- 2017ஆம் ஆண்டில் பொதுத்தேர்வு எழுதிய 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு பொதுத்தேர்வு முடிந்த பிறகு 06.04.2017 மற்றும் 07.04.2017 ஆகிய இரண்டு நாட்களில் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.



- அரசு பள்ளிகளில் தொட்டுணர் (Bio-Metric) வருகைப் பதிவு முறையை செயல்படுத்த ஏதுவாக, ரூ.5 இலட்சம் செலவில் முன்னோடியாக பெரம்பலூர் மாவட்டத்தில் அறிமுகப்படுத்த அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.
- குடிமைப்பணிப்பிரிவு மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு வாசகர்கள் பயன்பெறும் வகையில் கன்னிமாரா பொது நூலகம் அரசு விடுமுறை நாட்கள் தவிர, ஏனைய அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செயல்படுவதற்கு ஆணை வெளியிடப்பட்டது.
- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வாசகர்களின் வாசிப்புத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.1.29 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்துடன் கூடிய புதிய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை வாங்க ஆணை வெளியிடப்பட்டது.
- பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் அனைத்து நூலகங்களுக்கும் ஆங்கில பருவ இதழ்கள் வாங்கிட ஆணை வெளியிடப்பட்டது.
- ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / உதவி பெறும் தொடக்க (மற்றும்) நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்கள் அஞ்சல் வழிக்கல்வி மூலம் பி.எட்., பயிலும் போது, அவர்களின் கற்றல் கற்பித்தல் பயிற்சியினை விடுப்பில் செல்லாமல் மேற்கொள்ளவும், பணிக்காலமாக கருதவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- மாணவர்களுக்கு ஏற்படும் அதீத மன அழுத்தங்களை குறைக்கும் வகையிலும், ஆரோக்கியமற்ற போட்டி சூழல்களைத் தவிர்க்கும் வகையிலும் 10 மற்றும் 12 வகுப்பு பொதுத்தேர்வில் மாநில மற்றும் மாவட்ட முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை




- முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.43.98 கோடி செலவில் 17,561 பெண் குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர்.
- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ் 34 குழந்தைகள் (ஆண்–16, பெண்–18) மீட்கப்பட்டுள்ளனர்.
- குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம், 2006இன் கீழ் 370 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.
- அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ் 4 கிராம் (22 காரட்) தங்க நாணயத்துடன் பட்டம்/ பட்டயம் பெற்ற மற்றும் பட்டம்/பட்டயம் அல்லாத 42,361 ஏழைப் பெண்களுக்கு முறையே ரூ.50,000/– மற்றும் ரூ. 25,000/– வீதம் ரூ.165.72 கோடி திருமண நிதியுதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்களின் கீழ், நிதியுதவியுடன் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் 4 கிராம் தங்க நாணயமானது 23.05.2016 அன்று முதல் 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து இதுநாள் வரையில், 12,500 பயனாளிகளுக்கு 8 கிராம் (22 காரட்) தங்க நாணயமும், நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது.
- அரசு சேவை இல்லங்களில் சேர்க்கை, சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் மற்றும் இடைநிலை ஆசிரியை பயிற்சிக்கான மாணவியர் சேர்க்கை ஆகிய திட்டங்களில் பயன்பெற நிர்ணயம் செய்யப்பட்டிருந்த ஆண்டு வருமான உச்சவரம்பானது ரூ.24,000/–லிருந்து ரூ.72,000/–மாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையின்படி, 2017–2018ஆம் நிதியாண்டில் மாணவியர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளது.
- ரூ.3.03 கோடி செலவில் திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் அரசு பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் கட்டப்பட்டு விழுப்புரம் விடுதி 04.03.2017 அன்றும், திருநெல்வேலி விடுதி 08.03.2017 அன்றும், பெரம்பலூர் விடுதி 03.05.2017 அன்றும் திறக்கப்பட்டு, தற்போது மேற்குறிப்பிட்ட அரசு பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.
- 6 அரசு சேவை இல்லங்களில் தங்கி +2 படித்து முடித்த 100 மாணவிகளுக்கு ரூ.32 இலட்சம் உயர்கல்வி பயில நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற மூன்றாம் பாலினருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.1.20 கோடி செலவில் 1,000 மூன்றாம் பாலினருக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் சத்துணவு மையங்களுக்கு சத்துணவினை சுகாதார முறையில் வழங்க 12 லிட்டர் 19,230 அலுமினியம் குக்கர்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.
- சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் புதிதாக 26,568 பயனாளிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/– வழங்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

# தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை



## தமிழ் வளர்ச்சித் துறை

- கணினியில் ஆங்கில மொழிக்கெனப் ‘பிழை திருத்தி’ இருப்பதைப் போல் தமிழிலும் பிழை திருத்துவதற்கேற்ப “அம்மா மென் தமிழ்ச் சொல்லாளர்” எனும் மென்பொருள் அனைத்து அரசு அலுவலகங்களுக்கு வழங்கும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 16.05.2017 அன்று வெளியிடப்பட்டது.

- பிப்ரவரித் திங்கள் 21ஆம் நாள் உலகத் தாய்மொழிநாள் ரூ.5 இலட்சம் செலவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

- கவிதை / கட்டுரை / பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை மேலும் பட்டைதீட்டும் வகையில் அவர்களுக்கு ரூ.20 இலட்சம் செலவில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை வாயிலாக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 25.04.2017 அன்று 2015ஆம் ஆண்டுக்கான தமிழ்ச்செம்மல் விருது, முதலமைச்சர் கணினித் தமிழ் விருது மற்றும் 2016ஆம் ஆண்டுக்கான சித்திரை விருதுகள், அம்மா இலக்கிய விருது, மொழிபெயர்ப்பாளர் விருது ஆகிய விருதுகள் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.

- பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 125ஆவது பிறந்தநாளைப் போற்றும் வண்ணம் 28.03.2017 மற்றும் 29.03.2017 ஆகிய நாள்களில் 125 கவிஞர்களைக் கொண்டு ரூ.5 இலட்சம் செலவில் தமிழ்க் கவிஞர் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

- திருக்குறள் – கொரிய மொழி பெயர்ப்பு நூலாக்கம் செய்யப்பட்டது

- 8 ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு மூன்றும், ஆய்வுச் சுருக்கம் முன்வாய்மொழித் தேர்வு மூன்றும் நடத்தப்பட்டன.

- “The History of Tamil Nadu, Dr. B. Eraiyarasan” ஆங்கில நூல் வெளியிடப்பட்டது.

- 2 அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், 2 சிறப்புச் சொற்பொழிவுகள், 1 பயிலரங்கம், 1 தேசிய பயிலரங்கம், 1 கருத்தரங்கம், 1 பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தப்பட்டன.

- “திருமந்திரமும் – சித்தமருத்துவமும்” தலைப்பில் 11.03.2017 மற்றும் 12.03.2017 ஆகிய இரு நாட்கள் தேசியப் பயிலரங்கம் நடத்தப்பட்டது.

- உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மையம் மற்றும்

> “காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையுடன் இணைந்து வைணவ உரையறிஞர் பேராசிரியர் பு.ரா.புருஷோத்தம நாயுடு நூற்றாண்டு விழாச் சிறப்புக் கருத்தரங்கம் ‘தமிழ் வைணவ உரை மரபுகள்’ நடத்தப்பெற்றது.”

மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் இணைந்து இரண்டுநாட்கள் ''மலேசியத்தமிழாசிரியர்களுக்கான இலக்கியப் பயிற்சிப் பட்டறை'' நிறுவனத்தில் 22.04.2017 – 23.04.2017இல் நடத்தப்பட்டது.

- 24.02.2017 –25.02.2017 தமிழ்த்தாய் 69 – தமிழாய்வுப் பெருவிழாவில் திருக்குறள் ஓவியப்போட்டி, 69 மாணவர்களின் திருக்குறள் முற்றோதல், 69 அரிய நூல்கள் வெளியீடு, 69 கவிஞர்களின் கவியரங்கம் நடத்தப்பட்டன.
- மணிமொழியனார் அறக்கட்டளை, புதுமைப்பித்தன் அறக்கட்டளை, பேரறிஞர் ஔவை துரைசாமி அறக்கட்டளை பெயரில் புதியதாக அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டன.
- 16.04.2017 உலக மரபு நாள் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- ஸ்ரீஇராமாநுசர் 1,000ஆவது பிறந்தநாளை முன்னிட்டு – 17.04.2017இல் புரட்சித்துறவி இராமாநுசர் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- 28.04.2017இல் தனித்தமிழின் நோக்கும் போக்கும் – பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.
- நிறுவன ஆய்வு நூலகத்திற்கு ரூ.1.50 இலட்சம் செலவில் புதிய நூல்கள் வாங்கப்பெற்றன.

**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**

- உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் பணிகள் ரூ.12.25 கோடி நிதி ஒதுக்கீட்டில் நடைபெற்று வருகின்றன.
- 24.02.2017 – 25.02.2017 – குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையுடன் இணைந்து ‘திராவிட மொழிகளில் அறஇலக்கியம்: ஓர் ஒப்பீட்டாய்வு’ என்னும் தேசியக் கருத்தரங்கம் .
- 27.03.2017 – மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியுடன் இணைந்து ‘கீழடி ஆய்வும் முன்னெடுப்புத் தேவைகளும்’ – கருத்தரங்கம்.
- 28.03.2017 – காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையுடன் இணைந்து வைணவ உரையறிஞர் பேராசிரியர் பு.ரா.புருஷோத்தம நாயுடு நூற்றாண்டு விழாச் சிறப்புக் கருத்தரங்கம் ‘தமிழ் வைணவ உரை மரபுகள்’ நடத்தப்பெற்றது.
- 11.04.2017, 12.04.2017 ஆகிய நாள்களில் பன்முக நோக்கில் குறுந்தொகை என்ற கருத்தரங்கம் .
- 31.03.2017 – அயல்நாட்டுத் தமிழ்ப் பாடநூல்கள் – ஒரு மதிப்பீடு என்ற பன்னாட்டுக் கருத்தரங்கம்.
- 27.02.2017 – மதுரை, தமிழ்க் காப்புக் கழகத்துடன் இணைந்து, ‘உலகத் தாய்மொழி நாள்’ விழா நடத்தப்பெற்றது
- 09.03.2017 – இலக்கண வகுப்பு – 2 – ‘ஒற்று மிகுதல் ஒற்று மிகாமை’ குறித்து பேராசிரியர் சேதுபாண்டியன், ‘கவிதைமை’ குறித்து கவிஞர் முத்துசந்தானம்
- 15.03.2017 – சிறப்புச் சொற்பொழிவு – 10 மற்றும் தமிழ் நிலாக் கவியரங்கம் – 2 – பிரான்சு தமிழ்த்திரு ஜெயராமன் மற்றும் பிரான்சு மொழியியல் பேராசிரியர் பெஞ்சமின் லெபோ ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்
- 11.04.2017, 12.04.2017 – பன்முக நோக்கில் குறுந்தொகை – கருத்தரங்கம்
- 18.04.2017 – ‘அயலகத் தமிழ்ப் படைப்புகளில் தமிழ்ச் சமூகம்’ – ஆய்வரங்கம்
- 20.04.2017 – தமிழ் நிலாக் கவியரங்கம் – 3 ‘தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’
- 16.05.2017 – காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையுடன் இணைந்து ‘அற இலக்கியங்களுக்குத் திருக்குறளின் கொடை’ – கருத்தரங்கம்
- 18.05.2017 – தமிழ் நிலாக் கவியரங்கம் – 4 ‘தேமதுரத் தமிழோசை’

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் தமிழக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட கட்டட நல்கையிலிருந்து





ரூ.15 கோடியில் த மற்றும் நா வடிவ கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 07.03.2017ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

## செய்தி மக்கள் தொடர்புத்துறை

**பத்திரிகையாளர் நலன்**

- பத்திரிகை துறையில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய 14 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.21,20,000/– குடும்ப நல நிதி உதவி திட்டத்தின்கீழ் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.
- மறைந்த 3 பத்திரிகையாளர் குடும்பத்திற்கு, குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.4,750/– வீதம் 2016–2017ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**நினைவகம் பிரிவு**

- திருவாரூரில் ரூ.1.10 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மனுநீதிச் சோழன் நினைவு மண்டபத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 07.03.2017 அன்று திறந்து வைத்தார்கள்.

**திரைப்பட தொழில்நுட்பப் பிரிவு**

- 14ஆவது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.50 இலட்சத்திற்கான காசோலை இந்திய திரைப்பட திறனாய்வு கழக இயக்குநர் அவர்களிடம் வழங்கப்பட்டது.

## எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை

- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், எழுதுபொருள் கிடங்கு, மதுரை, விருத்தாசலம், சேலம் அரசு கிளை அச்சகங்களில் மின் வசதிகளை புதுப்பித்து மேம்படுத்த ரூ.45,47,225/–க்கு நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டு மின் இணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.
- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படை மூலமாக 8 பணியாளர்கள் இக்காலகட்டத்தில் (16.02.2017 முதல் 15.05.2017 வரை) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

❖ ❖ ❖

**“பத்திரிகை துறையில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்திய 14 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.21,20,000/– குடும்ப நல நிதி உதவி திட்டத்தின்கீழ் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.”**

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை



- மைய அரசு திட்டங்களின் இரண்டாம் மற்றும் இறுதி தவணை நிலுவைகள் மாநில அரசு நிதியிலிருந்து ரூ.9.29 கோடி 2017–2018 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

- திருவண்ணாமலை மாவட்டம் தவளகிரீஸ்வரர் கோயில், வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் மார்கபந்தீஸ்வரர் கோயில் மற்றும் திருப்பாற்கடல் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில், விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் அருள்மிகு வீரட்டேஸ்வரர் கோவில் பகுதி மற்றும் சன்னதி தெரு, திருநெல்வேலி மாவட்டம் உவரி சுயம்புலிங்கசுவாமி கோயில், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் சொக்கன்குடியிருப்பு அதிசயமணல்மாதா தேவாலயம், ராமநாதபுரம் மாவட்டம் உத்திரகோசமங்கை மங்கலநாதர் கோயில் மற்றும் நயினார்கோயில் நாகநாதசுவாமி கோயில் மற்றும் விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் நின்றநாராயண பெருமாள் கோயில் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

- ஒரு சுற்றுலா அலுவலருக்கு உதவி இயக்குநராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

- எம்.வி. ஐலண்ட் ஸ்கை, எம்.வி. யுரோபா 2 மற்றும் எம்.வி. மெகல்லன் ஆகிய அயல்நாட்டு சொகுசு கப்பல்களில் சென்னை துறைமுகத்திற்கு 2017 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் வருகை தந்த 980 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழக கலாச்சார முறையிலான சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

- ஜெய்ப்பூரில் நடைபெற்ற கிரேட் இந்தியா டிராவல் பஜாரில் சுற்றுலாத்துறை கலந்து கொண்டது.

- 20 ஆண்டுகளுக்கும் மேலாக விபத்தின்றி சிறந்த முறையில் பணிபுரிந்த தமிழ்நாடு சுற்றுலா

வளர்ச்சிக்கழகத்தின் 10 ஓட்டுநர்களுக்கு தலா 4 கிராம் தங்க நாணயமும், சான்றிதழும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கினார்.

- கொடைக்கானலில் மாவட்ட நிர்வாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் கோடை விழாவிற்கு ரூ.10 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- கன்னியாகுமரியில் மாவட்ட நிர்வாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் கோடை விழாவிற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- புதுதில்லி நொய்டாவில் நடைபெற்ற குளோபல் பொருட்காட்சியில் தமிழக சுற்றுலாத்துறை கலந்து கொள்ள ரூ.1.80 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- கொல்கத்தாவில் நடைபெற்ற 20–வது சுற்றுலா பொருட்காட்சியில் தமிழக சுற்றுலாத்துறை கலந்து கொள்ள ரூ.1.76 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- கோயம்புத்தூர் அரசு பொருட்காட்சியில் சுற்றுலா அரங்கம் அமைக்க ரூ.70,000 ஒப்பளிக்கப்பட்டது.
- தேனி மாவட்டம் உத்தமபாளையம் மேலக்கூடலூர் கிராமத்தில் நடைபெற்ற கண்ணகி கோயில் திருவிழாவிற்கு ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- மதுரையில் மாவட்ட நிர்வாகமும் சுற்றுலாத்துறையும் இணைந்து நடத்தும் சித்திரை கலை விழா நடத்த ரூ.5 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.
- மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ராஜ் பவனில் ஒரு சில பகுதிகளை பொது மக்கள் பார்வையிட அனுமதி அளித்ததைத் தொடர்ந்து, அதற்கு வசதியாக இரண்டு மின்கலச் சீருந்துகள் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் வாங்கப்பட்டு பொதுமக்கள் பார்வையிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

**இந்து சமய அறநிலையத்துறை**

- 30 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 04.03.2017 அன்று 10 திருக்கோயில்களிலும், 07.03.2017 அன்று
- 10 திருக்கோயில்களிலும், 08.03.2017 அன்று 7 திருக்கோயில்களிலும், 18.03.2017 அன்று
- 3 திருக்கோயில்களிலும் இத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.
- 16.02.2017 முதல் 145 திருக்கோயில்களுக்கு ரூ.7.31 கோடி செலவில் திருப்பணி செய்து குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றுள்ளது.
- நிதி வசதியற்ற 241 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் 04.03.2017–ல் 80 திருக்கோயில்களிலும், 07.03.2017–ல் 130 திருக்கோயில்களிலும், 08.03.2017–ல் 28 திருக்கோயில்களிலும், 18.03.2017–ல் 3 திருக்கோயில்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.
- 16.02.2017 முதல் 35 திருக்கோயில்களுக்கு சொந்தமான 898.68 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது.
- 2016–2017 ஆம் ஆண்டிற்கு யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 30 நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. இதில் 31 தமிழக திருக்கோயில் யானைகளும், புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த 2 திருக்கோயில் யானைகளும் பங்கேற்றன.
- 16.02.2017–லிருந்து இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த 122.79 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்களும், 5 கிரவுண்டு 0567 சதுர அடி பரப்பளவுள்ள மனைகளும், 2 கிரவுண்டு 2,929 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடங்களும் சுவாதீனம் பெறப்பட்டது. இவைகளின் மதிப்பு சுமார் ரூ.42.02 கோடி ஆகும்.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 41 திருக்கோயில்களில் ரூ.28.75 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 04.03.2017 அன்று 3 திருக்கோயில்களில்
- ரூ. 0.87 கோடி மதிப்பீட்டிலும், 07.03.2017 அன்று 19 திருக்கோயில்களில் ரூ.11.61 கோடி மதிப்பீட்டிலும், 08.03.2017 அன்று 14 திருக்கோயில்களில் ரூ.14.27 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 18.03.2017 அன்று 5 திருக்கோயில்களில் ரூ.2 கோடி மதிப்பீட்டிலும் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.
- பெரிய திருக்கோயில் நிதியிலிருந்து 10 ஆயிரம் சிறு சிறு திருக்கோயில்களுக்கு சிறப்பான முறையில் பூஜைகள் செய்திட பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கும்



விளக்கு ஆகிய பூஜை உபகரணங்கள் ரூ.2.50 கோடி மதிப்பில் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.05.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

- ஸ்ரீராமானுஜர் 1000–வது அவதாரத் திருவிழா 21.04.2017 முதல் 01.05.2017 முடிய ஸ்ரீபெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் மற்றும் பாஷ்யகார சுவாமி திருக்கோயில் மற்றும் தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள இதர வைணவ திருத்தலங்களிலும் இவ்விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**கலை பண்பாட்டுத் துறை**

- கிராமிய கலைகளை போற்றி பாதுகாக்கும் வண்ணம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக நடத்தப்படும் மண்ணின் கலை விழாக்களில் நாட்டுப்புறக்கலைஞர்கள் மூலம் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.64 இலட்சம்நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக்கல்லூரி வாயிலாக மாநில அளவிலான சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலைக்காட்சி நடத்திட மற்றும் சிற்பக்கலைஞர்களுக்கு விருது வழங்கிட ரூ.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னையில் பொது மக்கள் கூடும் இடங்களில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்திட ரூ.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விலையில்லா இசைக்கருவிகள் மற்றும் ஆபரணங்கள் வழங்கிட ரூ.32 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கிருஷ்ணகிரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 25 கலைஞர்களுக்கு மாவட்ட கலை மன்றங்களால் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

- ஒடிசா மாநிலம் பூரியில் 16.05.2017 முதல் 19.05.2017 வரை நடைபெற்ற 15 வது கிராமிய கலை விழாவில், தமிழ்நாடு அரசு சார்பாக 50 நாட்டுபுறக்கலைஞர்களின் கிராமியக் கலை

நிகழ்ச்சிகள்' ரூ.5.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

- தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 1.05.2017 முதல் 10.05.2017 வரை கோடைக்கால கலைப்பயிற்சி முகாம் நடத்தப்பட்டன

- நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் 16.05.2017 முதல் 25.05.2017 வரை மாநில அளவிலான கோடைக்காலக் கலை பயிற்சி முகாம் நடத்தப்பட்டன.

- காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீ பெரும்பதூரில் 28.04.2017 முதல் 01.05.2017 வரை நடைபெற்ற ஸ்ரீராமானுஜர் 1000–வது அவதார திருவிழாவில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் கலை நிகழ்ச்சிகள் ரூ.5 இலட்சம் செலவில் நடத்தப்பட்டன.

- கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கி கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, புதிதாக மண்டல கலை பண்பாட்டு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னையில் 03.05.2017 முதல் 07.05.2017 வரை மரபு வழி மற்றும் நவீனபாணிப் பிரிவில் ஐந்து நாட்கள் மாநில அளவிலான நுண்கலைக் கண்காட்சி ரூ.10 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

- 03.05.2017 அன்று ஓவிய நுண்கலைக்குழு மூலமாக 7 கலைஞர்களுக்கு "கலைச்செம்மல் விருது" ரூ 3.50 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் 17 மாவட்ட அரசு இசைப் பள்ளிகளுக்கு புதிதாக இசைக் கருவிகள் வாங்குவதற்கும் பழுதடைந்த இசைக் கருவிகளை பழுதுநீக்கம் செய்வதற்கும் ரூ.18.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகிய 7 கல்லூரிகளில் பணிபுரியும் 43 ஒப்பந்த ஆசிரியர்களின் தொகுப்பூதியத்தினை ரூ.6,000/– லிருந்து ரூ.15,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- சென்னை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மண்டல கலைப் பண்பாட்டு மையங்களில் செயல்படும் சவகர் சிறுவர் மன்றங்களில் பயிற்சி பெறும் சிறார்களுக்கு கலைப் பயிற்சி பொருட்கள் வாங்கிட ரூ.10 நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம் சமுத்திரம் கிராமத்தில் அரசு இசைப் பள்ளிக்கு புதிதாக கட்டடம் கட்டுவதற்கு ரூ.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் தமிழ்நாடு மாலை நேர அரசு இசைக் கல்லூரிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களின் தொகுப்பூதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

- கிராமியக் கலைஞர்கள் மற்றும் செவ்வியல் கலைஞர்களுக்கு மாவட்ட கலை மன்றங்கள் சார்பில் வழங்கப்படும் விருது தொகையினை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

- சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் பழுதடைந்த வகுப்புகளை புதுப்பிக்க ரூ.1.40 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- கலை பண்பாட்டு இயக்கக கட்டடத்தில் உள்ள கூட்ட அரங்கிற்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் ஒலி, ஒளி வசதிகள் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகள், சென்னை மற்றும் கும்பகோணம் கவின் கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஆகியவற்றில் 2016–2017ஆம் கல்வியாண்டில், இளங்கலை பட்டப் படிப்பில் முதலாமாண்டு பயிலும் 129 மாணாக்கர்களுக்கு ரூ.18.78 இலட்சம் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**அருங்காட்சியகங்கள் துறை**

- சேமிப்பில் உள்ள வைணவ படிமங்களை படிமக் கூடக் கட்டட முதல் தளத்தில் காட்சிப்படுத்திட அரசு அருங்காட்சியக படிமக் கூடம் விரிவுபடுத்தப்பட்டது. சட்டசபையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2016–17ன் அறிவிப்பின் ஒரு பகுதியான

- ரூ.30 இலட்சத்தைப் பயன்படுத்தி 200 படிமங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- சட்டசபையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2016–17ன் அறிவிப்பின் ஒரு பகுதியான ரூ.20 இலட்சத்தைப் பயன்படுத்தி மீதமுள்ள படிமங்களை காட்சிப்படுத்தி தற்போதைய அமராவதி கூடம் அடுத்துள்ள அறைகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- சென்னை, அரசு அருங்காட்சியகத்தின் விலங்கியல் கூடங்கள் அதன் சேகரிப்புகளாக மிகவும் பெயர் பெற்றவை. அண்மையில், முதன்மைக் கூட விரிவாக்கக் கட்டடத் தொகுப்பு முழுமையாக மறு சீரமைக்கப்பட்டு சேமிப்பில் உள்ள ஈரப்பதப்படுத்தப்பட்ட உயிரினங்கள், தத்தித் தாவும் பறவைகள் அவற்றின் கூடுகள் மற்றும் முட்டைகள் உள்ளிட்டவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

- பழைய கல் இல்லத்தில் ஊட்டி அரசு அருங்காட்சியகம் மாற்றப்பட்டு மறுசீரமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.03.2017 அன்று கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில் திறந்து வைக்கப்பட்டது.

- சேமிப்பில் உள்ள அரும்பொருட்களை காட்சிப்படுத்திட காட்சியமைப்புடன் கூடிய இருப்பறை கட்டடம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரூ.63 இலட்சத்திற்கு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மார்ச் 2017இல், ரூ.37 இலட்சத்திற்கு காட்சிப்பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

- கல்விப் பணிகளின் ஒரு பகுதியாக சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 20 மாவட்ட அருங்காட்சியகங்களில் சிறப்பு கண்காட்சி, வார காட்சிப் பொருள், மாதாந்திர சொற்பொழிவு, பள்ளி மாணவர்களுக்கான கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் காப்பாட்சியர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை/ சொற்பொழிவுகளையும் ஆற்றி வருகின்றனர். அவற்றுள் குறிப்பிடும்படியான கல்விப் பணிகளில் சில:

- 22.03.2017 அன்று சென்னை, அரசு அருங்காட்சியக நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் ‘நடுகல்’ – வீர கற்கள் என்ற தலைப்பில் முனைவர் தேவசகாயம் அருங்காட்சியகவியல் அறக்கட்டளை சொற்பொழிவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு ஆற்றப்பட்டு அது தொடர்பான குறிப்பு நூல் அன்றே வெளிக் கொணரப்பட்டது.

- 31.03.2017 அன்று சென்னை, அரசு அருங்காட்சியக நூற்றாண்டு கண்காட்சிக் கூடத்தில் ‘பழைய இடைக்கால ஆந்திர தேசம்: தமிழர்களின் வாழ்விடம்’ என்ற தலைப்பில் திரு. ஹரிநாராயணா அறக்கட்டளை சொற்பொழிவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு தொடர்பான குறிப்பு நூல் அன்றே வெளிக் கொணரப்பட்டது.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பல பிரிவுகளில் 5 கல்லூரிகளின் 143 மாணவர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி வழங்கப்பட்டன.

**தொல்லியல் துறை**

- சென்னை தொல்லியல் துறை கூட்ட அரங்கில் “தொல்லியலின் கள ஆய்வின் முக்கியத்துவம்” “மரபுக்கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைகளின் சிறப்பம்சங்கள்–ஒரு பார்வை” “நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபும் பண்பாடும்”ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

- சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 63 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.

- தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டச் சின்னமாக அறிவிக்க ஏதுவாக இதுவரை 42 வரலாற்றுச் சின்னங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- ‘கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்’ எனும் தலைப்பில் பயிலரங்கம் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி, தேனிசு கோட்டையில் 23.05.2017 முதல் துவங்கப்பட்ட 06.06.2017 வரை கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்களின் பயனுக்காக நடத்தப்படவுள்ளது.

- உலக மரபு நாள் விழா 18 ஏப்ரல் 2017 அன்று இத்துறையால் நடத்தப்பட்டது. உலக மரபு நாள் விழாவினை முன்னிட்டு மதுரை திருமலை நாய்க்கர் அரண்மனை, இராமநாதபுரம் இராமலிங்க விலாசம், தஞ்சாவூர் மாவட்டம் சரபேந்திரராசப்பட்டினம் மனோரா நினைவுச் சின்னம், நாகை மாவட்டம் தரங்கம்பாடி கோட்டை ஆகிய வரலாற்றுச் சின்னங்களில் பார்வையாளர்கள் இந்நாளில் இலவசமாக அனுமதிக்கப்பட்டனர். ஏறத்தாழ 15,000 பார்வையாளர்கள் பயன்பெற்றனர்.

❖ ❖ ❖

# போக்குவரத்துத்துறை




- தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற மற்றும் பணியிலிருக்கும் தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை வழங்கிட வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழக அரசு ரூ.750 கோடி வழங்கி 12.05.2017 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு 16.05.2017 அன்று மீண்டும் ரூ.500 கோடி உடனடியாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மொத்தமாக ரூ.1,250 கோடி வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- தமிழக மக்களின் வசதி மற்றும் சுகமான பேருந்து பயணத்தைக் கருத்தில் கொண்டு, போக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்திடும் பொருட்டு 16.02.2017 அன்று முதல் 15.05.2017 வரை புதியதாக 169 பேருந்துகள் இயக்கப்பட்டன.

- மேலும், போக்குவரத்துக் கழகங்களை சிறப்பாக மேம்படுத்தும் பொருட்டு 04.03.2017 அன்று மாநகர் போக்குவரத்துக் கழகம் சார்பில் கண்ணகி நகரில் ஒரு பணிமனையும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) சார்பில் செங்கத்தில் ஒரு பணிமனையும், 08.03.2017 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) சார்பில் சாத்தான்குளத்தில் ஒரு பணிமனையும், 18.03.2017 அன்று தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) சார்பில் பவானியில் ஒரு பணிமனையும் ஆக மொத்தம் நான்கு பணிமனைகள் புதிதாக துவங்கப்பட்டுள்ளன.

***"மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள், "என் எண்ணங்கள் மக்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன, என்னுடைய செயல்பாடுகள் மக்களை மையப்படுத்தியே அமைந்திருக்கிறது" என்பார்கள். "ஏழைகள் ஏழைகளாகவே இருந்து விடக்கூடாது. அவர்களுடைய நிலை உயர வேண்டும். அதற்காகவே அல்லும் பகலும் நான் உழைத்து வருகிறேன்" என்று கூறி, தன்னைப் பின்பற்றுகிறவர்களையும் மக்களுக்காக உழைக்க ஊக்கப்படுத்தியவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களிடம் விட்டுச் சென்ற மக்கள் பணிகள் அனைத்தையும் நாங்கள் நிறைவேற்றி விசுவாசமாக நடந்து கொள்வோம்."***

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

## மாற்றுத்திறனாளிகள் துறை



- மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்திற்கான புதிய கட்டடம்.
- ரூ. 3.74 கோடி செலவில், 03.05.2017 அன்று சென்னை காமராஜர் சாலையில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் செவித்திறன் குறைபாடுடையோருக்காக அரசு சிறப்பு பள்ளி ரூ.1.16 கோடி செலவில் 03.05.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டது.
- 16.03.2017 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2017–2018ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட கீழ்க்கண்ட அறிவிப்புகள் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:–
- தொழுநோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்பு உதவித் தொகையினை ரூ.1000/–லிருந்து ரூ.1500/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- பார்வைத் திறன் குறைந்த மற்றும் கை, கால் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊர்திப்படி ரூ.1000/– தொகையினை, செவித்திறன் பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கும் நீட்டித்து வழங்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 1000 மாற்றுத் திறனாளிகளுக்கு இயந்திரம் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி ரூ.6.5 கோடி செலவில் வழங்க அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- பார்வைத் திறன் குறையுடையோருக்கு நவீன மடக்கு குச்சிகள் 10000 நபர்களுக்கு ரூ.3.16 கோடி செலவில் வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.
- திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக அனைத்து மாவட்டங்களிலும் 10000 மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.5 கோடி செலவில் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியத்திற்கு புதிய நிர்வாகிகள் நியமனம் செய்து ஆணை.

❖ ❖ ❖

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை



- 2015ஆம் ஆண்டிற்கான சதுரங்கப் போட்டியில் மகளிர் இண்டர்நேஷனல் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி. G K மோனிஷா அவர்களுக்கு ரூ.3 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- 2016ஆம் ஆண்டில் ஈரானில் நடைபெற்ற 4ஆவது ஆசிய இளையோர் கபாடி வாகையர் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த செல்வி I.பவித்ரா மற்றும் செல்வி N.நதியா ஆகியோருக்கு ரூ.6 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- எட்டாவது இந்திய சர்வதேச ரெகாட்டா மற்றும் 2016–2017 ASAF இளைஞர் படகோட்டுதல் கோப்பைக்கான போட்டிகளை நடத்துவதற்காக தமிழ்நாடு படகோட்டுதல் சங்கத்திற்கு ரூ.25 இலட்சம் நிதி உதவி ஒப்பளிப்பு.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் இளநிலை உடற்கல்வி பட்டப்படிப்பிற்கான ஒரு இணை பேராசிரியர் மற்றும் 3 உதவி பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கம்.
- 2016ஆம் ஆண்டில் பிரேசில் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற திரு. மாரியப்பன் அவர்களின் பயிற்சியாளர் திரு. T. சத்தியநாராயணா அவர்களுக்கு ரூ.30 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- 2016ஆம் ஆண்டில் வியட்நாமில் நடைபெற்ற 5ஆவது கடற்கரை ஆசிய கபாடி போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த செல்வி எஸ்.அந்தோணியம்மாள் அவர்களுக்கு ரூ.5 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- ஆசிய தடகள வாகையர் போட்டியில் 1ஆவது, 2ஆவது மற்றும் 3ஆவது இடம் பெறும் நபர்களுக்கு முறையே ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.2 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை அறிவிப்பு.
- 2010ஆம் ஆண்டில் பங்களாதேஷ் டாக்காவில் நடைபெற்ற 11ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களின் பயிற்சியாளர்களுக்கு ரூ.1,21,500/– உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- 2016ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் நடைபெற்ற உலக கோப்பை கபாடி வாகையர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற திரு. D. சேரலாதன் அவர்களுக்கு ரூ.50 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.
- 2016ஆம் ஆண்டிற்கான சதுரங்கப் போட்டியில் இண்டர்நேஷனல் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. சிவ மகாதேவன் அவர்களுக்கு ரூ.3 இலட்சம் உயரிய ஊக்கத் தொகை ஒப்பளிப்பு.

❖ ❖ ❖

“மக்களால் இந்த அரசு
மக்களுக்காகவே இந்த அரசு”

மாண்புமிகு புரட்சித்தலைவி
**அம்மா** அவர்கள்